Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 132 • 25.02.2018



மாற்று தலைமைக்கு
மறுத்த விக்னேஸ்வரன்!



# பிரபாகரனை காட்டிக் கொடுத்தது தளபதி பானு!

கஜேந்திரகுமாருக்கு அனுப்பப்பட்ட இரகசிய தூது!

கருணா படித்த பாடசாலையில் ஹெட்மாஸ்டரே பிரபாகரன்தான்!

இரவு விருந்தில் குறிவைக்கப்பட்ட தளபதி!



# மைத்திரியை பணிய வைக்க ரணில் கசியவிட்ட ஒரு வரி செய்தி!



New
V.M.K
JEWELLERY
வீ.எம்.கே. ஜூவல்வரி
Dealers in 22kt. Gold Jeweller
No: 80/30 Kasthuriar Road, jaffna
Tel:021 2222515 - 021 7201117 - 0777 849369

கிளை நிறுவனம்
வீ.எம்.கே. ஜ்வல்லரி
V.M.K JEWELLERY
Manufacturers of Gold Jewels
Kandy Road, Chavakachcheri
Tel:021 2271616 - 0777 849369









coustomer is king



# ராஜிவ்வை கொல்ல புலிகள் பயன்படுத்திய முக்கிய துரும்பு!





## ராஜிவ் காந்தி கொலை 21
### புலிகள் சிக்கிய கதை

கே.ராகோத்தமன்

வாழப்பாடியின் எச்சரிக்கை அர்த்தமில்லாததில்லை. ஸ்ரீபெரும்புதூரில் ராஜிவ் எங்கே தங்குவார்?

மரகதம் சந்திரசேகர், ஒரு சேட்டு வீட்டில் ராஜிவ் தங்க ஏற்பாடு செய்திருந்தார். யாரோ ஒரு நபரின் வீடு! அவர் யார், அவர் வீட்டில் ஏன் தங்கவேண்டும், அந்த இடத்தின் பாதுகாப்பு எப்படி என்று எதையும் ராஜிவ் கேட்கவில்லை.

'ஆன்ட்டி'யின்மீது அவருக்கு இருந்த அன்பும் நம்பிக்கையும் அப்படிப்பட்டது.

இந்த விஷயம் சற்று வியப்பாக இருக்கலாம். ஆனால் ராஜிவ் குடும்பத்துக்கும் மரகதம் சந்திரசேகருக்கும் இடையே இருந்த நெருக்கத்தை நான் 1977ம் ஆண்டிலிருந்தே அறிவேன். பணியின் தொடக்க காலத்திலிருந்தே சி.பி.ஐயில் பணியாற்றி வந்தவன் நான்.

அப்போது, டெல்லியில் எனக்கு வேலை. சி.பி.ஐயின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் உதவி இயக்குநராக வி.ஆர். லட்சுமி நாராயணன் ஐ.பி.எஸ். அவர்கள் இருந்த சமயம் அது.

மத்தியில் ஜனதா அரசு வந்திருந்த புதிது. முந்தைய இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ் அரசின் ஊழல்கள், சஞ்சய் காந்தி சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீதான குற்றச்சாட்டுகள் என்று அடுக்கடுக்காக வழக்குகள் போடப்பட்டு விசாரணை நடந்துகொண்டிருந்த சமயம்.

சம்மன் கொண்டு கொடுப்பதற்காகவும் வேறு ஏதேனும் சந்தேகம் கேட்க வேண்டியிருப்பின் கேட்டுப் பெறுவதற்காகவும் அப்போது அடிக்கடி இந்திரா காந்தியின் வீட்டுக்கு நான் போகவேண்டியிருந்தது.

இந்திரா காந்தி, ராஜிவ் காந்தி, சஞ்சய் காந்தி, சோனியா காந்தி, மேனகா காந்தி என்கிற அந்தக் குடும்ப உறுப்பினர்கள் தவிர, வெளி நபர்கள் யாரும் அந்த வீட்டில் இருக்க மாட்டார்கள்.

கட்சிக்காரர்களோ, வேறு யாருமோ கூட வீட்டுக்கு வருவதில்லை. தவாண் மாதிரி சீனியர் காங்கிரஸ்காரர்கள் வந்தால்கூட வாசல்பக்க அறையில் வெறுமனே உட்கார்ந்திருக்க வேண்டியதுதான். ஆனால் மரகதம் சந்திரசேகர் மட்டும் எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் இந்திரா காந்தியின் 12, வெலிங்டன் ரோடு வீட்டுக்கு வருவார்.

அனைவருடனும் சகஜமாகப் பழகுவார்.

வீடு முழுக்க அவரை ஆன்ட்டி, ஆன்ட்டி என்று கொண்டாடும். இந்திரா காந்தி எப்படிப்பட்ட மூட் அவுட்டில் இருந்தாலும் 'ஆன்ட்டி' வந்துவிட்டால் மட்டும் முகம் மாறிவிடும்.

அனைத்தையும் மறந்து சிரித்துப் பேசுவார். கலகலப்பாகிவிடுவார். கட்சித் தொடர்புகளுக்கு அப்பால், தனிப்பட்ட முறையில் மரகதம் சந்திரசேகர் அந்தக் குடும்பத்துடன் இரண்டறக் கலந்தவர்.

அவருக்கு நேரு குடும்பத்துக்குப் பிறகுதான் மற்ற யாருமே.

அத்தனை அன்பு, விசுவாசம், பாசம். அப்படிப்பட்ட மரகதம் சந்திரசேகரைக் குறிவைப்பதுதான் தங்கள் திட்டம் வெற்றியடையச் சரியான வழி என்று சிவராசன் தீர்மானித்தார்.

ஒருபுறம் லலித் சந்திரசேகரின் இலங்கை மனைவியை எப்படியாவது அணுகி, மரகதம் சந்திரசேகருடன் அறிமுகம் செய்துகொள்ள வழி தேடிக்கொண்டிருந்தபோதே மறுபுறம் டரியல் பீட்டர்ஸ் என்றொரு நபர் மூலம் லலித் சந்திரசேகரை நெருங்கவும் முயற்சி செய்தார்கள்.

இந்த டரியல் பீட்டர்ஸின் மனைவி ஒரு மத்திய அரசு ஊழியர்.

திருமங்கலம் சி.பி.டபிள்யூ குவார்ட்டர்ஸில் குடியிருந்தார்கள். சின்ன சாந்தனின் இடைவிடாத ஆராய்ச்சிகளின் மூலம் டரியள் பீட்டர்ஸுக்கும் லலித் சந்திரசேகருக்கும் இடையே உள்ள நட்பு தெரிய, நேரே டரியலைச் சந்தித்து, மயக்கும் விதமாகப் பேசி, லலித்தைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றார்கள்.

'ஐயா நாங்கள் இலங்கை அகதிகள். ஈ.பி.ஆர்.எல்.எஃப் அனுதாபிகள். இந்தியாவில் எங்களுக்கு எல்லாமே ராஜிவ் காந்திதான். அவர் இந்தத் தேர்தலில் கட்டாயம் வெற்றி பெற்று ஆட்சியமைக்க வேண்டும். எங்களால் முடிந்த சிறு தொகையை தமிழ்நாடு காங்கிரசுக்குத் தேர்தல் நிதியாகத் தர விரும்புகிறோம்' என்று சொன்னார்கள்.

லலித் சந்திரசேகர் அவர்களைப் பற்றி தம் தாயார் மரகதம் சந்திரசேகருக்கு எடுத்துச் சொல்லி, சிவராசன் குழுவினரை ஸ்ரீபெரும்புதூருக்குச் சென்று தன் தாயாரைச் சந்திக்கச் சொல்லி அனுப்பிவைத்தார்.

எதிர்பார்த்தது அதைத்தானே? எனவே சந்தோஷமாகப் புறப்பட்டுப் போனார்கள். ஸ்ரீபெரும்புதூரில் மரகதம் சந்திரசேகர் வீட்டில் அவர்களுக்கு லதா பிரியகுமாரின் அறிமுகம் கிடைத்தது.

அவர் ஆன்ட்டியின் மகள். அவர் மூலம் அவரது சிநேகிதி லதா கண்ணனின் தொடர்பும் கிடைத்தது.

மரகதம் சந்திரசேகரிடம் தேர்தல் நிதி என்று சொல்லி ஐந்து லட்ச ரூபாய் பணத்தைக் கொடுத்துவிட்டு, லதாவிடம் 'பொதுக்கூட்டத்தில் ராஜிவுக்கு மாலை போட வாய்ப்பு'க் கேட்டார்கள்.

லலித் சந்திரசேகர், 'நீங்கள் கூட்டத்துக்கு வாருங்கள். லதா கண்ணன் உங்களைத்தலைவர் அருகே அழைத்துச் செல்வார்' என்று சொன்னார்.

ஐந்து லட்ச ரூபாய் தேர்தல் நிதி கொடுத்த இலங்கை அகதிகளின் இந்தச் சிறு விருப்பத்தை நிறைவேற்றினால் என்ன?

ஆனால் அவரோ, மரகதம் சந்திரசேகரோ, லதா பிரியகுமாரோ அந்தக் கூட்டத்தில் இந்த வேலையைச் செய்ய முடியாது. கட்சி ஊழியர்கள் என்ற வகையில் அவர்களுக்கும், வேட்பாளர் என்ற வகையில் மரகதம் சந்திரசேகருக்கும் ஏகப்பட்ட டென்ஷன் இருக்கும். வேலைகள் இருக்கும். எனவே லதா பிரியகுமாரின் உதவியாளரான லதா கண்ணனிடம் இந்தப் பொறுப்பை அளித்துவிட்டு, சிவராசனுக்கு விடைகொடுத்தார்கள்.

இது எத்தனை பெரிய அபாயத்தில் முடியப்போகிறது என்பது அப்போது மரகதம் சந்திரசேகருக்குத் தெரியாது.

ராஜிவ் காந்தியும் அவரது குடும்பத்தாரும் அவருக்குத் தன்னுடைய குடும்பத்தினரைவிட முக்கியமானவர்கள்.

ராஜிவ் படுகொலை என்பதை அவரால் கனவில்கூட நினைத்துப் பார்க்க முடியாது. அப்படியொரு நோக்கத்துடன்தான் தன்னிடம் வந்திருக்கிறார்கள் என்று தெரியுமானால் நடந்திருப்பதே வேறு! ஆனால் வேறு வழியில்லை. வந்தவர்களின் நோக்கம் அதுதான். தன்னையறியாமல் அதற்கு வழி செய்துகொடுப்பவராக மரகதம் சந்திரசேகர் ஆகிப்போனதை வேறெப்படிச் சொல்ல முடியும்? விதி!

(தொடரும்)


மாலையுடன் தனு, அருகில் சிவராசன்


இந்திராகாந்தியின் வீடு

# கஜேந்திரகுமாருக்கு அனுப்பப்பட்ட இரகசிய தூது... மைத்திரியை பணிய வைத்த ரணிலின் இரகசிய ஆயுதம்!



கஜேந்திரகுமார் - கஜேந்திரன்



**கருடன் பக்கம்**

கருடன்

கருடர் கொஞ்சம் இளைத்திருந்தார். காரணத்தை கேட்டோம். “நாட்டின் அனைத்து பக்கங்களிலும் குழப்பங்களை ஏற்படுத்தி விட்டது உள்ளூராட்சி தேர்தல். வாக்களித்து விட்டு செய்திக்காக காத்திருக்கிறார்கள் மக்கள். மக்களின் முடிவுகளால் திண்டாடிப்போய், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முடிவெடுக்கிறார்கள் அரசியல்வாதிகள். எல்லா திசைகளிலும் ஓடியோடி அதையெல்லாம் கண்காணிப்பதென்றால் சும்மாவா? பத்து நாள் உட்காரமால் பறந்து கொண்டிருந்தேன்” என்றார்.

“ஓஹோ... விசயம் அதுவா? சரி விசயத்தை சொல்லுங்கள்”

“முதலில் வடக்கு விசயங்களை சொல்கிறேன். வடக்கில் இப்போது அரசியல் நிலவரம் ஓரளவு அமைதியாகிவிட்டது. ஆனால் அடுத்தவாரம் உள்ளூராட்சிசபைகள் கூடும்போது பெரும் களேபரம் காத்திருக்கிறது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு அதிக ஆசனங்களையெடுத்த சபைகளின் தவிசாளர் விபரங்களை அறிவித்துவிட்டது. இதில் இரண்டு சம்பவங்களை குறிப்பிட வேண்டும். முதலில் யாழ் மாநகரசபையின் மேயரை அறிவித்தார்கள். ஆனல்ட்தான் மேயர் என்பது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்டதை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். இதற்கு பின்னர் வேறு எந்த முயற்சி செய்தும் பலனிருக்காது. அதனால்தான் சொலமன் சிறிலை மேயராக்கும் முயற்சி வெற்றியளிக்கவில்லை.

யாழ் மாநகரசபைக்கு தேர்வானவர்கள் மார்ட்டின் வீதி தமிழரசுக் கட்சி அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு, ஆனல்ட்தான் மேயர் என அறிவிக்கப்பட்டது. சொலமன் சிறிலை மேயராக்க வேண்டுமென சிறிதரன் கடும் முயற்சி செய்தார். சரவணபவனுக்கும் அதில் விருப்பமிருந்தது. ஆனால் ஆனல்ட்டை முதல்வராக்குவதில் சுமந்திரன் அதிக உறுதியாக இருந்தார்.

அன்றைய கூட்டத்தில் சிறில் பேசும்போது, ஒரு கட்டத்தில் குரல் உடைந்து அழும் நிலையில் தழுதழுத்த குரலில் பேசினார். தமிழரசுக்கட்சி தன்னை ஏமாற்றிவிட்டதாக குற்றம் சாட்டினார். ‘தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் தான் இரகசிய பேச்சு நடத்தி வருவதாக சில தலைவர்கள் பேசிக்கொள்கிறார்கள். எனது உடலில் ஓடுவது தமிழரசுக்கட்சி இரத்தம். இறுதிவரை தமிழரசுக்கட்சியிலேயே இருப்பேன்’ என்றார். இந்த சந்திப்பு முடிந்ததும், வடக்கு அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்துடன் பேசும் போதும் சிறில் கண்ணீர்விட்டு அழுதுள்ளார்.

### மன்னார் கூட்டத்தில் மல்லுக்கட்டல்

மன்னார் நகரசபை தலைவரை தேர்வு செய்வதிலும் குழப்பம் ஏற்பட்டது. தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பங்காளிகளிற்கிடையில் சபைகளை பகிர்ந்த போது, மன்னார் ரெலோவிற்கு வழங்கப்பட்டது. அப்போது தமிழரசுக்கட்சிக்கே மன்னார் நகரசபை தரவேண்டுமென, அந்த கட்சியின் மன்னார் எம்.பி சாள்ஸ் நிர்மலநாதன் விடாப்பிடியாக நின்று குழப்பத்தை ஏற்படுத்தினார். அந்த சமயத்தில் அவர் சொன்னார் “நான் சொன்னால்தான் மன்னார் மக்கள் வாக்களிப்பார்கள்” என. ஆனால் தமிழரசுக்கட்சி தலைமையும் அதை ஏற்க மறுத்தது.

15ம் திகதி மன்னார் நகரசபை தலைவரை தேர்வு செய்யும் கூட்டத்தில், மீண்டும் சாள்ஸ் நிர்மலநாதன் குழப்பத்தை ஏற்படுத்தினார். ஏற்கனவே பங்காளி கட்சிகளிற்குள் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டை மீற முடியாதென மாவை சேனாதிராசா சொல்லியும் சாள்ஸ் நிர்மலநாதன் கேட்கவில்லை. இந்த குழப்பங்களிற்கிடையில் ரெலோவின் தெரிவாக ஞானப்பிரகாசம் ஜெராட் அறிவிக்கப்பட்டார். அதன்பின் ஜெராட்டுடன் தர்க்கப்பட ஆரம்பித்தார் சாள்ஸ் எம்.பி. ஒரு கட்டத்தில் “நீங்கள் இந்த எலக்சனில் உதயசூரியனிற்குத்தானே வேலை செய்தீர்கள். அது எமக்கு தெரியும்” என ஜெராட் கூறினார். இந்த தர்க்கம் கைகலப்பர்க மாறுமோ என அச்சப்படுமளவிற்கு பெரிதாக இருந்தது”.

“தமிழ் தேசிய கூட்டமைப்பு தவிசாளர்களை நியமிக்கிறது. ஆனால் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் அந்த சபைகளிற்கு தவிசாளர்களை அறிவிக்கிறதே?”

“ஒரு அரசியல் உத்தியாக அதை செய்கிறார்கள். சபைகளில் யாரும் தனித்து ஆட்சியமைக்க முடியாதென்ற நிலைமையேற்பட்டதும், த.தே.கூ, த.தே.ம.மு, ஈ.பி.டி.பி ஆகிய மூன்றும் புரிந்துணர்வின் அடிப்படையில் செயற்பட்டு, சபைகளை குழப்பாமல் நடத்த வேண்டுமென்ற அபிப்பிராயத்தை த.தே.கூட்டமைப்பு ஏற்படுத்தியது. இதற்காக வர்த்தகர் சங்கம் சமரச முயற்சிகளை செய்தது. ஆனால் வர்த்தகர் சங்கத்தின் பின்னால் தமிழரசுக்கட்சி இருக்கிறதென்ற அபிப்பிராயம் பரவலாக உள்ளது.

### கஜேந்திரகுமாருக்கு தூது விட்ட சிறிதரன், மாவை

மூன்று கட்சிகளும் புரிந்துணர்வுடன் ஆட்சியமைக்கலாமென்ற அபிப்பிராயம் பொதுமக்களிடம் ஏற்படுவதை த.தே.கூட்டமைப்பு விரும்பியது. ஆனால் இதில் ஒரு அரசியல்பொறியை வைக்க த.தே.ம.முன்னணி விரும்புகிறது. கூட்டமைப்பும், ஈ.பி.டி.பியும் இரகசிய பேச்சின் பின், வெளிப்படையான கூட்டு வைத்திருக்கிறார்கள் என்ற அபிப்பிராயத்தை மக்களிடம் ஏற்படுத்த விரும்புகிறார்கள். கூட்டமைப்பிற்கு சவால்விடக்கூடிய சபைகளில் முன்னணியும் தவிசாளர்களை அறிவித்தால், வாக்கெடுப்பு வரை செல்லலாம். அப்படியொரு நிலைமை வந்தால், ஈ.பி.டி.பியின் ஆதரவுடனேயே கூட்டமைப்பு ஆட்சியமைக்கலாம். அது கூட்டமைப்பிற்கான ஆதரவை மேலும் வீழ்ச்சியடைய செய்யுமென முன்னணி நினைக்கிறது. கூட்டமைப்பிற்கும் இது நன்றாக தெரியும்.

ஈ.பி.டி.பியுடன் கூட்டு வைப்பதில் பல தலைவர்களிற்கு விருப்பமில்லை. அவர்கள் கஜேந்திரகுமாரை சந்தித்து பேசி, ஒரு இணக்கப்பாட்டிற்கு வர முயற்சிக்கிறார்கள்.

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

கிளிநொச்சி எம்.பி சிறிதரன் கடந்த வாரம் இதற்கான முயற்சியொன்றை செய்தார். தமிழ் மக்கள் பேரவையின் முக்கியஸ்தரான வைத்தியர் ஒருவரை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியிருக்கிறார். கஜேந்திரகுமாரை சந்தித்து பேச மாவை சேனாதிராசாவும், அவரும் விரும்பவதாகவும், அதற்கான ஏற்பாட்டை செய்து தருமாறும் கேட்டிருக்கிறார். வைத்தியரும் இந்த தகவலை கஜேந்திரகுமாரிடம் தெரிவித்திருக்கிறார். ஆனால், இப்போது அவர்களை சந்திக்க விரும்பவில்லையென கஜேந்திரகுமார் அதை மறுத்துவிட்டார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியை வீழ்த்த வேண்டுமென்பதில் தமிழ் தேசிய கூட்டமைப்பை விட, ஈ.பி.டி.பிதான்

**“உள்ளூராட்சி தேர்தலிற்கு முன்னரே முதலமைச்சர் தலைமையில் கூட்டணியொன்றை அமைக்க தமிழ் தேசிய மக்கள் முன்னணி விரும்பியது. ஆனால் அதில் முதலமைச்சர் ஈடுபாடுகாட்டவில்லை. கஜேந்திரகுமார் தரப்பு வலியுறுத்தி கேட்டும், விக்னேஸ்வரன் அதற்கு சம்மதிக்கவில்லை. அதற்கு பின்னர் உதயசூரியன் கூட்டணி அமைந்தது.**

அதிக அக்கறை காண்பிக்கிறது. தமிழரசியலில் இதுவரை ஈ.பி.டி.பிதான் இரண்டாமிடத்தில் இருந்தது. முன்னணியின் வளர்ச்சி அவர்களை மூன்றாமிடத்திற்கு தள்ளியுள்ளது. அதனால் எப்படியும் முன்னணியை வீழ்த்த வேண்டுமென ஈ.பி.டி.பி நினைக்கிறது.

யாழ் மாநகரசபையில் தமிழ் தேசிய கூட்டமைப்பை ஆதரிப்பதாக முன்னர் அறிவித்த ஈ.பி.டி.பி, திடீரென அதிலிருந்து பின்வாங்கியது இந்த நோக்கத்துடன்தான். தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மணிவண்ணனை ஆதரித்து, அவரை மேயராக்கினால், ஈ.பி.டி.பியுடன் மணிவண்ணன் மேயரானார் என்ற அபிப்பிராயம் முன்னணிக்கு எதிர்மறையான அபிப்பிராயத்தையே ஏற்படுத்துமென நினைக்கிறார்கள்”.

“கஜேந்திரகுமாரும், கஜேந்திரனும் அண்மையில் முதலமைச்சரை சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார்களே. என்ன பேசினார்கள்?”

“முதலமைச்சரை சந்தித்து விட்டு வெளியில் வந்த கஜேந்திரகுமார் சம்பிரதாயமாக சில வார்த்தைகளை பேசினார். ஆனால் அந்த பேச்சில் பேசப்பட்டவை வேறு விசயங்கள்”

**முதல்வரை அழைத்த கஜேந்திரகுமார்!**

“என்ன பேசினார்கள்?”

“உள்ளூராட்சி தேர்தலிற்கு முன்னரே முதலமைச்சர் தலைமையில் கூட்டணியொன்றை அமைக்க தமிழ் தேசிய மக்கள் முன்னணி விரும்பியது. ஆனால் அதில் முதலமைச்சர் ஈடுபாடு காட்டவில்லை. கஜேந்திரகுமார் தரப்பு வலியுறுத்தி கேட்டும், விக்னேஸ்வரன் அதற்கு சம்மதிக்கவில்லை. அதற்கு பின்னர் உதயசூரியன் கூட்டணி அமைந்தது. தமிழ் தேசிய பேரவையென்ற பெயரில் கஜேந்திரகுமார் தரப்பு களமிறங்கியது. தேர்தலிற்கு முன்னரும் ஒருமுறை விக்னேஸ்வரனை சந்தித்தார் கஜேந்திரகுமார். தேர்தல் பிரசாரத்தில் முதலமைச்சரின் படத்தை பாவிக்க அனுமதி கேட்டார்கள். ஆனால் முதலமைச்சர் அப்போது சம்மதிக்கவில்லை.

கடந்தவார சந்திப்பிலும், மாற்று தலைமையை ஏற்று தமது அணிக்கு தலைமையேற்குமாறே வலியுறுத்தியுள்ளார்கள். முன்னர் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேர்தல்களில் நல்ல பெறுபேறுகளை பெறவில்லை. இம்முறை தேர்தலில் கணிசமான மக்கள் முன்னணிக்கு வாக்களித்த பின்னர், முதலமைச்சரை சந்தித்து தம்முடன் இணையுமாறு கோரியுள்ளனர். ஆனால் முதலமைச்சர் மறுத்துவிட்டார்“

“முதலமைச்சரின் முடிவிற்கு என்ன காரணம்?”


“மாற்று அணியொன்றிற்காக முதலமைச்சர் நீண்டகாலமாக காத்திருக்கிறார். அனேகமாக அது மாகாண சபை தேர்தலை நெருங்கியதாக உருவாகலாம். தமிழ் தேசிய மக்கள் முன்னணி உருவாக்கும் கூட்டில் முதலமைச்சரிற்கு அவ்வளவு நம்பிக்கையில்லை. புதிய அணியொன்றைத்தான் அவர் உருவாக்குவார். தனது தயக்கம், த.தே.ம.முன்னணிக்கு வாய்ப்பாக இருக்கிறதென்பதையும் அவர் புரிந்து வைத்திருக்கிறார். விரைவில் இதுபற்றி முடிவெடுப்பார்”

“சரி... தெற்கு நிலவரங்கள் எப்படியிருக்கின்றன?”

“தெற்கு அரசியலை பற்றி கடந்த வாரம் நிறைய தகவல்கள் குறிப்பிட்டிருந்தேன். அதற்கு பின்னர் இன்றுவரை ஒவ்வொருநாளும் நிலவரம் மாற்றமடைந்து கொண்டேயிருந்தது. அதனால் முக்கிய சில விசயங்களை மட்டும் சொல்கிறேன்.

இலங்கை விசயத்தில் அமெரிக்கா, இந்தியா, சீனா, பிரித்தானியா ஆகிய நாடுகள் நேரடியாக அக்கறையெடுத்துள்ளன. சீனா மஹிந்த ராஜபக்ச தரப்பையே ஆதரிக்குமென இருந்த நம்பிக்கையை மீறி, நல்லாட்சிக்கு ஆதரவான நிலையையே எடுத்தது. அதிலும், ரணில் பிரதமராக தொடர்வதை விரும்பியது.

ஆனால் சுதந்திரக்கட்சிக்குள் மைத்திரிக்கு நெருக்கடி. ஐ.தே.கவுடன் கூட்டரசை தொடரும்வரை தமக்கு எதிர்காலமில்லையென கட்சி பிரமுகர்கள் பலர் நினைக்கிறார்கள். அதையும் மீறி கூட்டரசை தொடர மைத்திரி முடிவெடுத்தால், அவருடன் பத்து வரையான எம்.பிக்கள்தான் நிற்பார்கள். அதனால்தான் சுதந்திரக் கட்சி அரசாங்கம் அமைக்க மைத்திரி சம்மதித்தார்.



பாலித தெவரபெரும

**பசிலும் களத்தில்!**

சுதந்திரக்கட்சி அரசாங்கமொன்றை அமைக்க, அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால ஆகியோர் திரைமறைவில்

தொடர்ச்சி 6-ம் பக்கம்...

# தீபம்

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்

**தொடர்புகளிற்கு**

ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563

அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562

செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com

5-ம் பக்க தொடர்ச்சி

கடுமையான முயற்சியெடுத்தனர். சுசிலுக்கு ஏற்கனவே மஹிந்த அணியுடன் நல்ல உறவிருந்தது. அதனால் அவரது முயற்சிக்கு உடனடி பலன்கிடைத்தது. மஹிந்த அணியுடன் பேசி, அங்கிருந்து ஒரு குழுவை அழைத்து வந்து மைத்திரியுடன் பேச வைத்தார். நாமல் ராஜபக்ச, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில இந்த குழுவில் இருந்தனர்.

இந்த சமயத்தில் பசில் ராஜபக்சவும் ஒரு நகர்வை ஆரம்பித்தார். சுதந்திரக்கட்சி அரசாங்கம் அமைக்க, ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். பசிலின் பேச்சுவார்த்தையில்தான், ஐ.தே.கவிலிருந்து சிலரை கழற்றியெடுக்கலாமென்பதை சுதந்திரக்கட்சி அறிந்து கொண்டது.

கொழும்பிலுள்ள இந்திய தூதரக அதிகாரியொருவர் பசிலுடன் நல்ல உறவில் இருக்கிறார். அவர் மூலம் இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரிகளுடன் பசில் சில சுற்று பேச்சுக்கள் நடத்தினார். ஆரம்பத்தில் இந்தி அதிகாரிகள் பசிலின் பேச்சில் ஆர்வமாக இருப்பதைபோல காட்டினாலும், பின்னர் ஒதுங்கியிருக்க தொடங்கினார்கள். தனது முயற்சியை இந்தியா ரசிக்கவில்லையென்பதை தெரிந்ததும் பசில் ஒதுங்கிவிட்டார். இதற்கு பின்னர்தான் சுசில் பிரேமஜயந்த முன்னிலைக்கு வந்தார்.

20 எம்.பிக்களின் ஆதரவை தம்மால் வெளியிலிருந்து திரட்டி தர முடியுமென்றுதான் சுசில், திலங்க நம்பினார்கள். மைத்திரிக்கு இருதலை கொள்ளியின் நிலை. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அதிருப்தியாளர்கள் எதிர்காலத்தில் எப்படி முடிவெடுப்பார்கள் என்பதை தெரிந்து கொள்ளாமல், கூட்டரசை கைவிட முடியாது. ஆனால் கூட்டரசை தொடர்ந்தால் தனது முகாம் காலியாகிவிடும்.

இதனால்தான் ரணில் விக்கிரமசிங்கவை நீக்கிவிட்டு, கரு ஜயசூரியவை பிரதமராக்கும் முயற்சியொன்றை ஆரம்பித்தார். சுதந்திரக்கட்சி அரசாங்கம் அமைத்தால் நிமல் சிறிபாலடி சில்வாவை பிரதமராக்க மைத்திரி, மஹிந்த அணிகள் உடன்பட்டன. நிமல் எந்த தரப்பிற்கும் பிரச்சனையில்லாதவர் என்பதால், அவருக்கு எதிர்ப்பு இருக்கவில்லை. பிரதமர் பதவிக்கு தனது பெயர் அடிபட தொடங்கியதும், நிமல் பூசை வழிபாடுகளில் அதிகம் ஈடுபட்டாராம். அதிர்ஸ்டம் தரும் பூசைகள் அவை.

### நிமலை எதிர்த்த அமைச்சர்கள்

நிமலை பிரதமராக்கினால் கூட்டு எதிரணியும் ஆதரவு தருவோம் என்றுதான் சொல்லியிருந்தார்கள். மைத்திரியை பலமுறை அவர்கள் சந்தித்து பேசியிருந்தார்கள். சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை வெளியிலிருந்து ஆதரிப்பதென்பதுதான் கூட்டு எதிரணியின் முடிவு. ஆனால் மைத்திரி அதை ஏற்கவில்லை. கூட்டு எதிரணியினர் அமைச்சு பொறுப்பேற்காவிட்டால் மக்கள் நம்பபோவதில்லையென கூறினார். அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சு பதவிகளை ஏற்றால், இதுவரை செய்து வந்த பிரசாரங்களிற்கு மாறாக நடப்பதாக அமைந்துவிடும் என்ற தயக்கம் கூட்டு எதிரணிக்கு வந்தது. இதுதான் அவர்கள் பின்வாங்கிய முதலாவது புள்ளி"

"சுதந்திரக்கட்சி முழுமையாக இந்த இணைவை ஆதரித்ததா?"

"அதுதான் இல்லை. கட்சியின் செயலாளரும், விவசாய அமைச்சருமான துமிந்த திசநாயக்கா உள்ளிட்ட ஒரு அணி இதற்கு தயாராக இல்லை. நிமல்சிறிபாலடி சில்வாவை பிரதமராக நியமிக்கக்கபடுவதை அவர்கள் விரும்பவில்லை. நிமலை பிரதமராக்க சுதந்திரக்கட்சிக்குள் கையெழுத்து வாங்கப்பட்டது. அதில் அமைச்சர்கள் மஹிந்த சமரசிங்க, மஹிந்த அமரவீர, சரத் அமுனுகம போன்றவர்கள் கையெழுத்திடவில்லை.

கூட்டு எதிரணியுடன் கைகோர்ப்பதற்கு ஆரம்பம் முதலே துமிந்த திசநாயக்க கடும் எதிர்ப்பை காட்டினார். அவருக்குமஹிந்தராஜபக்சவுடன் இணைந்து அரசியல் செய்ய முடியாது. அவரது தந்தை பேர்ட்டி பிரேம்லால் திசநாயக்காவின் மரணத்திற்குகாரணம் மஹிந்தவின் நடவடிக்கைகளே என நம்புகிறார்.



துமிந்த திசநாயக்க

**கூட்டு எதிரணியுடன் கைகோர்ப்பதற்கு ஆரம்பம் முதலே துமிந்த திசநாயக்க கடும் எதிர்ப்பை காட்டினார். அவருக்கு மஹிந்த ராஜபக்சவுடன் இணைந்து அரசியல் செய்ய முடியாது. அவரது தந்தை பேர்ட்டி பிரேம்லால் திசநாயக்காவின் மரணத்திற்கு காரணம் மஹிந்தவின் நடவடிக்கைகளே என நம்புகிறார்.**

உள்ளூராட்சிமன்ற தோல்வியின் பின், அமைச்சர்கள் மைத்திரியை சந்தித்து பேசி, கூட்டு எதிரணியுடன் கைகோர்க்க வேண்டுமென கேட்டுக் கொண்டனர். அவர்களின் கருத்தை ஜனாதிபதி ஏற்கும் நிலைக்கு போன சமயத்தில்,"ஆடை அணிந்து கொண்டு அவர்களுடன் கூட்டு வைப்பதா? வெட்கமில்லையா?" என முன்னொரு முறை மைத்திரி சொன்ன வசனத்தை அந்த இடத்தில் துமிந்த சொல்லி, மைத்திரியை சங்கடப்படுத்தியுள்ளார். கூட்டு எதிரணியின் அபிப்பிராயங்கள் மேலோங்கி, தேசிய அரசிலிருந்து சுதந்திரக்கட்சி வெளியேறலாமென கட்சிக்குள் முடிவெடுத்தபோது, துமிந்த திசநாயக்கா யாருடைய தொடர்பிலும் இருக்கவில்லை. ஐதேகவுடனான சுதந்திரக்கட்சி செய்த புரிந்துணர்வு உடன்படிக்கையை இரத்தாக்குவதென்றால் கூட, துமிந்தவின் கையெழுத்து தேவையென்கிறார்கள். கட்சி செயலாளரான அவர் கையெழுத்திட்டால்தான் எதையும் செய்யலாம். முக்கியமான நேரத்தில் துமிந்த தொடர்பெல்லைக்கு வெளியில் போனதுதான் சுதந்திரக்கட்சியை ஒரு தெளிவான நிலைமைக்கு கொண்டு வந்திருக்கிறது.

ஆனால், இந்த குழப்பங்கள் ஆட்சிமாற்றம் வரை செல்லுமென மஹிந்த நம்பவில்லை. அரசுக்குள் குழப்பங்களை ஏற்படுத்துவதுதான் அவரது நோக்கம். 19ம் திகதி பாராளுமன்றம் கூடியபோது, காலையில் மட்டும்தான் மஹிந்த பிரசன்னமாகியிருந்தார். இந்த குழப்பம் சீரியசான கட்டத்திற்கு செல்லுமென அவர் நம்பவில்லை.

ஐதேகவில் இருந்து 20 பேரை உருவியெருக்கலாமென சுசில் பிரேமஜயந்த நினைத்திருந்தார். கூட்டு எதிரணிக்கும் தகவல் அனுப்பியிருக்கிறார். அவர்களும் அழைத்துவாருங்கள் என சந்தோசமாக பதிலனுப்பினார்கள். ஐதேகவிலிருந்து எத்தனைபேர் சுசிலுடன் பேசினார்கள் என்று தெரியவில்லை. ஆனால் முக்கியமான கட்டத்தில் எல்லோரும் காலைவாரி விட்டனர். இதனால் சுசில் அதிக சங்கடத்திற்கு ஆளாகியிருக்கிறார். விரைவில் இவர் மஹிந்த அணி பக்கம் தாவலாமென கூறப்படுகிறது.

இதற்குள் ஐ.தே.கவிற்குள்ளும் தலைமைக்கு எதிரான அதிருப்தியாளர் குழு இயங்கியது. விஜேதாச ராஜபக்ச இதில் முக்கியமானவர். கரு ஜயசூரியவை முன்னால் தள்ளிவிட்டது இவர்கள்தான்.

### மைத்திரியை வீழ்த்திய ரணிலின் உத்தி!

19ம் திகதி திங்கள்கிழமை பாராளுமன்றம் கூடும்போது பெரும்பான்மையை நிரூபிக்க சுதந்திரக்கட்சி முயற்சித்துக் கொண்டிருக்க, வார இறுதியில் ஐதேகவும் பெரும்பான்மையை நிரூபிக்க கையெழுத்து வாங்கியது. ஆனால் முக்கியமான பன்னிரண்டு வரையான உறுப்பினர்கள் அதில் கையெழுத்திடவில்லை. பாலித ரங்கே பண்டார, பாலித தெவரபெரும போன்றவர்கள் இதில் அடக்கம். இதனால் ஐதேகவும் பெரும்பான்மையை நிரூபிப்பதில் சிக்கல்பட்டது.

ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக்க மறுத்து வந்த மைத்திரியை வழிக்கு கொண்டுவர, ஐதேக இன்னொரு உத்தியை கையாண்டது. ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர கூட்டு எதிரணி முயற்சிப்பதாக ஒரு தகவல் இருந்து கொண்டிருந்தது. அப்படியொரு பிரேரணை வந்தால், ஐதேகவின் ஒரு தரப்பினர் ஆதரிக்கலாமென ஒரு செய்தியை தமக்கு சார்பான ஊடகங்கள் மூலம் கசியவிட்டனர். இது மைத்திரிக்கு நெருக்கடியை கொடுத்தது. ஐதேகவுடன் அவர் சமரசமானதற்கு இதுவும் ஒரு காரணம்".

"சரி... இரண்டு தரப்பும் எப்படி மௌனமாகின?"

"பிரதமரை பதவிநீக்கலாமா என்ற மைத்திரியின் கேள்விக்கு 16ம் திகதி சட்டமா அதிபர், முடியாதென பதிலளித்திருந்தார். இனி ஆட்ட்த்தில் பலனில்லையென்பதால் மைத்திரி அன்றே பொலன்னறுவவிற்கு தனது வீட்டிற்கு போய்விட்டார்.

18ம் திகதி கொழும்பிற்கு திரும்பிய பின்னர், மீண்டும் பல சுற்று பேச்சுக்கள் நடந்தன. அன்றிரவு மைத்திரியை சந்தித்த ரணில்,"நான் பிரதமர் பதவியை விட்டுத்தர தயாராக இருக்கிறேன். ஆனால் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர் அந்த பதவியில் உட்கார்வதற்கு அனுமதிக்கமாட்டேன்" என கூறியுள்ளார். மஹிந்த ராஜபக்சவை மனதில் வைத்து அவர் அப்படி சொல்லியிருக்கலாம்.

துமிந்த திசநாயக்க அணியின் கையெழுத்தில்லாமல் . சுதந்திரக் கட்சியும் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது. ஐக்கிய தேசியக்கட்சியும் பெரும்பான்மையை நிரூபிப்பதில் சிக்கல்பட்டது. இதனால் ஆட்சி மாற்றத்திற்கு வாய்ப்பில்லை யென்றானது. இரண்டு தரப்பும் மௌனமாகிவிட்டன"

"மஹிந்த ராஜபக்ச அடுத்ததாக என்ன செய்ய போகிறார்?"

"இப்போது செய்வதையே தொடர போகிறார். அதற்கு எந்த சிக்கலும் வரக்கூடாதென்பதில் அக்கறையாக இருக்கிறார். இந்த குழப்பத்திற்குள்ளும் ரணிலிடம் அன்பான வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறார்"

"என்ன வேண்டுகோள்?"

"அமைச்சரவை மாற்றத்தின்போது, சரத்பொன்சேகாவிற்கு சட்டம்ஒழுங்கு அமைச்சு போய்விடக்கூடாதென்பதில் கவனமாக இருந்தார். சரத்திடம் அவை போனால், தனது குடும்பம் நிம்மதியாக இருக்க முடியாதென்பது மஹிந்தவிற்கு தெரியும். அதனால்தான் இந்த ஏற்பாடு. இந்தவாரம் இன்னும் சில தகவல்கள் வரும். அடுத்தவாரம் அவற்றை சொல்கிறேன்" என விடைபெற்றார் கருடர்.



# புலிகளை காட்டிக்கொடுத்தது தளபதி பானு!

## பங்கருக்குள் அடைத்து வைத்திருந்தாரா பிரபாகரன்?

### யுத்தத்தின் இறுதி நிமிடங்கள்.... கட்டுக்கதைகளும் உண்மைக்கதைகளும்

மினி தொடர் 4

இறுதியுத்தம் பற்றி உலாவிக் கொண்டிருக்கும் "உல்டா" கதைகளின் எண்ணிக்கை பல நூறு. பிரபாகரன் மாதிரி ஒன்பது பேர் இருந்தார்கள் என்பதில் தொடங்கி, பிரபாகரன் அம்பூலன்ஸில் தப்பிச்சென்றார் என்பது வரை அவை முடிவற்று நீண்டுகொண்டிருக்கின்றன. இந்த கட்டுக்கதைகளை வெளிநாடுகளில் உள்ள சில மீடியா ஆட்களும் தமக்கு வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்கிறார்கள். யுத்த காலத்தில் இந்த மீடியாக்கள், இப்படியான கட்டுக்கதைகளை புலம்பெயர் நாடுகளில் பரப்பி நன்றாக காசு பார்த்துக் கொண்டார்கள்.

யுத்தத்தின் பின்னர் இலங்கையிலும் இப்படியான உல்டா கதைகளை பரப்பி காசு பார்க்க முயன்றாலும், யுத்தத்திற்குள் வாழ்ந்த மக்களிற்கு உண்மையெது, உல்டா எதுவென்பது தெரியும்தானே.

இறுதியுத்தம் பற்றி உலாவும் கட்டுக்கதைகள் இரண்டு விதமானவை. ஒன்று ஏற்கனவே நாம் குறிப்பிட்ட புலம்பெயர் மீடியா ஆட்கள் பரப்புவது. இரண்டாவது விடுதலைப்புலிகளின் உயர்மட்ட விசயங்கள் பற்றி மக்கள் மத்தியில் உலாவும் கதைகள். யுத்த வலயத்தில் இருந்த மக்களும் இந்த கதைகளை நம்புகிறார்கள். ஏனெனில், விடுதலைப்புலிகளின் உயர்மட்ட விசயங்கள் அவை. யுத்த வலயத்தில் இருந்தாலும், இந்த விசயங்களை பற்றி மக்களால் அறிந்துகொள்ள முடியாமல் போயிருக்கும். சில சம்பவங்கள், சிலரை அப்படி நினைக்க வைத்திருக்கும். இறுதியில் அதுவே பெரிய உல்டா கதையாக உலா வர தொடங்கியிருக்கும். அப்படியொரு பெரிய உல்டா கதை இன்றுவரை தமிழர்கள் மத்தியில் உலாவிக் கொண்டிருக்கிறது.

இறுதியுத்தத்தில் புலிகளின் தோல்விக்கு இந்த சம்பவத்தை காரணமாக கூறுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அது மிகப்பெரிய உல்டா கதையென்பதே உண்மை.

**கட்டுக்கதை 03**

யுத்தத்தில் புலிகள் தோல்வியடைந்ததற்கு முக்கிய காரணங்களில் ஒன்று புலிகளின் பிரதான தளபதியொருவர் இராணுவத்தின் சிலிப்பர் செல்லாக இருந்தார்!

அதாவது புலிகளை பற்றிய தகவல்களை இரகசியமாக இராணுவத்திற்கு கொடுத்து, புலிகளின் நகர்வுகளை தலைமைதாங்கி, இராணுவத்திற்கு சார்பாக நடத்தினார். இறுதியில்தான் புலிகள் அவரை அடையாளம் கண்டு கொண்டனர். மன்னாரில் இருந்து இவர் இராணுவத்தின் சிலிப்பர் செல்லாக இருந்தாலும், ஆனந்தபுரத்தில் புலிகள் சந்தித்த பேரிழப்பின் பின்னரே, இவரைப்பற்றிய உண்மையை புலிகள் தெரிந்து கொண்டனர். இதன் பின்னர் என்ன நடந்தது?

ஒரு சாரார் சொல்கிறார்கள், புலிகளே மரணதண்டனை கொடுத்தார்கள் என. இன்னொரு சாரர் சொல்கிறார்கள் (அவர்கள் கொஞ்சம் கற்பனை வளமுள்ளவர்களாக இருக்க வேண்டும்) ஆனந்தபுரம் BOX இற்குள் இருந்து அந்த தளபதி மட்டும் தப்பி வந்தபோது, அவரை புலிகள் நிலக்கீழ் பங்கரிற்குள் அடைத்து வைத்தார்களாம். அங்கிருந்தபடி தனது இரத்ததால் பிரபாகரனிற்கு ஒரு கடிதம் எழுதினாராம். அதை பார்த்த பிரபாகரன், அவரை வெளியே அழைத்து, கட்டித்தழுவினாராம்.

அந்த தளபதி பானு. புலிகளின் குட்டிசிறி மோட்டார் படையணி தளபதியாகவும், பின்னர் கிழக்கு தளபதியாகவும், பின்னர் இறுதி யுத்தத்தில் பல்வேறு முனைகளில் தளபதியாகவும் இருந்தவர்.

பானுவை பற்றி உலாவும் இந்த கதைகளெல்லாம் உண்மையா?

இதில் ஒரு உண்மை இருக்கத்தான் செய்கின்றது. என்ன உண்மை? முதலாவது ஆனந்தபுரம் BOX இற்குள் இருந்து தப்பிவந்த வெகு சில போராளிகளில் தளபதி பானுவும் ஒருவர். அதுவும் எப்படி தப்பிவந்தார் தெரியுமா? உடலில் ஒரு சொட்டு கீறலும் இல்லாமல்!

ஆனந்தபுரத்தில் இராயன குண்டு வீசப்பட்டது, கொத்துகுண்டு வீசப்பட்டது என போராளிகள் சொல்லிக்கொண்டிருக்க, BOX இற்குள் இருந்து பானு சிறு கீறலுமில்லாமல் வெளியில் வந்தார்.

பானு தலைமைதாங்கிய முனைகளிளெல்லாம் புலிகள் தோல்வியடைந்தனர் என்பதும் உண்மைதான். இந்த இரண்டு உண்மைகளும் இணைந்து, ஒரு பொய்யாக திரிவடைந்தது. அதுதான், பானு இராணுவத்தின் சிலிப்பர் செல்லாக காட்டிக்கொடுப்பவராக இருந்தார் என்பது!

உண்மையில் நடந்தது என்ன?

விடுதலைப்புலிகள் அமைப்பின் பிரபாகரனின் மிக நம்பிக்கையான தளபதிகளில் ஒருவர் பானு. 1983 தொடக்கம் புலிகள் அமைப்பில் இருக்கிறார். இந்தியாவின் இரண்டாவது பயிற்சிமுகாமில் பயிற்சி பெற்றார். பயிற்சியின் பின்னர் மன்னார் மாவட்டத்தில் அப்போது தளபதியாக விக்டர் இருந்தார் செயற்பட்டார். விக்டர் தளபதியாக இருந்தபோது, பானு நிதிப்பொறுப்பாளராக இருந்தார்.

விக்டர் மரணமான பின்னர் சாஜகான் தளபதியானார். இவரும் இரண்டாவது பயிற்சிமுகாமிலேயே பயிற்சி பெற்றவர். விக்டரின் ஒன்றுவிட்ட தம்பி முறையானவர். தற்போது வெளிநாட்டில் வசிக்கிறார். அவரின் பின்னர் ராதா தளபதியாக இருந்தார். இந்திய அமைதிப்படை சமயத்தில் பானு மன்னாரில் சிறிது காலம் தளபதியாக இருந்தார்.

பின்னர் யாழ்ப்பாணத்தில் தளபதியாக இருந்தார். இரண்டாம் ஈழப்போர் காலத்தில் பால்ராஜ், சொர்ணம்,

தொடர்ச்சி 8-ம் பக்கம்...

7-ம் பக்க தொடர்ச்சி

அன்பு போன்ற தளபதிகள் வடக்கில் எழுச்சிபெற்றனர். இவர்களை போல யுத்த நுணுக்கங்களில் பானு ஜொலிக்க வில்லை. அதனால் யுத்தக்ளங்களில் பானு அதிகமாக ஈடுபடுத்தப்பட வில்லை. ஆனால் மூத்த உறுப்பினர், நிர்வாக ஆளுமையுள்ளவர் என்ற இரண்டு பிளஸ் பானுவிடம் இருந்தது. அதனால் நேரடி யுத்தத்தில் ஈடுபடாத துறைகளில் பானு ஈடுபடுத்தப்பட்டார்.

புலிகள் வன்னிக்கு பின்வாங்கிய பின்னர் குட்டிசிறி மோட்டார் படையணியை உருவாக்கினார்கள். 120mm ஆட்லறிகளை கொண்டு உருவாக் கப்பட்ட படையணி அது. இதே காலத்தில் மணிவண்ணன் ஆட்லறி படையணியென்ற பெயரில் இன்னொரு படையணியும் இருந்தது. இரண்டு படையணிகளும் மிக துல்லியமாக செல் தாக்குதலை நடத்தினார்கள். இலங்கை போர் வரலாற்றில் மிகமிக துல்லியமான எறிகணை தாக்குதலை நடத்த ஆரம் பித்தது இந்த இரண்டு அணியும்தான். பின்னாளில்தான் இராணுவம் இந்த தொழில்நுட்பங்களை கற்றுக் கொண்டது. மூன்றாம் ஈழ யுத்தத்தில் விடுதலைப்புலிகளின் வெற்றிகளிற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக இருந்தது இந்த மோட்டார், எறிகணை பிரிவுகள். மோட்டார் படையணியின் அந்த வளர்ச்சியில் பானுவின் பங்கு அளப்பரியது.

2004 இல் கிழக்கில் கருணா பிளவு நடந்த பின்னர், விடுதலைப் புலிகளின் படையணிகள் கிழக்கை மீள கைப்பற்றின. கிழக்கி தளபதியாக ரமேஷ் புலிகளால் அறிவிக்கப்பட்டார். ஆனால், கருணாவை போன்ற அதிகாரம் ரமேஷிற்கு அளிக்கப்பட வில்லை. அங்கு பானுவும் சென்றார். கிழக்கை தனது நம்பிக்கையான ஒருவர் மூலம் கண்காணிக்க பிரபாகரன் விரும்பியதாலேயே பானு அனுப்பப்பட்டார். கிழக்கை கைப் பற்றும் இராணுவத்தின் நடவடிக்கை தொப்பிகலவில் தொடங்கி,வாகரையில் முடிந்தது. வாகரையிலிருந்து இறுதியாக புறப்பட்டது பானு தலைமையிலான அணிதான்.

வன்னி மீதான இராணுவத்தின் இறுதி தாக்குதல் ஆரம்பித்தபோது, முதலில் தளபதி ஜெயம்தான் மன்னார் களமுனை தளபதியாக இருந்தார். அவரால் இராணுவத்தின் நகர்வை சமாளிக்க முடியவில்லை. இதையடுத்து, பானுவிடம் அந்த பொறுப்பு வழங்கப்பட்டது. அவராலும் சமாளிக்க முடியவில்லை. இதன் பின் வேலவன், தீபன் என பல தளபதிகள் அந்த பொறுப்பை ஏற்றனர். ஆனால் இராணுவத்தின் நகர்வை நிறுத்த முடியவில்லை.

இதற்குள் இன்னொரு தகவலையும் சொல்லவேண்டும். பிரபாகரனின் மூத்த மகன் சாள்ஸ் அன்ரனி அப்பொழுது கணினி பிரிவு பொறுப்பாளராகி விட்டார். சாள்ஸ் அன்ரனி அமைப்பின் முக்கிய பொறுப்பில் வந்த பின்னர், பல தளபதிகள் அவரை அனுசரித்து நடக்க தொடங்கினார்கள். சாள்ஸ் அன்ரனியே ஒரு கட்டத்தில் பல தளபதிகளை வழிநடத்த தொடங்கி விட்டார். சூசை போன்ற ஒரு சிலர்தான் இதை எதிர்த்தனர். மற்றையவர்கள் அனைவரும் சாள்ஸ் அன்ரனியின் தலைமைத்துவத்தையும், முடிவுகளையும் ஆதரித்தனர். அதில் முக்கியமானவர் பானு!

மூத்தவர்களை மரியாதையாக ஐயா என சிலர் கூப்பிடுவதுண்டு. பானுவை "பானு ஐயா" என்றுதான் சாள்ஸ் அன்ரனி கூப்பிட்டார். இருவரும் மிக நெருக்கமாக இருந்தனர்.

நான்காம் ஈழப்போரில் இராணு வத்தின் மீதான வலிந்த தாக்குதல்களை புலிகள் செய்தது மிகமிக குறைவு. விரல் விட்டு எண்ணத்தக்களவு தாக்குதல்கள்தான் நடந்திருந்தன. அவற்றில் ஒன்று அம்பகாமம் தாக்குதல். இப்படியொரு தாக்குதல் நடந்ததே பலருக்கு தெரிந்திருக்காது. ஆனால் நடந்தது. சாள்ஸ் அன்ரனி கணினி பிரிவின் பொறுப்பாளராக இருந்தார் என குறிப்பிட்டிருந்தேன் அல்லவா. இந்த பிரிவின் கீழ் சில தொழிற்சாலைகள் இருந்தன. புலிகளிற்கான ஆயுத உற்பத்தி முயற்சிகளும் நடந்தன.

கலவரங்களில் பொலிசார் கண்ணீர் புகைக்குண்டை (tear gas) பாவிக்கிறார்கள் அல்லவா, அதைவிட சற்றுவீரியமான ஒரு குண்டை யுத்த அரங்குகளில் பாவிப்பார்கள். cs gas என்பது அதன் பெயர். எதிரிகளின் பிரதேசங்களிற்குள் ஊடுருவும் சிறிய வேவு, கொமாண்டோ அணிகள்தான் இவற்றை அதிகம் பாவிப்பார்கள். எதிரிகளால் சுற்றிவளைக்கப்பட்டால், csgas குண்டை வெடிக்கவைப்பார்கள். இதை சுவாசித்தால் மனிதர்களிற்கு இரத்த வாந்தி வரும். கண், காது, மூக்கிற்குள்ளால் இரத்தம் வரும். உடலெல்லாம் தீப்பிடித்ததைபோல எரியும். இதனால் எதிரி அணி நிலைதடுமாறிப்போக, வேவு அணி தப்பிச்சென்றுவிடும். இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணி இந்த குண்டை பாவித்தார்கள்.

இந்த குண்டில் பாவிக்கப்பட்ட இரசாயன கலவைகளை பாவித்து, எறிகணைகளை தயாரிக்க வேண்டு மென்ற விருப்பம் சாள்ஸ் அன்ரனி யிடம் இருந்தது. அந்த குண்டு தயாரிக்கப்பட்டதா, எங்கு பாவிக்கப் பட்டது, எப்படியான விளைவை கொடுத்தது, இறுதி யுத்தத்தில் புலிகள் அதை ஏன் பாவிக்கவில்லையென்ற கேள்விகள் எல்லாம் உங்களிடம் எழும். இதற்கு பதில் சொல்கிறோம். இப்போதல்ல இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன என்ற தீபத்தில் வெளியாகும் தொடரில். விரைவில் அது பற்றிய தகவல்கள் வெளியாகும்.

இப்போது விசயத்திற்கு வருகிறேன். இந்த ஆயுதங்களையும் பாவித்து அம்பகாமம் இராணுவத்தின் மீது தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டது. ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் இருந்து அம்பகாமத்தின் ஊடாக விசுவமடுவை நோக்கி காட்டுக்குள்ளால் முன்னேறிய இராணுவத்தின் மீதே தாக்குதல் திட்டமிடப்பட்டது. இந்த தாக்குதல் தளபதி சாள்ஸ் அன்ரனி.

தாக்குதலின் ஆரம்பமே சொதப்பி, புலிகளின் அணிகள் இராணுவ முற்றுகைக்குள் சிக்கிவிட்டன. சாள்ஸ் அன்ரனியின் கட்டளை மையத் திற்கு பானு அனுப்பப்பட்டு, சாள்ஸ் அன்ரனியை சும்மா உட்கார வைத்துவிட்டு, பானுவே கட்டளைகளை வழங்கி அணிகளை மீட்டெடுத்தார்.


பானு

புலிகளை சிறிய நிலப்பரப்பிற்குள் இராணுவம் சுருக்கிய பின்னர், புலிகளின் மூத்த தளபதிகள் ஒவ்வொரு வரும் சில நூறு மீற்றர் தூரமான முன்னரனே வழங்கப்பட்டிருந்தது. பானுவும் இப்படியான முன்னரண் களிற்கு பொறுப்பாக இருந்தார். புதுக்குடியிருப்பிற்கு இராணுவம் வந்தபோது, மந்துவில் பகுதியில் அணிகளை வழிநடத்தினார் பானு.

இராணுவம் புதுக்குடியிருப்பு நகரத்தை கைப்பற்றி, வடக்கு பக்கமாக இரணைப்பாலை நோக்கி முன்னேற முயன்று கொண்டிருந்தது. 53வது டிவிசன் படையணியின் இன்னொரு அணி மந்துவில் ஊடாக, பச்சைப்புல்மோட்டைக்கு செல்ல முயன்று கொண்டிருந்தது. பச்சைப்புல்மோட்டை எனப்படுவது, புதுக்குடியிருப்பிற்கு அப்பால் உள்ள பகுதி. நந்திக்கடல் நீரேரியோரமுள்ள இடம். மாத்தள், வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் போன்ற இறுதி யுத்த பகுதிக்கு செல்வதற்கான, புதுக்குடியிருப்பு பக்கமிருந்த இடம். இதற்கப்பால் நீரேரி. இந்த புள்ளியை பிடித்தால், புதுக்குடியிருப்பில் நிலைகொண்டிருந்த புலிகளை முற்றாக சுற்றிவளைத்து அழிக்கலாம்.

ஆனந்தபுரம் BOX இன் மையப் புள்ளியும் இதுதான். (தொடரும்)






▶ நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் 33 வருடங்கள் தொடர்ச்சியாக சேவை புரிந்து, அண்மையில் ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி திருமதி ஜே.சலீம், நிந்தவூர் பெஸ்ட் ஒவ் யங் சமூகசேவை அமைப்பினால் கௌரவிக்கப்பட்டார். நிந்தவூர் மத்தியஸ்தசபை தலைவர் பல்கீஸ் அப்துல் மஜீத், தென்கிழக்கு பல்கலைகழக முகாமைத்துவதுறை தலைவரும், முதுநிலை விரிவுரையாளருமான எஸ்.சபீனா கஸ்ஸாலி ஆகியோர் வைத்திய அதிகாரிக்கு பொன்னாடை போர்த்துவதுடன், பிரதி சுகாதார அமைச்சர் எம்.பைஸால் காசிம் நினைவுச்சின்னம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படம்: ஐ.எல்.எம்.பாறூக்)

# இரவு விருந்தில் குறிவைக்கப்பட்ட அல் கைதா தலைவர்!

## பண்ணை வீட்டிலிருந்த அந்த நான்காவது ஆள் யார்?

### 6 சி.ஐ.ஏ செய்த வெளிநாட்டு ஓப்ரேசன்கள்





அல்-ஸவாகி

வெளிநாட்டு தலைவர்களை போட்டுத்தள்ள அமெரிக்க உளவுத்துறை நடத்திய இரகசிய ஒப்ரேஷன்கள் பற்றிய இந்த மினி தொடரில் இந்தவாரம் சற்று வித்தியாசமான விசயமொன்றை தருகிறோம். இதுவரை வெளிநாட்டு தலைவர்களை கொல்லும் ஒப்ரேசன்கள் பற்றிய தகவல்களை தந்தோம். அதில் கொஞ்சம் சொதப்பலாக முடிந்ததையும் சொல்லியிருந்தோம்.

இந்தவாரம் கொஞ்சம் வித்தியாசம். இதில் கொல்லப்பட்டவரும் ஒரு தலைவர்தான். ஆனால் வெளிநாடொன்றின் தலைவர் அல்ல. வெளநாடொன்றில் இருந்த தலைவர். அமெரிக்காவிற்கு வெளியில் இருந்த அமெரிக்காவிற்கு பெரும் தலைவலியாக இருந்த தலைவர் இவர். அமெரிக்காவின் "போடப்படவேண்டியவர்கள் லிஸ்டில்" நீண்டகாலமாக முன்வரிசையில் இருந்தவர். ஈராக்கியர்.

அவர் அபு முஸப் அல்ஸவாகி!

ஈராக்கிய அல்கைதா இயக்கத்தின் தலைவர். அமெரிக்க படைகள் ஈராக்கில் இருந்தபோது கொல்லப்பட்டார். இவரை கொன்ற ஒப்ரேசனில் நேரடியாக ஈடுபட்டது அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ அல்ல. ஆனால் தாக்குதலிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து, தாக்குதல் இலக்கையும் குறித்து, விமானப்படையை அனுப்பி வைத்தது சி.ஐ.ஏ. தாக்குதல் நடத்தியது அமெரிக்க விமானப்படை.

தீபத்தில்வெளியாகும்சி.ஐ.ஏ இரகசிய ஒப்ரேசன்கள் பற்றிய தொடரை படித்து வரும் வாசகர்கள், அமெரிக்க உளவுத்துறை பற்றிய சில விசயங்களை தெரிந்து வைத்திருப்பார்கள். அவற்றில் ஒன்று classified documents என்பது. இதைப்பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறோம்.

உளவுத்துறைகளின் இரகசிய ஒப்ரேஷன்கள் பற்றிய தகவல்கள், அந்த ஒப்ரேஷன்கள் முடிந்த பின்னரும் பல ஆண்டுகளுக்கு ரகசியமாகவே வைத்திருக்கப்படும். இந்த இரகசிய ஆவணங்களே classified documents. காலப்போக்கில் உளவுத்துறை நடவடிக்கைகளிற்கு பாதிப்பு ஏற்படாதென்பதை உறுதிசெய்த பின் படிப்படியாக ஆவணங்களின் இரகசியங்கள் விலக்கப்படும். அதை Declassification என்பார்கள்.

இந்த 'முன்னாள் ரகசியங்கள்' அடங்கிய ஆவணங்களை, அமெரிக்காவின் தகவல் அறியும் உரிமை சட்டப்படி, அமெரிக்கப் பிரஜை ஒருவர் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ள முடியும். எந்த இரகசியங்கள் டிகிளாசிஃபை பண்ணப்படுகின்றன என்பதை மீடியாக்கள் தொடர்ந்து கவனித்துக் கொண்டிருப்பார்கள். ஒரு ஆவணம் டிகிளாசிஃபை பண்ணப்பட்ட அடுத்த நிமிடமே தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல்களை கோரி பலர் விண்ணப்பித்து விடுவார்கள்.

ஈராக்கிய அல்கைதா தலைவர் அல்ஸவாகி கொல்லப்பட்ட இரகசிய ஒப்ரேஷன் பற்றிய ஆவணம் அண்மையில் Declassification செய்யப்பட்டது. இதன்மூலம் அல்ஸவாகி ஒப்ரேஷன் விபரங்கள் வெளியாகியுள்ளன. அதை தீபம் வாசகர்களிற்காக தருகிறோம்.

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் வடக்கு பக்கம் உள்ளது பகுவா நகரம். சிறிய நகரம். அங்கிருந்து ஐந்து கி.மீ தொலைவில் உள்ள சிறிய கிராமமொன்றில் அமைந்திருந்த பண்ணை வீடு அது. அமெரிக்க விமானப்படையின் தி16 தாக்குதல் விமானங்கள் இரண்டு, அந்த பண்ணை வீட்டின் மீது 230 ரிரீ நிறையுடைய இரண்டு குண்டுகளை வீசியது. அமெரிக்கா எதற்காக அந்த வீட்டின் மீது தாக்குதல் நடத்தியதென பிரதேசவாசிகள் குழம்பிப்போனார்கள். பின்னர்தான் அல்ஸவாகி கொல்லப்பட்ட செய்தி வெளியானது. இரவு விருந்து ஒன்றிற்காக சென்ற சமயத்திலேயே அவர் கொல்லப்பட்டார். இன்னும் நான்கு ஆண்களும்,மூன்று பெண்களும் அந்த விருந்தில் கலந்து கொண்டனர்.

இந்த பெண்களில் ஒருவர் அல்ஸவாகியின் பதினாறு வயது மனைவி!

நான்கு ஆண்களில் ஷேக் அப்துல் ரஹ்மான் ஒருவர். இவர்தான் அல்ஸவாகியின் மத ஆலோசகர். அல்ஸவாகியின் நம்பிக்கைக்குரிய கூரியர்கள் இருவரும் கலந்து கொண்டிருந்தனர். இவர்கள் மூலமாகவே அல்ஸவாகி தகவல்களை மற்றையவர்களுக்கு அனுப்புவது வழக்கம்.

தகவல் தொழில்நுட்பத்தின் உதவியுடன்சி.ஐ.ஏ தங்களை உளவுபார்க்கிறது என்பதை தெரிந்ததும், பின்லேடன் உள்ளிட்ட அல்கைதா தலைவர்கள் அனைவருமே செல்போன்களையோ, இமெயில்களையோ உபயோகிப்பதை நிறுத்தி விட்டனர்.எந்த இலத்திரனியில் உபகரணங்களையும் பக்கத்தில் வைத்திருக்க வேண்டாமென தளபதிகளிற்கு கண்டிப்பான உத்தரவே இட்டிருந்தார் பின்லேடன்.செல்போன் இல்லாமல் ஒரு இயக்கம் எப்படி இயங்குவது? எப்படி தகவல்களை பரிமாறுவது?

அதற்குத்தான் கூரியர்கள் பயன்படுத்தப்பட்டனர். நம்பிக்கைக்குரியவர்கள் மூலம் தகவல்கள் அனுப்பப்பட்டன. கிட்டத்தட்ட பண்டைக் கால நடைமுறை! எல்லா தகவல்களையும் கால்நடையாகவே போய் சொல்வார்கள் என்றில்லை. அவர்கள் ஹைரெக் உபகரணங்களை வைத்திருப்பார்கள். ஆனால் அதை வேறு இடங்களில். அதிக தொலைவில் இருக்கும் தகவல் சேர வேண்டிய தளபதியின் கூரியரிற்கு விசயத்தை சொல்லி, அவர் மூலம் தகவலை சேர வைப்பார்கள்.

அல் கைதாவின் இந்த உத்தியை விரைவிலேயே சி.ஐ.ஏ கண்டுபிடித்து விட்டது. ஆனால் கூரியர்களை அடையாளம் காண்பது சுலபமாக இருக்கவில்லை. பின்னாளில், பாகிஸ்தானில் அடையாளம் கணப்பட்ட கூரியர் ஒருவர் மூலமே பின்லேடனின் இரகசிய இருப்பிடத்தை அறிந்து அவரை கொன்றது சி.ஐ.ஏ.

அல்கைதாவின் ஈராக்கிய பிரிவுக்கு தலைவராக இருந்த அல்ஸவாகிக்கு நம்பிக்கைக்குரிய சில கூரியர்கள் இருந்தார்கள். (அவர்களில் இருவரே இரவு விருந்திற்கு வந்தனர்) அவர்கள் மூலமாகத்தான் அல்ஸவாகியின் உத்தரவுகள்,ஈராக்கின் பலபகுதிகளிலும் இருந்த மற்றய தளபதிகளுக்கு போய்ச் சேர்ந்து கொண்டிருந்தன.

அப்படியானால், அந்த நான்காவது ஆள் யார்?

நான்கு ஆண்கள் ·விருந்திற்கு சென்றதாக உள்ளூர் இன்போர்மர்கள் தகவல் அளித்திருக்கிறார்கள். சி.ஐ.ஏ இன் பதிவுகளிலும் அது இருக்கிறது. ஆனால் அவர் என்ன ஆனார் என்பது யாருக்கும் தெரியவில்லை.

அந்த மர்மத்தை இறுதியில் சொல்கிறோம்!

செல்போன் உரையாடல்களை அமெரிக்கர்கள் ஒட்டுக் கேட்பார்கள் என்று தெரிந்து கொண்டு, உஷாராக கூரியர்களை பயன்படுத்திய அல்ஸவாகி சறுக்கிய இடம் கூரியர்களை தேடி சி.ஐ.ஏ களமிறங்கிய சந்தர்ப்பம்.

அல்ஸவாகி பக்தாத் பகுதியில் பயன்படுத்திய கூரியர் ஒருவரை சி.ஐ.ஏ ட்ரக் டவுன் பண்ணியிருந்தது.

(தொடரும்)



## அரசியல் மசாலா

# ரணிலின் கடைசி சந்தர்ப்பம்!

தேசிய அரசாங்கத்தை தொடர்வதென இரண்டு பிரதான கட்சிகளும் தீர்மானித்துள்ளன. அதைப் பற்றி தீபத்தில் விரிவாக சொல்லப் பட்டுள்ளது. அதில் சொல்லப்படாத இன்னொரு செய்தியுள்ளது.

கடந்த 19ம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் சில முக்கிய தலைவர்கள் ஜனாதிபதியை சந்தித்து பேசியுள்ளனர். தேசிய அரசாங்கத்தை தொடர்வது குறித்தே இதில் பேசப்பட்டது. இதன்போது ஜனாதிபதி முக்கிய விசயமொன்றை குறிப்பிட்டுள்ளார். "பிரதமர் முன்னெடுத்த அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளன. இது அவருக்கான இறுதி சந்தர்ப்பம். தேவையான அடிப்படை மாற்றங்களுடன், இம்முறையும் அவர் வெற்றியடையவில்லையென்றால், அவரை நீக்குவதை தவிர எனக்கு வேறு வழியில்லை" என்பதே மைத்திரியின் செய்தி.

மறைமுகமாகவும் சில விசயங்களை சுட்டிக்காட்டியுள்ளார். ஜனாதிபதிக்குரிய கௌரவத்தை அவர் வழங்குவதில்லை, பிரதமரின் பொருளாதார வேலைத்திட்டங்கள் கீழ் மட்ட மக்களின் நம்பிக்கையை பெறுவதாக அமைவதில்லையென்றும் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் இந்த தோல்விக்கு, அவரை சுற்றியுள்ளவர்கள்தான் காரணமென ஐ.தேக உயர்மட்டத்தில் கருத்துள்ளன. பலமுறை பொறுப்புக்களில் தோல்வியடைந்த சிலரை ரணில் அதிகமாக நம்பி, அவர்களிடமே முக்கிய பொறுப்புக்களை வழங்கியுள்ளார். சிறிலங்கன் விமானநிறுவனத்தை உதாரணமாக சொல்கிறார்கள். தனக்கு நெருங்கியவர்களை அதன் பொறுப்பில் அமர்த்தி, நிறுவனத்தை மோசமான நஷ்டத்தில் நிர்வகிப்பதாக விமர்சனம் எழுந்துள்ளது.

இறுதிச்சந்தர்ப்பத்தில் ரணில் என்ன முடிவெடுக்கப் போகிறார்?

**அதை மஹிந்த பார்ப்பார்!**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஒன்றிணைந்த எதிரணியும் இணைந்து அரசாங்கமொன்றை அமைப்பது குறித்து அமைச்சர் தயாசிறி ஜயசேகர மற்றும் திலங்க சுமதிபால ஆகியோர் முன்னெடுத்த முயற்சிகள் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். இதன்போது ஒரு சுவாரஸ்ய சம்பவம் நடந்துள்ளது.

அமைச்சர்கள் இருவரும், மகிந்த தரப்பில் உள்ள நாமல் ராஜபக்ச, விமல் வீரவங்ச, உதய கம்பன்பில ஆகியோரை ஜனாதிபதியிடம் அழைத்துச் சென்றுள்ளனர்.

இதன்போது ஜனாதிபதி பேசிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் நாமல் ராஜபக்ச இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

"ஜனாதிபதி அவர்களே, என்னைக் கைதுசெய்தால் பரவாயில்லை. ஏன் எனது தம்பி யோ வைக் கைதுசெய்தீர்கள்? என்றார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி "அது எனக்குத் தெரியாது. குறித்த அமைச்சின் பொறுப்பு எனது அதிகாரத்தின் கீழ் இல்லை. அது பிரதமரின் அதிகாரத்திற்குஉட்பட்டது" என்று கூறியுள்ளார்.

"அப்படியென்றால் எனது தம்பி கைதுசெய்யப்பட்டதற்கும் உங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையா?" என்றுநாமல்ராஜபக்சஜனாதிபதியிடம் கேட்டுள்ளார்.


இதன்போதும் முதலாவது கூறிய பதிலையே ஜனாதிபதி மீண்டும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், இந்தச் சம்பவத்திற்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லையெனக் கூறியுள்ளார்.

"சட்டம் ஒழுங்கு அமைச்சு சாகல ரத்நாயக்கவிடம் இருக்கிறது. இதில் எந்த விவகாரத்திலும் நான் தலையிடவில்லை. அழுத்தம் கொடுக்கவும் முயற்சிக்கவில்லை" என்று ஜனாதிபதி பதிலளித்துள்ளார்.

இதையடுத்து நாமல், தந்தையான

தொடர்ச்சி 18-ம் பக்கம்...

## தீபம் லென்ஸ்



## மட்டக்களப்பு வீதியை மறந்த இரண்டு அமைச்சர்கள்!

மட்டக்களப்பில் தமிழ்பிரதேசத்தில் பதினைந்து கிலோமீற்றர் நீளமான வீதியொன்றை அபிவிருத்தி செய்யும் திட்டம், மாகாண முதலமைச்சராக இருந்த ஹாபிஸ் அஹமட்டால் நிறுத்தப்பட்டிருந்தது. பல்வேறு காரணங்களை கூறி அந்த திட்டம் நிறுத்தப்பட்டிருந்தாலும், மாற்றுவழிகளின் மூலமும் அது செயற்படுத்தப்படாமலேயே மாகாணசபையின் ஆட்சிக்காலம் முடிந்துள்ளது. கிழக்கு மாகாணசபையின் கடந்த ஆட்சியில், அமைச்சு பொறுப்பை வகித்த தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் இதை மௌனமாக அங்கீகரித்துள்ளனர்.

மண்முனை பாலம் கடந்த மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்டிருந்தது. இதையடுத்து, மண்முனை தொடக்கம் அம்பிளாந்துறை வரையான வீதி அபிவிருத்தி செய்யப்படவிருந்தது.

மாகாணசபைக்குட்பட்ட வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்குட்பட்டதாக இந்த வீதியிருந்தது. பதினைந்து கிலோமீற்றர் நீளமான இந்த வீதியை காபெற் இட்டு நவீனமுறையில் புனரமைக்கும் வசதி அந்த திணைக்களத்திடம் இல்லையென்பதால், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அந்த ஒப்பந்தத்தை செய்ய இருந்தது.

முன்னாள் முதலமைச்சர் மஜித் அதற்கு ஒப்புதல் வழங்கியிருந்தார். எனினும், இதற்குள் 2015 ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது. இதையடுத்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆதரவுடன் ஹாபிஸ் நஸீர் அஹமட் முதலமைச்சரானார்.

மாகாண நிர்வாகத்திற்குள் மத்திய அரசு தலையிட முடியாதென காரணம் கூறி, இந்த வீதி அபிவிருத்தி திட்டத்தை அவர் நிராகரித்தார். அவர் நிராகரித்த சமயத்தில் சி.தண்டாயுதபாணி, கி.துரைராஜசிங்கம் என இரண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பு அமைச்சர்கள், மாகாணசபையில் இருந்தனர். எனினும், கடந்த மாகாணசபை ஆட்சி முடியும்வரை அந்த வீதி புனரமைக்கப்படவில்லை.

இதேவேளை, ஹாபிஸ் நஸீர் அஹமட் முதலமைச்சராக இருந்தபோது, முஸ்லிம் பகுதியான ஏறாவூர் நகரசபை கட்டிடம் அமைக்க வேறு நிதி மூலங்களை பாவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. அந்த கட்டிடத்திற்கான செலவு மதிப்பீடாக 80 மில்லியன் குறிப்பிடப்பட்டிருந்தது. திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, இறுதியில் மதிப்பிடப்பட்ட நிதியிலிருந்து 40 மில்லியன் அதிகமாக பாவிக்கப்பட்டு, 120 மில்லியனில் முடிக்கப்பட்டது. மேலதிக நிதியை வேறு நிதி மூலங்களில் இருந்து பெற்றார்.

இப்படியொரு அக்கறையை ஏன் தமிழ் பிரதேசங்களில் காட்டவில்லை?



# அளவுக்கு மிஞ்சினால் அன்டிபயோட்டிக்கும் நஞ்சு!

Dt.அமிர்தநாதன்
பொதுநல மருத்துவர்

'சளியா காய்ச்சலா, எதுவா இருந்தாலும் ஒருகுளிசை போடுங்க, சரியாயிடும்' இது சாமான்யர்களின் கருத்தாக இருக்க, கொஞ்சம் படித்தவர்களோ 'சளி, காய்ச்சலுக்கு அன்டிபயோடிக் இன்ஜெக்ஷன் போட்டா போதும், கவலைப்பட வேண்டாம்' என்பார்கள். தலைவலி, தடிமன் என்றால் நேராக மெடிக்கல் கிளினிக்குக்கு சென்று, 'எனக்குத் தலைவலிக்குது, தடிமன் பிடிச்சிருக்கு' என்று பிரச்னையைச் சொல்லி, தமக்குத் தெரிந்த அன்டிபயோடிக் மருந்தை வாங்கிப் பயன்படுத்துபவர்களும் இருக்கிறார்கள். ஆனால், அந்த மருந்தின் அளவு நமது பிரச்னைக்குரிய சரியான அளவா என்பது அவர்களுக்குத் தெரியாது.

ஆக, சிறுசிறு பிரச்னைகளுக்குக்கூட அன்டிபயோடிக் மருந்துகளைப் பயன்படுத்தினால் காலப்போக்கில் உடலின் நோய் எதிர்ப்புச்சக்தி படிப்படியாக குறைந்துவிடும் என்று மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள். அதேவேளையில், நோயின் பாதிப்பு, அதன் தீவிரம் தெரியாமல் வீரியமான அன்டிபயோடிக் மருந்துகளை உடலுக்குள் செலுத்துவதால் பல்வேறு பாதிப்புகள் ஏற்படும் என்றும் சொல்கிறார்கள் மருத்துவர்கள்.

மருத்துவத் துறையில் பெரும் புரட்சியாக கருதப்படுவது அன்டிபயோடிக். ஆனால், அன்டிபயோடிக் மருந்துகள் பற்றிச் சர்ச்சைக்குரிய கருத்துகளும் நிலவுகின்றன. உண்மையிலேயே, நாம் பயன்படுத்தும் அன்டிபயோடிக் மருந்து, மாத்திரைகள் குறித்த போதுமான விழிப்புஉணர்வு இல்லை என்பதையே இது காட்டுகிறது. அன்டிபயோடிக் என்றால் என்ன... அதனை எப்படிப் பயன்படுத்துவது... அதனால் பாதிப்புகள் ஏற்படுமா? விரிவாகப் பார்ப்போம்.

### அன்டிபயோட்டிக்

பக்டீரியா நுண்ணுயிரிகளால் ஏற்படும் நோய்களைக் குணப்படுத்த மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படும் மருந்துகளே 'அன்டிபயோடிக்' (Antibiotics) என அழைக்கப்படுகின்றன. அதாவது, இயற்கையாக நம் உடலில் உள்ள எதிர்ப்புச் சக்தி செய்ய வேண்டிய வேலையை, நாம் எடுத்துக் கொள்ளும் 'அன்டிபயோடிக்' செய்கிறது.

அன்டிபயோடிக் அதன் செயல்பாட்டின் அடிப்படையில் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். நம்முடைய உடலுக்குள் நுழைந்து நோய் ஏற்படுத்தும் நுண்ணுயிரிகளை அழிக்கும் பணிகளைச் செய்யும் அன்டிபயோடிக், பக்டீரிசைடல் (Bactericidal) என்று அழைக்கப்படுகிறது. நுண்ணுயிரிகளின் வளர்ச்சியை மட்டும் தடுத்து நிறுத்தக்கூடிய அன்டிபயோடிக் பக்டீரியோஸ்டேட்டிக் (Bacteriostatic) என்று அழைக்கப்படுகிறது.

### என்ன பரிசோதனை?

அன்டிபயோடிக் மருந்து ஒருவருக்குத் தேவையா, இல்லையா என்பதை அறிய நோயாளியின் ரத்தம், சிறுநீர், புண் சீழ் போன்றவற்றில் உள்ள கிருமிகளை வளர்த்து, அவை எந்த மருந்துக்குக் கட்டுப்படுகின்றன என்று பரிசோதிக்கப்படும். இந்தப் பரிசோதனைக்கு கல்ச்சர் அண்ட் சென்சிட்டிவிட்டிச் சோதனை (Culture and Sensitivity Test) என்று பெயர். இதன் முடிவுகள் தெரிய 48 மணி நேரம் முதல் 72 மணி நேரம் வரை ஆகும். பரிசோதனையின் அடிப்படையில் வயது, உடல் எடை, நோய் பாதிப்பின் தன்மை ஆகியவற்றுக்கேற்றாற்போல மருந்துகளின் அளவு பரிந்துரைக்கப்படுகிறது.

உதாரணமாக, 10 கிலோ வரை உள்ள ஒரு வயதுக் குழந்தைக்கு டிராப்ஸ் வடிவில் சிறிதளவு அன்டிபயோடிக் கொடுக்கப்பட வேண்டும். 20 கிலோவுக்கு மேல் 5 7 வயது உள்ளவர்களுக்கு பாதியளவும், அதற்கு மேற்பட்டவர்களுக்கு மாத்திரை, கப்சூல், ஊசி, மருந்துகள் வடிவில் கொடுக்கப்பட வேண்டும். ஆனால், நோயாளிகளோ உடனடியாகக் குணமாக வேண்டும் என்ற நோக்கத்தில் உடனடித் தீர்வையே விரும்புகிறார்கள். இதனால் மருத்துவர்கள் வீரியம் நிறைந்த (Heavy Doses) அன்டிபயோடிக் மாத்திரை மற்றும் ஊசிகள் மூலம் குணப்படுத்த முயல்கிறார்கள். அது உடலில் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

### என்னென்ன பாதிப்புகள்?

அன்டிபயோடிக் மருந்துகளை அடிக்கடி பயன்படுத்துவதாலும் தேவையில்லாமல் பயன்படுத்துவதாலும் காலப்போக்கில் உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி பாதிக்கப்படுகிறது. மேலும், அடிக்கடி இந்த மருந்துகளைச் சாப்பிடுவதால் உடலின் ஜீரண உறுப்புகள் கெட்டு, உடம்பிலுள்ள பி கொம்ப்ளெக்ஸ் சக்தியில் இழப்பு ஏற்படுகிறது. மேலும் நாவறட்சி, வாய் துர்நாற்றம், தொண்டையில் புண் போன்ற பிரச்னைகளும் ஏற்படுகின்றன. மருந்து அலர்ஜி இருந்தால் சருமம் சிவந்துபோதல் மற்றும் தடிப்புகள் ஏற்படுகின்றன.

### அன்டிபயோட்டிக் ரெஸிஸ்டன்ஸ்

ஒரு நோய்க்குக் குறிப்பிட்ட காலத்துக்குச் சாப்பிடக் கொடுத்த அன்டிபயோடிக் மருந்தைப் பாதியிலேயே சிலர் நிறுத்திவிடுவார்கள். சிலர் இடைவெளி விட்டுச் சாப்பிடுவார்கள். இன்னும் சிலர் தேவையான அளவுக்குச் சாப்பிடாமல் இருப்பார்கள். சிலர் குறைந்த அளவிலோ அதிகளவிலோ சாப்பிடுபவர்களாக இருப்பார்கள். இதுபோன்ற காரணங்களால் உடலில் அந்த நோயை உண்டாக்கிய கிருமிகள் முற்றிலும் அழியாமல் போகலாம்.

அப்போது அந்த மருந்தின் பிடியிலிருந்து தப்பிக்க மீதமுள்ள கிருமிகள், தடுப்பாற்றல் கொண்ட கிருமிகளாக உருமாறிக்கொள்ளும். அதாவது, கிருமிகளின் நோய் எதிர்ப்புச் சக்தியானது அன்டிபயோடிக் மருந்துகளுக்கு எதிராக வலுப்பெறத் தொடங்குகிறது. ஒரு கட்டத்தில், அவை அன்டிபயோடிக்குகளையே அழிக்கும் அளவுக்கு ஆற்றலைப் பெற்றுவிடும். இதையே, அன்டிபயோடிக் ரெஸிஸ்டன்ஸ் (Antibiotic Resistance) என்கிறோம்.

### தவிர்ப்பது எப்படி?

1. நோய்க்கான காரணம் தெரிந்து சிகிச்சை பெற வேண்டும். சுய மருத்துவம் கூடாது. முக்கியமாக அன்டிபயோடிக் மருந்து தேவையா என்று தெரிந்த பிறகே, அதைச் சாப்பிட வேண்டும். ஏனெனில், அன்டிபயோடிக் எல்லாவிதமான நோய்களுக்கும் அவசியமில்லை. சில நோய்களுக்குக் குறிப்பிட்ட காலம் வரை பாதிப்பு இருக்கத்தான் செய்யும். அத்தகைய நோய்களுக்கு உண்டான மருந்து மாத்திரைகளைப் பயன்படுத்தினால் அது சரியாகி விடும்.
2. அன்டிபயோடிக் மருந்துகள் எத்தனை நாள்களுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதோ அத்தனை நாள் மட்டுமே உட்கொள்வது சிறந்தது. நோயின் தீவிரம் குறைந்துவிட்டதென இடையில் நிறுத்துவதோ, அதைவிடக் கூடுதலாக உட்கொள்ளவோ கூடாது.
3. பெரியவர்களுக்கு மட்டுமே கொடுக்கக்கூடிய அன்டிபயோடிக் மருந்துகளை ஒருபோதும் குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடாது.
4. சரிவிகித உணவுப் பழக்கங்களைப் பின்பற்றுதல், உடற்பயிற்சி, ஆழ்ந்த தூக்கம் போன்ற ஆரோக்கிய பழக்கவழக்கங்களை வளர்த்துக் கொள்வதால் இயற்கையான நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.
5. கொசுத் தடுப்பு, சுகாதாரமான குடிநீர், பொதுச் சுகாதாரத்தைப் பின்பற்றுவதன் மூலம் நோய் தொற்றுக்கான காரணிகளைத் தவிர்க்க முடியும்.

### அளவுக்கு அதிகமான அன்டிபயோட்டிக் புற்றுநோயை உருவாக்குமா?

அன்டிபயோடிக் மருந்துகளை அளவுக்கு அதிகம் உட்கொள்வது, குடல் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகளை அதிகரிப்பதாக, அமெரிக்காவில் நடந்த ஓர் ஆய்வில் தெரிய வந்துள்ளது. இந்த ஆய்வில், நீண்டகாலமாக அன்டிபயோடிக் மருந்துகளை உட்கொள்பவர்களுக்குச் சாதாரண பக்டீரியா அழிக்கப்பட்டு, அசாதாரண பக்டீரியா உருவாவதாக கூறப்படுகிறது.

இதனால் பக்டீரியாவின் அளவு உயர்ந்து, குடல் சுவரில் உண்டாகும் பொலிப்ஸ் (Polyps) என்ற சிறு சிறு கட்டிகள் உண்டாகின்றன. இதுவே குடல் புற்றுநோய் ஏற்படக் காரணமாகிறது. அதே நேரத்தில் எல்லாவிதமான பொலிப்ஸ் கட்டிகளும் புற்றுநோயாக மாறும் என்று சொல்லிவிட முடியாது.

இந்த ஆய்வு முற்றுப்பெறவில்லை. ஆராய்ச்சியின் ஒரு கட்டத்தில் இந்த முடிவுகள் வந்துள்ளன. மேலும், ஆராய்ச்சி தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

# நான் அகதி

18



இத்துடன் இந்த தொடர் நிறைவடைகிறது. அகதி வாழ்க்கை ஈழத்தமிழர்களிற்கு புதியதல்ல. என்றாலும், உலகெங்குமுள்ள அகதிகள் பற்றிய ஒரு அறிமுகத்தை ஏற்படுத்த இந்த தொடர் வெளியானது.

எது என் நாடு என்பதை எல்லைக் கோடுகள் நிர்ணயிக்கின்றன. யார் என் மக்கள் என்பதைக் கோடுகளே வரையறை செய்கின்றன. நானும் என் மக்களும் கோர்டுகளுக்கு உள்ளே அடங்கிக்கிடக்கிறோம். எல்லைக்கோடு என் இருப்பை உறுதி செய்கிறது. என் அடையாளத்தை வழங்குகிறது. என் நாட்டுக்கு ஒரு பெயரை அளிப்பது அதுதான். என் மக்கள் இந்தக் கோட்டின் பெயரால் அழைக்கப்படுகிறார்கள். இந்த உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டையும் கோடுகளே ஆட்சிசெய்கின்றன என்பதை நானறிவேன். கோடுகள் இல்லையென்றால் உலகம் இல்லை. நாடு இல்லை. ராணுவம் இல்லை. அரசு இல்லை. ஆட்சியில்லை. நான் ஒரு சிவிலியன். என் தேசம், என் மக்கள், என் அரசு, என் வாழ்க்கை, என் இருப்பு அனைத்தையும் கோடுகள் நிர்ணயிக்கின்றன. எனது அண்டை நாடு எது என்பதையும், என் நட்பு நாடு எது என்பதையும், என் எதிரி நாடு எது என்பதையும் என் நாட்டின் கோடுகள் முடிவுசெய்கின்றன. எனது புவியியலே என்னுடைய அரசியலாகவும் வரலாறாகவும் இருக்கிறது.

கோடுகள் வரையப்படுவதற்கு முன்பும் மனிதர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் கட்டுப்பாடற்றவர்களாக இருந்தனர். அவர்களுடைய கால்கள் கட்டப்படாமல் இருந்தன. கோடு குறித்த அச்சமின்றி வனம், மலை, கடல், பாலைவனம் என்று அவர்கள் சுற்றித் திரிந்தனர். உணவும் உறைவிடமும் தேடி அவர்கள் தொடர்ச்சியாக ஓரிடத்திலிருந்து இன்னொன்றுக்கு இடப்பெயர்ச்சி செய்துகொண்டிருந்தனர். உணவுப் பற்றாக்குறை, பஞ்சம், புயல், வெள்ளம், வறட்சி, குழு மோதல் உள்ளிட்டவை இடப்பெயர்ச்சிக்கான காரணங்களாக இருந்தன. பழங்குடி மக்களும் நாடோடி மக்களும் ஏதேனும் ஓரிடத்தில் நிலை கொண்டு நிரந்தரமாகத் தங்கும் வழக்கம் இல்லாதவர்களாக இருந்தனர். மற்றொரு பக்கம், புதிய இடங்களைக் காணவேண்டும், புதிய அனுபவங்களைப் பெறவேண்டும், புதிது புதிதாகக் கற்கவேண்டும் என்னும் ஆர்வம் கொண்டவர்கள் கடல் கடந்து பல பயணங்களை மேற்கொண்டனர். வர்த்தக ஆர்வம் கொண்டவர்களும் நீண்ட, நெடிய பயணங்களை முன்னெடுத்தனர். அறிவியல் ஆய்வாளர்கள் இந்தப் பயணங்களால் பெரும் பலன் அடைந்தனர். இபின் பதூதா, மார்க்கோ போலோ, வாஸ்கோட காமா, சார்லஸ் டார்வின் போன்றவர்கள் தங்களுடைய எல்லையற்ற பயணங்கள் வாயிலாக நம் அறிவின் எல்லைகளை விசாலப்படுத்தினர்.

நவீன உலகம் முதலில் தடை செய்தது இந்தக் கட்டற்ற சுதந்திரத்தைத்தான். கூண்டுக்குள் விலங்குகளை அடைப்பது போல் கோடுகளுக்குள் மனிதர்களைப் பிரித்துத்தொகுத்து அடைத்துவைக்கும் வழக்கம் ஆரம்பமானது. நீ பிறப்பால் சிரியன். எனவே சிரியாவின் எல்லையைக் கடந்து நீ அனுமதியின்றி வெளியில் செல்லக்கூடாது. அதேபோல் இன்னொருவன் உன் எல்லைக்குள் வருவதை நீ அனுமதிக்காதே. இந்தக் கோடுகளைப் பாதுகாப்பதற்கென்றே அரசாங்கம் என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது. கோடுகளைப் பராமரிப்பதே அரசாங்கத்தின் முதன்மைப் பணியாக மாறியது.

அதுவே அரசாங்கத்தின் முதன்மைப் பிரச்னையாகவும் மாறிப்போனது. குடிமக்களின் கல்விக்கோ மருத்துவத்துக்கோ அல்ல, உலகின் பல நாடுகள் எல்லையைப் பாதுகாப்பதற்கே அதிக பணம் செலவிடுகின்றன. காரணம் விதிவிலக்கில்லாமல் எல்லா எல்லைக் கோடுகளும் விரோதத்தையே முதலில் சம்பாதித்துக்கொள்வதுதான். எல்லையின் பெயரால் நாடுகள் தங்களுக்குள் போரிட்டுக்கொள்கின்றன. எல்லையின் பெயரால் கணக்கற்ற மக்கள் தினம் தினம் மடிகிறார்கள். இந்தப் படுகொலைகள் அரசால் அரங்கேற்றப்படுபவை அல்லது அரசைப் பாதுகாக்க அரங்கேற்றப்படுபவை என்பதால் அவை பெருமிதத்துக்குரிய செயல்களாக உருமாற்றப்படுகின்றன. எல்லைக் கோடுகள், அவை உருவான காலம் முதலே வன்முறையோடு தொடர்பு கொண்டவையாக இருக்கின்றன. இந்த வன்முறையை மற்றவர்களைவிட அதிகம் சந்திப்பவர்கள் நாடற்றவர்களான அகதிகள்தாம்.

உலகமே ஒரு கிராமம், உலகம் நம் உள்ளங்கையில், உலகம் முழுக்க ஒரே சந்தை போன்ற அட்டகாசமான முழக்கங்கள் உலகமயமாக்கலுக்கு ஆதரவாக எழுப்பப்பட்டாலும் நிஜத்தில் உலக நாடுகள் நத்தை போல் மேலும் மேலும் சுருங்கிக் கொண்டே போவதைத்தான் நாம் பார்க்கிறோம். ஐரோப்பிய ஒன்றியம் பலமிழந்துவிட்டது. குடியேறிகளின் நாடு என்று புகழப்பட்ட அமெரிக்கா தன் கதவுகளை இழுத்து மூடிக்கொண்டுவிட்டது. வளமுள்ள நாடுகள் அனைத்தும் போ, போ என்று அகதிகளை விரட்டியடிக்கின்றன. அதே சமயம் பண்டப் பரிமாற்றம் தடையின்றி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வர்த்தகத்துக்குக் கோடுகள் ஒரு தடையாக இல்லை. உலகின் எந்த மூலையிலிருந்தும் எந்த மூலைக்கும் ஒரு பொருளை இன்று வெகு சுலபமாகக் கொண்டுசெல்லமுடியும். உலக வர்த்தக மையம் போன்ற அமைப்புகளும் நாடுகளுக்கு இடையிலான பல்வேறு வர்த்தக உடன்படிக்கைகளும் தங்குதடையற்ற வர்த்தக உறவைச் சாத்தியமாக்கியுள்ளன.

ஜெட் விமானம் ஒன்றில் ஏறி, குறட்டைவிட்டு உறங்கியபடியே ஒரு கண்டத்தை விட்டு இன்னொன்றுக்கு நீங்கள் சுலபமாகச் சென்றுவிட முடியும். எல்லைக்கோடுகள் அனைத்தும் உதிர்ந்து உடைந்து உங்கள் விமானத்துக்காக வழிவிடுகின்றன. மென் புன்னகையுடன் விமானப் பணிப்பெண்கள் உங்களை ஒரு புதிய நாட்டுக்கு வரவேற்று அழைத்துச் செல்வார்கள். இதே நீங்கள் உயிர் தப்பியோடிவரும் அகதி என்றால் எல்லைக்கோடுகள் உங்களை உந்திக் கீழே தள்ளும். உன் உடல் என் தேசத்துக்குத் தேவைப்படாது என்று அவை உங்களை விரட்டியடிக்கும். உங்களை ஏற்க மறுத்தால் உங்களுக்கு என்ன நேரும் என்பது உங்கள் பிரச்னை மட்டுமே. இப்படித்தான் மூன்று வயதுக் குழந்தை ஆலன் குர்தியின் உடல், 2 செப்டம்பர் 2015 அன்று மத்தியதரைக்கடலில் மூழ்கித் தலைகுப்புறக் கரை ஒதுங்கியது. இப்படி எண்ணற்ற உயிர்கள் கோடுகளால் அச்சுறுத்தப்பட்டு, கோடுகளால் விரட்டப்பட்டு, கோடுகளாலேயே தினம் தினம் கொல்லப்படுகின்றன.

டொனால்ட் டிரம்ப் அகதிகளுக்கு மிகவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறார். அந்நியர்களிடமிருந்தும் அவர்களுடைய ஆக்கிரமிப்புகளிடமிருந்தும் உங்களை மீட்டெடுப்பேன் என்பதுதான் அவருடைய பிரதான தேர்தல் வாக்குறுதியாகவும் பிரசாரமாகவும் இருந்தது. அகதிகள் உள்ளே நுழையாதவாறு அமெரிக்காவைப் பலப்படுத்துவேன். அமெரிக்கா என்பது வெள்ளையர்களின் நாடாக மட்டுமே இருக்கும். அதில் அயல்நாட்டு அகதிகளுக்கு இடமில்லை. அகதிகளை மட்டுமன்று, ஆசிய, தென்னமெரிக்கக் குடியேற்றங்களையும் இனி அனுமதிப்பதற்கில்லை என்று முழங்கினார் டிரம்ப். அமெரிக்கா மட்டுமன்று, பல நாடுகளின் நிலைப்பாடு இன்று இதுவே. நவம்பர் 2013 முதல் பிப்ரவரி 2014 வரை சவுதி அரேபியா 1,60,000 எத்தியோப்பியர்களை நாட்டை விட்டு வெளியேற்றியுள்ளது. மலேசியா, இந்தோனேஷியா, தாய்லாந்து மூன்றும் தொடக்கத்தில் ரோஹிங்கியாக்களின் படகுகளைத் தங்கள் எல்லைக்குள் அனுமதிக்காமல் விரட்டியடிப்பதிலேயே கவனமாக இருந்தன.

2015ம் ஆண்டுக் கணக்கின்படி உலகம் முழுக்க 65 மில்லியன் பேர் அகதிகளாக

தொடர்ச்சி அடுத்தபக்கம்...





மாறியிருக்கிறார்கள். இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து நாடிழந்த அகதிகளின் எண்ணிக்கை 11.5 மில்லியன் என்பதை அருகில் வைத்துப் பார்க்கும்போது அகதிகளின் இன்றைய நிலை கவலையளிக்கக்கூடியதாக இருக்கிறது. வரலாற்றில் இவ்வளவு பெரிய அளவிலான மக்கள் திரள் நாடற்றவர்களாக ஒரே சமயத்தில் இருந்ததில்லை. அந்த வகையில் இந்த நூற்றாண்டின் முதன்மையான பிரச்னை இதுதான். அகதிகளை உருவாக்கியதில் அமெரிக்கா வகித்த பாத்திரத்தைக் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும். பொய்யான காரணங்களாலும் அரசியல் கணக்கீடுகள் காரணமாகவும் ஆக்கிரமிப்புப் போர்களை நடத்தி அந்நாட்டு மக்களை நாலாபுறமும் சிதறடித்த பெருமை அமெரிக்காவுக்கு உரியது. செப்டம்பர் 11 தாக்குதலுக்கு முன்பே இத்தகைய அநீதியான ஆக்கிரமிப்புகளை அமெரிக்கா செய்திருக்கிறது, பிறகும் அதைத் தொடர்ந்திருக்கிறது. அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்பது பெருமளவில் அகதிகளுக்கு எதிரான போராகவே இருப்பதையும் நாம் பார்க்கிறோம். டிரம்பின் நிர்வாகம் நிலைமையை மேலும் மோசமாக்கிக்கொண்டிருக்கிறது.


அகதிகளை ஏற்பதில்லை என்பது முதல் பிரச்னை என்றால், ஏற்றுக் கொண்டுள்ள நாடுகளில் அவர்கள் எப்படி வைக்கப் பட்டிருக்கிறார்கள் என்பது அடுத்த பிரச்னையாக இருக்கிறது. கொடுமையாக, சிறைக்கூடங்களை விடவும் கொடுமையாக அமைந்துள்ளன பெரும்பாலான அகதி முகாம்கள். அகதிகளை விலங்குகளைப் போல் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்றே அரசாங்கங்கள் நினைக்கின்றன. இந்தக் குறுகிய சிந்தனையோட்டத்திலிருந்து அவர்களால் வெளிவரவே முடியாமலிருக்கிறது. அகதிகளைப் பொருளாதாரச் சுமைகளாகவும் கருதவேண்டியதில்லை. அகதிகள் தாங்கள் புகலிடம் புகுந்த நாட்டின் பொருளாதாரத்தைத் தங்களால் இயன்ற அளவுக்கு வளப்படுத்திவருகிறார்கள் என்பதை ஆய்வுகளைக் கொண்டு பலமுறை பலரும் நிரூபித்த பிறகும் அரசாங்கங்களின் காதுகளில் அவை நுழைவதில்லை.

அகதிகளைச் சுமைகளாக மட்டுமன்றி பயங்கரவாதிகளாகவும் பார்க்கும் போக்கு இருக்கிறது. பெருங்கூட்டம் ஒன்றை உள்ளே அனுமதிக்குமாறு அவர்களில் சிலர் தவறிழைத்தவர்களாகவோ தவறிழைக்கும் எண்ணம் கொண்டவர்களாகவோ இருப்பதற்கு வாய்ப்பு இருக்கத்தான் செய்கிறது. ஆனால், இது எல்லாக் குழுக்களுக்கும் பொருந்தக்கூடியதுதான் இல்லையா? அமெரிக்கா இதுவரை சந்தித்துள்ள தாக்குதல்கள் அனைத்துமே அந்நிய பயங்கரவாதிகளால் ஏற்பட்டவைதானா? அகதிகளும் பயங்கரவாதிகளும் அயல் நாட்டினரும்தான் அமெரிக்காவில் குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனரா? இஸ்லாமியர்களும் ஆபிரிக்க அமெரிக்கர்களும் லத்தீன் அமெரிக்கர்களும்தான் பள்ளிகளில் துப்பாக்கிச் சூடுகளை நடத்திக் கொண்டிருக்கிறார்களா? அவர்களையெல்லாம் என்ன செய்யப்போகிறது அமெரிக்கா? டிரம்ப் விரும்பியதுபோல் வெள்ளையர்கள் மட்டுமே வாழும் தேசமாக அமெரிக்கா மாற்றப்பட்டால் அகிம்சையின் மறு உருவாக அந்நாடு இரவோடு இரவாக மாறிவிடுமா? ஆக, அகதிகள் பொருளாதாரச் சுமைகள் என்பதைப்போல் அகதிகள் பயங்கரவாதிகள் என்பதும் அவர்களை நிராகரிக்கச் சொல்லப்படும் ஒரு சாக்குப்போக்குதான், இல்லையா?

அரசாங்கங்கள் மட்டுமல்ல, நாமும்கூட அகதிகள் குறித்துப் பல தவறான அபிப்பிராயங்களை வளர்த்து வைத்திருக்கிறோம். இந்தத் தொடரின் நோக்கம் அகதிகளின் தரப்பை முன்வைப்பதன்மூலம் அந்த அபிப்பிராயங்களின் வேரைச் சற்று அசைத்துப் பார்ப்பதுதான். அகதிகள் உலகம் முழுக்க நிறைந்திருக்கிறார்கள் என்றபோதும் அவர்கள் தனியோர் உலகில்தான் வாழ்கிறார்கள். அந்த உலகத்தைச் சேர்ந்த சிலருடைய வாழ்க்கையிலிருந்து ஒரு சில அத்தியாயங்கள் மட்டுமே இதில் இடம்பெற்றிருக்கின்றன. கடல்போல் விரிந்திருக்கிறது அவர்களுடைய பெருஞ்சோகம். அதை முழுக்கப் பதிவு செய்வதென்பது இயலாதது.

அகதிகள் பிரச்னையைத் தீர்க்க என்னென்ன செய்ய வேண்டும்? இந்தத் துறையில் ஆய்வு மேற்கொண்டு வருபவர்கள் கூறும் சில முக்கிய ஆலோசனைகள் இவை; அடைக்கலம் தேடி வரும் அகதிகளுக்குப் பாதுகாப்பான வழித்தடத்தை உறுதி செய்ய வேண்டும். உடனடித் தேவைகள் உணவு, இருப்பிடம், மருத்துவ வசதிகள் போன்றவை. நீண்டகாலத் தேவை, சுதந்திரமான, இடையூறு அற்ற வாழ்க்கை. அகதிகளுக்கும் குடும்பங்கள் உண்டு. எனவே ஓர் அகதியின் குடும்ப உறுப்பினர்களுக்கு விசா வழங்கி அவர்கள் ஒன்றிணைய அனுமதிக்க வேண்டும். புகலிடம் அளித்த நாட்டில் தங்கியிருப்பதா, மீண்டும் தன் சொந்த நாட்டுக்குத் திரும்புவதா அல்லது மூன்றாவதாக வேறொரு நாட்டுக்குச் செல்வதா என்பதை முடிவு செய்யும் அதிகாரம் ஓர் அகதிக்கு இருக்கிறது. எந்த முடிவையும் அவர்மீது மற்றவர்கள் திணிக்கக் கூடாது. குழந்தைகளுக்குக் கல்வி வசதி அளிக்க வேண்டும்.

அகதிகள் குற்றவாளிகளல்லர். எல்லையைக் கடக்கும் முயற்சியில் ஈடுபடும் எந்த அகதியும் இறக்கக் கூடாது, கைது செய்யப்படக் கூடாது. போர் அல்லது உள்நாட்டுக் கலவரத்திலிருந்து தப்பிவரும் அகதிகளைப் புரிந்துணர்வுடன் அரவணைத்துக்கொள்ள வேண்டும். உள்நாட்டு மக்களால் அகதிகளுக்கு எந்தச் சிக்கலும் நேராத வண்ணம் தடுக்க வேண்டும். இனம், நிறம், மதம், மொழி உள்ளிட்ட அம்சங்களைக் கொண்டு அகதிகளைப் பாகுபடுத்தவோ வதைக்கவோ ஒருவரையும் அனுமதிக்கக் கூடாது. அவர்கள்மீது ஏவப்படும் வெறுப்பு அரசியலைத் தடுத்துநிறுத்த வேண்டும். புதிய நாட்டில் அகதிகள் பொருளாதார ரீதியிலும் பாலியல் ரீதியிலும் இன்ன பிற வழிகளிலும் சுரண்டப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும். அகதிகள் உருவாவதற்குக் காரணமான சூழலைக் கண்டறிந்து சீர் செய்வதற்கு உதவி புரியவேண்டும். அகதிகளைப் பாதுகாப்பதும் அவர்களுக்கு வாழ்வளிப்பதும் நம் கடமை என்பதை, பொறுப்புமிக்க ஒவ்வொரு அரசாங்கமும் உணரவேண்டும். என் அரசு இவற்றையெல்லாம் சரியாகச் செய்கிறதா என்பதைக் கண்காணிப்பது அந்நாட்டிலுள்ள ஒவ்வொருவரின் கடமை.





ஊர், பேர் தெரியாத மக்களுக்காக நாம் எதற்காக இவ்வளவு மெனக்கெட வேண்டும்? சக மனிதர்களைக் காப்பதும் அவர்களுக்காகக் குரல் கொடுப்பதும் நம் கடமை. மேலும், மக்களில் ஒரு பிரிவினர் அகதிகளாக இருக்கும்போது இன்னொரு பிரிவினரால் சுதந்திரமாக இருந்துவிட முடியாது. எல்லாவற்றுக்கும் மேலாக, இன்று அகதிகளுக்கு நேரும் எதுவும் நாளை நமக்கும் நேரக்கூடும். நாம் அகதிகளாக மாறுவதற்கான அத்தனை காரணங்களும் வெளியில் உயிர்ப்புடன் இருக்கின்றன. அந்த வகையில் இது நம் எல்லோருடைய போராட்டமும்கூட.

**சொந்தங்களை அரவணைப்போம்!**



## தெய்வமகள் காயத்ரியின் முடிவு

சன் டிவியில் ஒளிபரப்பாகும் தெய்வமகள் சீரியல் ஐந்து வருடத்தை எட்டியுள்ளது. காயத்ரியாக மக்கள் மனதில் இடம்பிடித்தவர் ரேகா குமார். ஐந்து வருடங்களின் முன்னர் கதையை கேட்டபோது, வெயிட்டான நெகடிவ் ரோல் என்பது மட்டுமே தெரிந்ததாம். இவ்வளவு பெரிய வரவேற்பு கிடைக்குமென எதிர்பார்க்கவில்லையென்கிறார். இவரது கொழுந்தனாராக நடித்த கிருஸ்ணா நன்றாக நடிப்பதால், இருவரும் போட்டிபோட்டு நடிக்க ஆரம்பித்தார்களாம். எங்காவது வெளியில் சென்றால், ரசிகர்கள் சூழ்ந்து திட்டுவார்களாம். அது நடிப்பு என விளக்கம் சொன்னாலும், "அது என்னவாகவும் இருக்கட்டும். பிரகாஷையும், சத்யாவையும் அவ்வளவு கொடுமை செய்வதா?" என மிரட்டுவார்களாம். இந்த சீரியலில் காயத்திரியை அண்ணியார் என்றுதான் கிருஸ்ணா அழைப்பார். பல குடும்பங்களில் அண்ணியார் வார்த்தையை பாவிப்பது, தனது நடிப்பிற்கு கிடைத்த வெற்றியென்கிறார். சீரியலின் முடிவைப்பற்றி கூறும்போது, "கதைப்படி பிரகாஷ் என்னை துப்பாக்கியால் சுடுவார். நான் இறந்ததாக நினைத்து ஒடியன்ஸ் சந்தோசமடைவார்கள். ஆனால் அவ்வளவு விரைவில் எனக்கு முடிவு வராது. எப்படி உயிர்போகப்போகிறது என்பதுதான் சீரியலின் கடைசி ட்விஸ்ட்" என்றார்.



## பிரியாத ஜோடி


பிரிவோம் சந்திப்போம் தொடரில் சந்தித்த ஜோடி ரச்சிதா தினேஷ். பின்னர் ஒருவரையொருவர் பிரிய முடியாமல் திருமணம் செய்துவிட்டனர். தமது காதல் கதையை சொல்லியுள்ளனர். சாதாரணமாக பழகிக்கொண்டிருந்தபோது நியூ இயர் பார்ட்டியொன்றிற்கு ரச்சிதாவை அழைத்து சென்றிருக்கிறார் தினேஷ். அங்கு நண்பர்களிடம் "நான் கட்டிக்கப்போறது இவவைத்தான்" என அறிமுகப்படுத்தி விட்டாராம். பயங்கர அப்செட்டில் ரச்சிதா போய்விட்டராம். கடுமையாக யோசித்து விட்டு, இரண்டு மாதத்தின் பின் எஸ்எம்எஸ் மூலம்தான் காதலை ஏற்றுக்கொண்டாராம்.



## ஆல்யாவின் காதல்

ராஜா ராணி சீரியலில் செம்பாவாக நடித்துக் கொண்டிருக்கிறார் ஆல்யா மானஸா. நியூமோரலஜி பார்த்து மானஸா என்ற பெயரை தன்னுடன் வைத்துக்கொண்டார். ஆனால் சில வருடங்களிலேயே மானஸ் என்ற பெயரில் காதலன் கிடைத்துள்ளார். மானஸிடம் போய் தானே ப்ரபோஸ் செய்ததாக ஆல்யா சொன்னார். "என்னோட சின்ன இதயத்துக்குள்ள இதுக்குமேல என்னால அடைகாத்து வைச்சிருக்க முடியல. ஒப்பினா கேட்கிறேன். உன்னோட சேர்ந்து வாழ ஆசைப்படுறேன்" என்றுதான் ப்ரபோஸ் செய்தாராம். அதற்கு பின்னர் நிறைய பிகு பண்ணித்தான் ஓகே சொன்னாராம். "நான் கொஞ்சம் மொடர்ன் டைப். மொடர்ன் பெண்கள் ஏமாற்றிவிடுவார்கள் என மானஸ் சொல்லிக் கொண்டிருக்கிறான். இன்னும் என்னை நம்பாதது வருத்தமாக உள்ளது" என சென்ரிமென்ராக பேசியுள்ளார்.





## சினி விமர்சனம்

# நாச்சியார்...

| | |
|---|---|
| நடிப்பு | : ஜோதிகா, ஜி.வி.பிரகாஷ் குமார், இவானா, தமிழ்க்குமரன், ராக்லைன் வெங்கடேஷ், தக்ஷா. |
| ஒளிப்பதிவு | : தேனி ஈஸ்வர் இசை: இளையராஜா |
| தயாரிப்பு | : பி ஸ்டுடியோஸ், ஈஒஎன் ஸ்டுடியோஸ். |
| இயக்கம் | : பாலா |

அன்பான ஏழை காதல் ஜோடி ஜி.வி.பிரகாஷ் குமார், இவானா. காதலிக்கும் போதே கர்ப்பமாகி விடுகிறார், இவானா. இவர் வயது 17 என்பதால், ஜி.வி.பிரகாஷ் மீது பாலியல் குற்ற வழக்கு பாய்கிறது. சிறார் சீர்திருத்தப் பள்ளியில் அடைக்கப்படுகிறார். மனிதநேயம் கொண்ட நேர்மையான போலீஸ் அதிகாரி ஜோதிகா பாதுகாப்பில் அடைக்கலமாகிறார், இவானா. வழக்கை விசாரிக்கும் ஜோதிகாவுக்கு அதிர்ச்சியான தகவல் கிடைக்கிறது. இவானாவுக்குப் பிறந்த குழந்தை, ஜி.வி.பிரகாஷ் குழந்தை அல்ல என்கிறது டி.என்.ஏ ரிப்போர்ட். வெளிநாட்டுப் பயணத்தை விட்டுவிட்டு, இவானா கர்ப்பத்துக்குக் காரணமானவனை கண்டுபிடித்து ஜோதிகா துவம்சம் செய்வதுதான் மீதி கதை. எளிய காதல், நேர்மையான போலீஸ் அதிகாரி சந்திக்கின்ற பிரச்னைகள், கிரைம் இன்வெஸ்டிகேஷன் கலந்து தந்திருக்கிறார், பாலா. அதிக காலம் கடுமையாக உழைத்து தரும் படங்களைவிட, குறுகியகால நாச்சியார் படம், அவற்றுக்கு ஈடாக, சிலவற்றைவிட மேலாகவே இருக்கிறது. நாச்சியாராக வந்து, நடிப்பில் வெளுத்துக்கட்டி இருக்கிறார் ஜோதிகா. 'ஹாய்... செல்லம்னு கொஞ் சுவேன்னு நினைக்கிறியா? சங்கை அறுத்துருவேன்' என்று மிரள வைக்கிறார். கணவனிடம், 'வார்த்தைல லிமிட் இருக்கட்டும்' என்கிறார். துறுதுறு பார்வை, கம்பீர நடை, திமிறினால் அடி என, பொம்பளை சிங்கமாகவும் பாய்ந்திருக்கிறார்.

இவானாவை தன்னுடன் சேர்த்துக்கொண்டு, 'அவ எனக்கு மகள் மாதிரி' என நெகிழவைக்கிறார். ஜோதிகாவின் சினிமா கேரியரில் நாச்சியாருக்கு முக்கிய இடம் உண்டு. பிளேபாயாக வலம் வந்த ஜி.வி.பிரகாஷ், இதில் நல்ல நடிகராகவும் மாறியிருக்கிறார். அரைக்கால் பேண்ட், அழுக்குச் சட்டை, பரட்டைத்தலை என ஆளே மாறியுள்ளார். இவானாவுடனான காதல், அவர் மீதான அக்கறை, போலீஸ் முன் தெனாவெட்டாக உண்மை பேசுவது என, பாலாவின் பட்டறையில் பட்டை தீட்டப்பட்டிருக்கிறார். எந்த முகப்பூச்சும் இல்லாமல், அன்புக்கு ஏங்கும் அடித்தட்டுப் பெண்ணாக வாழ்ந்து இருக்கிறார், இவானா. இயல்பாக காதல் அரும்புவதை, அற்புதமாக ஆடியன்சுக்குக் கடத்தியுள்ளார். முதலில் துள்ளித்திரியும் அவர், தாயான பிறகு ஆளே மாறிவிடுவது ஆச்சரியம். நேர்மையான போலீஸ் ராக்லைன் வெங்கடேஷ், தமிழ்க்குமரன், கொலப்புள்ளி லீலா, தக்ஷா, யதார்த்தமான நீதிபதி என, ஒவ்வொரு கதாபாத்திரமும் மனதில் நன்கு பதிகிறது. 10 ரூபாயில் தொடங்கும் ஜி.வி.பிரகாஷ், இவானாவின் காதல் எளிமையும், இனிமையும் கலந்து மணக்கிறது. எளியவர்கள் மீதான வலிய மனிதர்களுடைய பாலியல் வன்முறையை, அதிக கோபத்துடன் பதிவு செய்திருக்கிறார் பாலா. இவானாவைக் கெடுத்தது அவனாக இருக்குமோ, இவனாக இருக்குமோ என்கின்ற சந்தேகத்துடனேயே பயணிக்கிற திரைக்கதையில், மதங்களின் மீதான தன் பார்வையையும் பதிக்கிறார். வில்லனைப் பார்த்து ஜோதிகா சொல்லும் அந்த கெட்ட வார்த்தை, சென்சாரால் மியூட் செய்யப்பட்டுள்ளது.

போலீஸ் துறையில் இருக்கும் நல்லவர்கள், கெட்டவர்கள், இரண்டுக்கும் இடையில் சமரசம் செய்து கொள்பவர்களைப் பற்றி சரியான அளவில் காட்டியிருக்கின்றனர். தேனி ஈஸ்வரின் ஒளிப்பதிவு, நாச்சியாரின் வேகத்துக்கு ஈடுகொடுத்திருக்கிறது. இளையராஜா, வழக்கம்போல் பின்னணி இசையில் ராஜாங்கம் நடத்தியிருக்கிறார். தவறு செய்தவனுக்கு ஜோதிகா தனிப்பட்ட முறையில் கொடுக்கும் தண்டனை, கமர்ஷியல் சினிமாவுக்கானது. வில்லன் அடியாட்கள் அவரை சும்மா விடுவார்களா? இன்றைய காவல்துறையின் சிஸ்டத்தில், ஒரு பெண் போலீஸ் அதிகாரி, படத்தில் வருவதுபோல் சர்வ பலத்துடன் வலம் வர முடியுமா என்பது போன்ற கேள்விகள் எழுந்தாலும், நாச்சியார் கம்பீரமானவள்.

### கேரள அழகிக்கு வந்த வாய்ப்பு

ஜீஜீபங்கேற்று வெற்றிபெற்றவர் பிரியா பிரகாஷ் வாரியார். அப்போது அளித்த பேட்டியில், சினிமாவில் முன்னணி நடிகையாக வேண்டுமென்றார். இப்போது அடார் லவ் மலையாள படத்தில் அறிமுகமாகி, தனது கண்ணசைவுகள் மூலம் இணையத்தளத்தில் பிரபலமாகி விட்டார். இதுபற்றி அவர் கூறும்போது "இந்த பாடல் ஹிட்டாகுமென்று எனக்கு தெரியும். ஆனால் உலகளவில் ஹிட்டாகுமென்று நினைக்கவில்லை. இந்த பாடலில் ஏதாவது மேனரிசம் செய்ய வேண்டுமென இயக்குனர் சொன்னார். ஐடியாவும் கொடுத்தார். பிறகு என் புருவத்தை உயர்த்தி கண்ணடித்து காண்பித்தேன்.

இயக்குனருக்கு அந்த மேனரிசம் பிடித்தது. அந்த நடிகரையும் கண்ணால் பேச வைத்தார். இந்தப்படத்தில் சின்ன வேடத்தில் நடிக்கத்தான் என்னை தேர்வு செய்தனர். நான் கண்ணால் பேசியதில் இயக்குனர் மிக இம்பிரஸ் ஆகி, உடனே ஸ்கிரிப்டை மாற்றினார். இப்போது என்னை முக்கிய வேடத்தில் நடிக்க வைத்துள்ளார். தமிழில் நடிக்கவும் ஆர்வமாக உள்ளேன். தமிழில் பிடித்த நடிகர் விஜய் சேதுபதி. இந்த பாடலின் பின் பிரியாவை இன்ஸ்டகிராமில் பின்தொடர்பவர்களின் எண்ணிக்கை 23 இலட்சமாக அதிகரித்துள்ளது. அனுஸ்காவை பின்தொடர்பவர்கள் 20 இலட்சம்தான். ஒரேநாளில் ஆறு இலட்சம்பேர் பின்தொடர தொடங்கியுள்ளனர். உலகளவில் பிரியாவுடன் சேர்த்து வெறும் மூன்றுபேரைத்தான் ஒரேநாளில் இத்தனைபேர் பின்தொடர்ந்துள்ளனர்.




### கவர்ச்சி உடை கொடுத்த இயக்குனர்!

சிலந்தி, ரணதந்த்ரா படங்களை தொடர்ந்து இயக்குனர் ஆதிராஜன் இயக்கும் படம் அருவா சண்ட. இந்த படத்தின் ஹீரோயின் அறிமுக பாடல்காட்சி நீர்வீழ்ச்சியொன்றில் படமாக்கப்பட்டது. தரன் இசையில் வைரமுத்து எழுதிய "ஆற்றில் ஒரு மீனாக காட்டில் ஒரு மானாக" என்ற பாடல் படமாக்கப்பட்டது. இந்த பாடல்காட்சியில் ஹீரோயின் மாளவிகா மேனன் அணிய கவர்ச்சியான ஆடைகொடுத்து, அதை அணிந்துதான் பாடல்காட்சியில் ஆட வேண்டுமென இயக்குனர் நிர்ப்பந்தித்துள்ளார். இதுவரை அப்படியான கவர்ச்சி உடைகள் அணிந்ததில்லையென மாளவிகா மறுத்துள்ளார். இதனால் ஒரு மணிநேரம்-படப்பிடிப்பு தாமதமானது. நடன இயக்குனர் ராதிகாவும், மாளவிகாவிற்கு புரிய வைக்க முயன்றார். கடைசியில் கவர்ச்சி கொஞ்சம் குறைவான ஆடைகள் கொடுத்து, நடனக்காட்சி படமாக்கப்பட்டது.

### ரைசாவின் காதல் கதை

யுவன் சங்கர்ராஜா தயாரிக்கும் பியார் பிரேமா காதல் படத்தில் ஹீரோயினாக நடிக்கிறார் ரைசா. இவர் தனுஷின் வேலையில்லா பட்டதாரி 2 படத்தில் கஜோலின் உதவியாளராக நடித்தவர். பின்னர் பிக்பாஸின் மூலம் பிரபலமானார். மொடலிங்கில் இருந்தபோதே, சினிமாவில் நடிக்க வேண்டுமென்ற ஆசையுடன் ரைசா இருந்திருக்கிறார். ஆனால் அவரது குடும்பத்தில் யாரும் சினிமாவில் இல்லாததால், ஆசை நிறைவேறவில்லையாம். இப்பொழுதுதான் சினிமா வாய்ப்புக்கள் வர ஆரம்பித்துள்ளன. அதிக படங்களில் நடிக்க ஆசைப்படவில்லையென்றிருக்கிறார். அத்துடன் ரைசாவிற்கு காதல் திருமணம் செய்யத்தான் ஆசையாம்.

### அப்பாவுடன் நடிக்கும் வரலட்சுமி


ஏ.வெங்கடேஷ் இயக்கத்தில் பாம்பன் படத்தில் நடித்து வருகிறார் சரத்குமார். பழமையும் புதுமையும் கலந்த கதையாம் இந்த படம். சரத்குமாரின் மகள் வரலட்சுமியும் முக்கியமான-வேடமொன்றில் நடிக்கிறார். வரலட்சுமி ஹீரோயின் இல்லை. என்றாலும் அதிரடி அக்சனுடன் கூடிய அசத்தலான பாத்திரமாம். அப்பாவுடன் வரலட்சுமி சேர்ந்து நடிக்கும் முதல்படம் இது. அப்பாவுடன் நடிப்பதால் உற்சாகமாக இருக்கிறேன் என்கிறார் வரலட்சுமி.

### அனுஷ்கா பேசாததற்கு காரணம்!

அனுஷ்கா சினிமாவிற்கு வந்து 12 வருடங்கள் ஆகிறது. பல முன்னணி நடிகைகள் தமது படங்களிற்கு தாங்களே டப்பிங் பேசி வருகிறார்கள். ஆனால் அனுஷ்கா தமிழ், தெலுங்கில் 45 படங்களில் நடித்தும், இன்னும் ஒரு படத்திலும் டப்பிங் பேசவில்லை. இது குறித்து அனுஷ்கா கூறும்போது "நான் நடிக்கும் படங்களில் நானே டப்பிங் பேச வேண்டுமென்பது எனது ஆசை. சினிமாவில் பிரபலமான பின்னர் அந்த ஆசை அதிகமாக இருக்கிறது. ஆனால் இதுவரை எந்த இயக்குனருமே தாங்களாக என்னை டப்பிங் பேச சொன்னதில்லை. அதற்கு காரணம் இருக்கிறது. என் குரல் சிறுமியினுடையதை போலிருக்கும். வீட்டில்கூட குழந்தை மாதிரி கதைக்கிறாய் என கிண்டல் செய்வார்கள். பாகுபலி, பாகமதி, அருந்ததி படங்களில் கம்பீரமான வேடங்களை ஏற்றேன். அதற்கு சிறுமியின் குரலில் டப்பிங் பேசினால் நல்லாவா இருக்கும்?" என கூறியுள்ளார்.

### நானியுடன் ஜோடியில்லை

ராம் சரணுடன் ரங்கஸ்தலம் படத்தில் ரொமான்ஸ் செய்துள்ள சமந்தா, அடுத்ததாக ஸ்ரீராம் ஆதித்யா இயக்கும் படத்தில் நானியுடன் ரொமான்ஸ் செய்யப்போவதாக செய்தி வெளியானது. இதைப்பற்றி நானி ஒரு தகவலை வெளியிட்டுள்ளார். அதில் சமந்தாவுடன் மீண்டும் நடிக்க வேண்டுமென்ற ஆசையுள்ளது. ஆனால் கிருஸ்ணார்ஜூனா யுத்தம் படத்தை அடுத்து ஸ்ரீராம் ஆதித்யா இயக்கும் படத்தில் எனக்கு ஜோடியாக சமந்தா நடிப்பதாக வெளியான தகவலில் உண்மையில்லை. அதில் சமந்தாவை நடிக்க வைப்பது குறித்த எந்த பேச்சும் நடக்கவில்லை. தற்போது நான் தயாரித்து வெளியாகியுள்ள படத்தின் வெற்றியை கொண்டாடிக்கொண்டிருக்கிறேன் என்றுள்ளார். நானியும், சமந்தாவும் மூன்று படங்களில் இணைந்து நடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.





எம்.ஜி.ஆர்
**100**
நெடுந்தொடர் 95

# கருணை உள்ளம் கொண்டவர்!



ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** விலங்குகள் மீது மிகுந்த அன்பு கொண்டவர். தன்னுடன் சண்டைக் காட்சிகளில் நடிக்கும் நடிகர்களுக்கு அடிபட்டு விடக்கூடாது என்பதில் கவனமாக இருப்பார். அதேபோல, விலங்குகளுக்கும்கூட ஆபத்து ஏற்படக்கூடாது என்று நினைப்பார். தன் வீட்டிலேயே சில விலங்குகளை வளர்த்து வந்தார்!

எம்.ஜி.ஆர் ரசிகர்களுக்கு அவரது படங்களில் வரும் சண்டைக் காட்சி கள் சர்க்கரைப் பொங்கல். அவருடன் சண்டைக் காட்சிகளில் நடித்த நடிகர்களில் ரசிகர்களால் மறக்க முடி யாதவர் ஜஸ்டின். 'ரகசிய போலீஸ்', 'அடிமைப் பெண்', 'இதயக்கனி', உட்பட எம்.ஜி.ஆரின் கடைசிப் படமான 'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' வரைபலபடங்களில் ஜஸ்டின் நடித்துள்ளார். அவரது ஆஜானுபாகுவான தோற்றத்தையும் சண்டைக் காட்சிகளில் திறமையையும் பார்த்த எம்.ஜி.ஆர்., தன்னுடைய பல படங்களில் பெரும்பாலும் தனித்தே மோதும் வாய்ப்பை ஜஸ்டினுக்கு வழங்கினார். அவை படத்தின் 'ஹைலைட்'டாக இருக்கும்.

'இதயக்கனி' படத்தில் பெங்களூர் அரண்மனையில் ஜஸ்டினுடன் மோதும் சண்டைக் காட்சியின் இறுதியில், எம்.ஜி.ஆர் அடித்ததும் மாடிப் படிகளில் குப்புறப்படுத்தவாறே ஒவ்வொரு படியாக தடதடவென்று ஜஸ்டின் சறுக்கி விழும் காட்சி ரசிகர்களின் கைதட்டலைப் பெறும். இதுபோன்ற காட்சிகளில் நடிப்பவர்களுக்கு அடிபடாமல் இருப்பதற்கான உத்திகளை அவர்களுக்கு எம்.ஜி.ஆரே சொல்லிக் கொடுப்பார்!

அந்த அளவுக்கு நடிகர்கள் மீது அக்கறை கொண்டவர். அந்த அக்கறையால் தான், புகழ்பெற்ற தயாரிப்பாளரும் இயக்குநருமான கே.சுப்பிரமணியம் மற்றும் திரைத்துறை வல்லுநர்கள் சேர்ந்து 1950ம் ஆண்டு உருவாக்கிய 'தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை' அமைப்பையும், பின்னர் உருவான 'தென்னிந்திய துணை நடிகர்கள் சங்கம்' என்ற அமைப்பையும் தொடர்ந்து, எம்.ஜி.ஆரின் முயற்சியால் 1952ம் ஆண்டு 'தென்னிந்திய நடிகர் சங்கம்' உருவானது. ஆரம்ப காலத்தில் அந்த சங்கம் இயங்க தன் வீட்டிலேயே ஒரு பகுதியை ஒதுக்கிக் கொடுத்ததோடு, பின்னர், இப்போது சென்னை தியாகராய நகரில் உள்ள இடத்தை வாங்குவதிலும் முக்கிய பங்காற்றினார். சுமார் 22 கிரவுண்டு உள்ள அந்த இடம் அப்போது 75 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கப்பட்டது. வசூலான 35 ஆயிரம் போக மீதமுள்ள 40 ஆயிரம் ரூபாயை எம்.ஜி.ஆர் தனது சொந்தப் பணத்தில் இருந்து கொடுத்து உதவினார்!

ஒரு தாய், நான்கு குழந்தைகளை வைத்தபடி இருக்கும் நடிகர் சங்க இலச்சினையை உருவாக்கியதும் எம்.ஜி.ஆர்தான்! அந்த இலச்சினை பொறித்த மோதிரத்தை நீண்ட காலம் அணிந்திருந்தார். நடிகர் சங்கத் தலைவராகவும் பதவி வகித்து அதன் வளர்ச்சிக்குப் பணியாற்றியுள்ளார்.

'வேட்டைக்காரன்' படத்தின் கிளைமாக்ஸில் 20 அடி உயரமான இடத்தில் இருந்து ஸ்டன்ட் நடிகர் கே.பி.ராமகிருஷ்ணன் கீழே விழ வேண்டும். அவர் விழும் இடத்தில் பாம்புகள் இருக்கும். ராமகிருஷ்ணனைப் பார்த்து எம்.ஜி.ஆர், "கீழே மெத்தை போடச் சொல்லட்டுமா?" என்றார். "இல்லண்ணே, நான் பார்த்து குதிச்சுடறேன்" என்றார் ராமகிருஷ்ணன். பின்னர், எம்.ஜி.ஆர் கூறிய வார்த்தைகள், வாயில்லா ஜீவன்களையும் அவர் எப்படி நேசித்தார் என்பதைக் காட்டும். ராமகிருஷ்ணனிடம், "பாம்புகள் மேலே படாமல் பார்த்து குதிக்கணும். பாம்புகள் மேலே விழுந்தால் அவை செத்துடும், பாவம்" என்று கூறினார்.

'நல்ல நேரம்' படத்தில் எம்.ஜி.ஆர் நான்கு யானைகளை வளர்ப்பார். தினமும் படப்பிடிப்புக்கு வரும்போது யானைகளுக்காக நிறைய உருண்டை வெல்லம், கரும்பு, வாழைத்தார்கள் வாங்கி வந்து யானைகளுக்குக் கொடுப்பார். அவைகள் சாப்பிடுவதைப் பார்த்து ரசித்து மகிழ்வார்!

தனது வீட்டில் கரடிக் குட்டியையும் நாய்களையும் எம்.ஜி.ஆர் வளர்த்து வந்தார். கரடிக் குட்டி தினமும் காலையில் அவர் கையால்தான் ஃபீடரில் பால் குடிக்கும். தன் வீட்டில் வளரும் மிருகங்களை கவனிக்க தனியே ஒரு மருத்துவரையும் நியமித்திருந்தார். கரடிக்கு மூக்கில் சங்கிலி இணைக்க வசதியாக மருத்துவரின் உதவியுடன் துளையிட முயன்றபோது அது இறந்துவிட்டது. எம்.ஜி.ஆர். மிகவும் வேதனைப்பட்டார்.

வீட்டில் இரண்டு சிங்கங்களையே எம்.ஜி.ஆர் வளர்த்தார். ஒன்றின் பெயர் ராஜா. பெண் சிங்கத்தின் பெயர் ராணி. இதில் ராஜா என்ற சிங்கத்துடன்தான் 'அடிமைப் பெண்' படத்தில் கிளைமாக்ஸில் எம்.ஜி.ஆர் மோதுவார். அந்தக் காட்சியை அற்புதமாக படமாக்கினார். அது ரசிகர்களின் பெரும் வரவேற்பை பெற்றது. "சிங்கத்தின் வாயை தைத்து விடலாம்" என்று சிலர் யோசனை கூறிய போது எம்.ஜி.ஆர் மறுத்துவிட்டார். ராணி சிங்கம் 'அடிமைப் பெண்' படம் எடுக்கும் முன்பே இறந்துவிட்டது.

பின்னர், ராஜா சிங்கத்தை மிருகக் காட்சி சாலைக்கு எம்.ஜி.ஆர் கொடுத்து விட்டார். அங்கு சில ஆண்டுகளுக்குப் பின் முதுமையால் அது இறந்துவிட்டது. அந்த சிங்கத்தின் மேல் வைத்திருந்த பிரியத்தால் அதன் உடலை வாங்கி பாடம் செய்து வைத்திருந்தார். எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் எம்.ஜி.ஆரின் கருணை உள்ளத்துக்குச் சான்றாய், அவரது நினைவு இல்லத்தில் கண்ணாடிப் பேழைக்குள் இன்றும் கம்பீரமாக நிற்கிறான் 'ராஜா'!

தொடரும்...

தமிழ்ப் படத்தில் முதன்முதலில் கான்டாக்ட் லென்ஸ் அணிந்து நடித்த ஹீரோ எம்.ஜி.ஆர்தான்! 'நாளை நமதே' படத்தில் சங்கர் என்ற பாத்திரத்தில் வரும் எம்.ஜி.ஆர் கான்டாக்ட் லென்ஸ் அணிந்து நடித்திருப்பார்! 'படகோட்டி' படத்தில் படம் முழுவதும் செருப்பு அணியாமல் எம்.ஜி.ஆர் நடித்திருந்தார்!





# மதுவும் மது சார்ந்த விடயங்களும்

சாள்ஸ் ஜே போர்மன்

தனக்குப் பின்னால் வரச்சொல்லிக் சைகை காட்டிவிட்டுக் கடைக்குள்ளே போன அவர் பின்னால் போனேன். உள்ளே பலபெரிய போத்தல்களில் நீர் போன்ற திரவம் இருந்தது. அவற்றில் ஒன்றிலிருந்து ஒரு சிறு குவளையில் ஊற்றி எனக்குக்கொடுத்தார்.

“இப்படியே குடிப்பதா அல்லது ஏதாவது கலக்கவேண்டுமா?”

“முதல் முறையாக ருசி பார்க்கிறாயல்லவா, அப்படியே குடி!”

அப்படியே செய்தேன். மின்சார அலையொன்று மேல் நோக்கியும் வயிற்றை நோக்கியும் ஓடியது போலிருந்தது.

“ஹூம், நல்லாயிருக்கு!”

மீண்டும் ஒரு முறை குவளையில் ஊற்றிக் கொடுத்தார். அதை எடுத்துக் கொண்டு இருவரும் மீண்டும் அவ்வறைக்கு வெளியே வந்தோம்.

வாசலிலிருந்த கதிரையில் உட்கார்ந்தேன். கடையின் வாசலில் படர்ந்திருந்த திராட்சைக் கொடி அந்த உச்சி வெயில் நேரத்தில் காற்றிலசைந்து ஒருவித வாசத்தைப் பரப்பிக்கொண்டிருந்தது

உள்ளே போன பானத்தின் தாக்கம் தணியக் கொஞ்ச நேரமானது. அதன் பின் உணர்வு உற்சாகத்தைத் தந்தது.

ஸியன்னா கிராமத்தை நோக்கி நாங்கள் போய்க்கொண்டிருக்கக் காரணம் ஸூமா பானத்துக்காகவும்தான் என்று அந்த மாதுக்குச் சொன்னேன். அவற்றை எப்படிச் செய்கிறார்கள் என்று கேட்டேன்.

“கொஞ்சம் பொறு, நான் எனது மகனைக் கூப்பிடுகிறேன், அவனுக்கு ஆங்கிலம் தெரியும், விளக்கமாகச் சொல்வான்.”

அக்கடையை ஒட்டியிருந்த வீட்டுக்குள் போய்த் தனது மகனைக் கூட்டிக் கொண்டுவந்து அறிமுகப்படுத்தினார். ஸக்கரி சுமார் 30வயது மதிக்கக்கூடிய சிரித்த முகத்துடனான இளைஞன். ரோடோஸ் நகரில் தவறணை ஒன்றில் வேலை செய்வதாகச் சொன்னான்.

மதுபானங்களிடையே பழகிவரும் ஸக்கரியிடம் இருந்து ரோடோஸின் வெவ்வேறு மதுவகைகளைப் பற்றி நிறையத் தெரிந்துகொள்ள முடிந்தது.

சில விதமான மதுபானங்களுக்கு கிரீஸ் பெயர்பெற்றது. பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளைப் போல இங்கும் பொதுவாக திராட்சைரச பானமான “வைன்” தயாரிக்கப்படுகிறது. ரோடோர்ஸில் வைன் 2,400 வருடங்களாகத் தயாரிக்கப்படுகிறது. இப்போதும் தீவின் 7,500 ஏக்கர்களில் திராட்சை பயிரிடப்படுகிறது. நாட்டுப் பக்கங்களிடையே நாம் பிரயாணம் செய்தபோது ஆங்காங்கே வைன் தயாரிக்குமிடங்களை காணமுடிந்தது, ஒருவைன் தொழிற்சாலைக்குள் சென்று அவர்களின் செய்கைமுறைகளையும் அறிந்துகொள்ள முடிந்தது. ரோடோஸ் சில வகையான வைன் வகைகளுக்குப் பிரசித்தி பெற்றது என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

“ஊஸோ” என்பது கிரீஸின் இன்னொரு முக்கிய மதுவகை. தனக்குள் சாதாரணமாக 40 விகிதமான அல்கஹோலைக் கொண்ட இப்பானம் கிரீஸின் வெவ்வேறு பாகங்களிலும் அப்பிராந்தியத்துக்கான சுவையுடன் பிரபலமாக இருக்கிறது. ரோடோஸின் பங்குக்கு மூன்று விதமான ஊஸோ தயாரிக்கப்படுகின்றன, பிரபலமானவையாக இருக்கின்றன.

1400 ம் ஆண்டுகளில்தான் ஊஸோ தயாரிப்பு ஆரம்பிக்கப்பட்டது. இதை முதலில் மடங்களில் வாழ்ந்த கிறீஸ்தவ துறவிகள்தான்சோம்பு எனப்படும் பெருஞ்சீரகச் சுவையுடன் ஊஸோ பானத்தைக் கண்டுபிடித்தார்கள்.

ஊஸோ பானம் வோட்கா போன்று கண்ணாடி நிறத்தில் இருக்கிறது. இதை நீர் கலந்து சிற்றுண்டிகளுடன் தான் குடிக்கிறார்கள். நீர்கலக்கப்பட்டவுடன் ஊஸோ வெள்ளை நிறத் திரவமாகிறது.

வயிற்றிலிருக்கும் வாயுத் தொல்லையைக் குறைக்கவும், உணவைச் சீரணமாக்கவும், பசியைத் தூண்டவும் சோம்பை மெதுவாகவாய்க்குள் மென்று அதன் ரசத்தை விழுங்கிக் கொண்டிருப்பது உதவும் என்று என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதே நம்பிக்கை எப்படியோ கிரேக்க தேசத்திலும் பரவியதாலேயே சோம்பு சேர்க்கப்பட்ட இப்பானம் உருவாகியிருக்கிறது.

ஊஸோவை விடவும் அல்கஹோல் காட்டமுள்ள மதுதான் நான் சுவைத்த ஸூமா. பெரும்பாலும் வீடுகளிலும், சிறிய அளவில் குடிசைத் தொழிலாகவும் கிரீஸில் தயாரிக்கப்படும் ஸூமா சில பகுதிகளில் அத்திப் பழத்தால் ஆனது, வேறு சில பகுதிகளில் திராட்சைப்பழத்தால் ஆனது. பழவகைகளின் தன்மை வெவ்வேறு மண்ணாலும், வெவ்வேறு காலநிலையாலும் மாறுபடும். அத்துடன் வெவ்வேறு பிராந்தியங்களில் தயாரிப்பு வழியில் சிறு வேறுபாடுகள் இருக்கின்றன. அதனால் அவைகளின் ருசியும் வேறுபடும்.

அப்படித்தான் ரோடோஸின் அந்தக் கிராமப் பகுதிகளில் தயாரிக்கப்படும் ஸூமா மது அதன் சுவைக்காகவும், தன்மைக்காகவும் மிகவும் பிரபலமானதாகக் கருதப்படுகிறது. அப்பிராந்தியத்தில் உற்பத்தியாகும் திராட்சைப் பழங்களில் இருந்து ஸூமா தயாரிக்கப்படுகிறது. அக்கனிகளைக் கூழாக்கி சுமார் 20 நாட்கள் தொடர்ந்து காய்ச்சப்பட்ட பின் அதிலிருந்து மது எடுக்கப்படுகிறது.

எனக்கு ஒரு போத்தல் ஸூமா விலைக்குத் தர முடியுமா என்று ஸக்கரியிடம் கேட்டேன். தாம் அந்தக் கடைக்கு வருபவர்களுக்கு சிறிய அளவில் விற்பது தவிர்த்து சாதாரணமாக விற்பதில்லை என்றாலும் ஒரு போத்தல் மட்டும் தரமுடியும் என்று தாயுடன் கதைத்துவிட்டுச் சொன்னான் ஸக்கரி.

அவர்களுடைய அன்பான வரவேற்புக்கு நன்றி சொல்லிவிட்டு அங்கிருந்து ஸியன்னா கிராமத்தை நோக்கிப் புறப்பட்டோம்.












அக்ரமிட்டிஸ் மலையின் அடிவாரங்களுக்கு இடையே சில கிலோ மீற்றர்கள் ஓடி பிரசித்திபெற்ற அக்கிராமத்தின் வாசலில் இருந்தே சுற்றுலாப் பயணிகளுக்கான சிறு சிறு கடைகள் எங்களை வரவேற்றன. அகலம் குறைந்த அந்த வீதியெங்கும் பல நாட்டுமக்களாலும் அவர்கள் வந்த வாகனங்களாலும் நிறைந்திருந்தன. கிராமத்தின் சதுக்கம் போன்ற இருந்த ஒரு இடத்தில் வாகனங்கள்நிறுத்த இடமிருந்தது.

அச்சதுக்கத்தில் இருந்து சில குறுகலான வீதிகள் கிராமத்தின் உள் பகுதிஷ்ய நோக்கி ஓடின. ஒவ்வொரு கிராமத்திலும் கட்டாயமாக இருக்கக் கூடிய தேவாலயமும் அங்கேயே இருந்தது. கிட்டத்தட்ட 250 மீற்றர் தூர வீதி மட்டுமே அக்கிராமத்தின் முக்கிய வியாபாரப்பகுதியாக இருந்தது.

சுற்றுலாக் கையேடுகளில் விபரிக்கப்பட்டிருந்தது போலவே ஒலிவ், ஒலிவம் எண்ணெய்,ஸூமா மது,வைன், விதம் விதமாகச் சுவைப்படுத்தப்பட்ட தேன், பழரசங்கள் போன்றவைகளால் அப்பகுதியிலிருந்த கடைகளெல்லாம் நிறைந்திருந்தன. அதைத் தவிர ஒலிவ் எண்ணெய், ஸூமா, வைன்

தொடர்ச்சி 18-ம் பக்கம்...

10-ம் பக்க தொடர்ச்சி...


மகிந்த ராஜபக்சவை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டுள்ளார்.

"நான் தற்போது ஜனாதிபதியுடன் இருக்கிறேன். "யோ" கைதுசெய்யப்பட்டதற்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென ஜனாதிபதி கூறுகிறார். இதனை சாகலவே செய்ததாக அவர் கூறுகிறார்" என்று நாமல் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த மகிந்த ராஜபக்ச, " சரி சரி...! எனது மகனைக் கைதுசெய்தமை குறித்தும் நான் பார்த்துக் கொள்கிறேன்." என்று கூறி தொலைபேசி தொடர்பைத் துண்டித்துள்ளார்.

**எழுத்தில் கவனமாக இருந்த சம்பந்தர்!**

அரசியல் குழப்பங்களிற்கு பின்னர் 19ம் திகதி பாராளுமன்றம் கூடியது. அதில் ஹைலைட்டான விசயம், எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந் தனின் உரை. "தமிழீழம் மலர்வ தென்றால் அது எங்களால் அல்ல, தாமரை மொட்டினாலேயே" என்ற அவரது உரை மறுநாள் ஊடகங்களில் அதிக கவனத்தை ஈர்த்தது.



எனினும், இந்த செய்தியை மீறி, இரா.சம்பந்தன் தூங்கிக் கொண்டி ருந்தார் என்பதை போன்ற அபிப்பி ராயத்தை ஏற்படுத்த சில ஊடகங்கள் மறுநாள் முயற்சித்திருந்தன. சம்பந் தனை உரையாற்ற அழைத்தபோது அவர் , அதை கவனிக்காமல் உட்கார்ந்திருந்தார் என அந்த செய்தி திரிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் அன்று சம்பந்தன் ஆற்றிய முக்கியத்துவமிக்க உரையை, பாராளுமன்றத்திற்கு வந்த பின்னரே தயார் செய்திருக்கிறார். அமர்வுகள் நடந்து கொண்டிருந்தபோது, உரையை தயாரிப்பதில் கவனமாக இருந்திருக்கிறார். இந்த சமயத்தில், எதிர்க்கட்சி தலைவர் உரையாற்றுவார் என சபாநாயகர் அறிவித்துள்ளார். சம்பந்தர் தனது உரையை தயாரிப்பதில் குறியாக இருக்க, பக்கத்தில் உட்கார்ந்திருந்த புளொட் தலைவர் சித்தார்த்தன், அவரை தட்டி விசயத்தை சொல்லியிருக்கிறார். இதன்போது சம்பந்தன் எழுந்து, இன்னும் உரையை தயாரித்து முடிக்கவில்லை,இப்பொழுது சுமந்திரன் உரையாற்றுவார் என கூறினார். அதையடுத்து சுமந்திரன் உரையாற்றினார். பின்னர் தனக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்திலேயே அந்த முக்கியத்துவம் மிக்க உரையை சம்பந்தன் ஆற்றினார்.

**காசு... பணம்... துட்டு... மணி...வடமராட்சி!**

நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் வடக்கில் வாக்குக்காக பணமும்,பொருளும் அதிகம் வழங்கப் பட்ட பிரதேசமாக வடமராட்சி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. கரவெட்டி பிரதேசசபை, பருத்தித்துறை பிரதேசசபை பகுதிகளிலேயே தாராள பொருள் விநியோகம் நடந்துள்ளது. சிறிலங்கா சுதந்திரக்கட்சி, பொதுஜன பெரமுன, தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகியன இதில் ஈடுபட்டுள்ளன.

கரவெட்டி பிரதேசசபையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அதிகளவு கவனம் செலுத்தியது. தொண்ட மனாறு, கொற்றாவத்தை, வல்வெட்டி பிரதேசங்களில், சமூகரீதியாக ஒடுக்கப் பட்டவர்களை குறிவைத்து இந்த இலவசங்கள் விநியோகிக்கப்பட்டன. குக்கர், காஸ் சிலிண்டர், பணம் என்பன வழங்கப்பட்டன. அதுதவிர, இமையாணன் பகுதியில் சமூகங் களிற்குள் முரண்பாட்டை ஏற்படுத்தும் துண்டுபிரசுரமும், அந்த பகுதியில் போட்டியிடும் சுதந்திரக்கட்சி வேட்பாளரின் பின்னணியிலேயே வெளியாகியிருந்தது.

இதேவேளை, தமிழ் தேசிய கூட்டமைப்பில் வடமராட்சியில் போட்டியிட்ட ஒருவரும் தாராளமாக பணத்தை செலவிட்டுள்ளார். தேவரையாளி பகுதியில் நெருப்பு பெட்டிக்குள் பணத்தை வைத்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆயிரம் தொடக்கம் ஐயாயிரம் ரூபாவரை வழங்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட வடமராட்சி கிழக்கில் பொதுஜன பெரமுன பணம், பொருள், மதுபானம் தாராளமாக வழங்கியிருந்தது.

---

17-ம் பக்க தொடர்ச்சி...

போன்றவை தயாரிக்கும் விதத்தைக் காட்டும் கண்காட்சிகளும் அமைக்கப் பட்டிருந்தன. அங்கே அவைகளைச் சுவை பார்க்கவும் முடிந்தது.

அழகான அக்கிராமத்தைக் கொஞ்ச நேரம் சுற்றிப் பார்த்தோம். பச்சைப் பசேலென்று இருந்த அப்பிரதேசத்திலிருந்து வெவ்வேறு பக்கத்தில் திரும்பிப் பார்த்தாலும் அழகான காட்சிகளே கண்களையும் மனதையும் கொள்ளை கொண்டன.



ஸியன்னா கிராமத்துக்கு வரும் ஏகப்பட்ட சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க அங்கேயே நிறைய உணவு விடுதிகளும் இருந்தன. அவர்களிடம் இருக்கும் உணவுகள் பற்றி எனக்கு அதிக பரிச்சயம் இல்லாவிட்டாலும் அவைகளுக்குள் என்னென்ன இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளக் கூடியதாக ஒவ்வொரு உணவையும் தட்டுகளில் வைத்து படங்களாக உணவு விடுதிகளின் முன்னால்வைத்திருக்கிறார்கள்.

"லடேரா" என்ற வகையறை உணவுகள் சாதாரணமாக மாமிசங்கள் கலக்காதவை. அவைகளின் முக்கிய பாகமாக ஏதாவது ஒரு மரக்கறி, கூழாக்கப்பட்ட தக்காளியுடன் சேர்ந்து உருவாக்கப்பட்டதாக இருக்கும். அத்துடன் எங்கள் சமையலில் நாங்கள் தேங்காய்ப்பாலைச் சேர்ப்பது போல, தங்கள் சமையலில் தங்கள் நாட்டில் நிறையக் கிடைக்கும் ஒலிவ் எண்ணெயைத் தாராளமாகச் சேர்த்துக்கொள்வது கிரேக்கர் களுடைய வழக்கம். "லடேராவுக்குள்" பச்சை பீன்ஸ், கத்தரிக்காய், உருளைக் கிழங்கு, வெண்டைக்காய், கறி மிளகாய் போன்றவைகளில் ஏதாவது ஒன்று இருக்கலாம். இந்த மரக்கறிகளில் எதைச் சேர்க்கிறார்களோ அதற்கேற்றபடி குறிப்பிட்ட "லடேரா" உணவின் பெயர் மாறும்.

கதிர் தனக்கு "பஸோலாடா" (Fasolada) என்ற பெயருடைய வெள்ளை பீன்ஸ்களையும் கொஞ்சம் கரட் துண்டுகளையும், தக்காளிக் கூழுக்குள் போட்டு அவித்த தட்டுடன் பொரித்த உருளைக்கிழங்குத் துண்டுகளுடன் தரச்சொன்னான். சூப் போல இருந்த அதற்குமேலே கிரேக்க வெள்ளைச் சீஸைத் தூளாக்கித் தூவியிருந்தது.

"மெலிட்ஸானெஸ் இமாம்" (Melitzanes Imam) என்ற உணவு என் கவனத்தைக் கவர்ந்தது. கத்தரிக்காய் + தக்காளி கலந்து சூளையில் செய்யப்படும் அவ்வுணவை நான் ஏற்கனவே துருக்கர்கள், ருமேனியர்கள் செய்து சுவைத்திருக்கிறேன். அவர்கள் அதை "இமாம்பயால்டு" என்று சொல்வார்கள். இமாமுக்குப் [இஸ்லாமியக் குரு] பிடித்த உணவு என்று அதற்கு அர்த்தம் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன், உண்மையா என்பது தெரியாது.

எனக்கு அந்தச் சாப்பாட்டைக் கொண்டுவந்து வைத்தபோது அதன் செய்கைமுறையைக் கேட்டேன். நான் அதைத் துருக்கரிடம்கேட்டுச் செய்ததைவிட வித்தியாசமாக இருந்தது. அவ்வுணவு துருக்கர்கள் கிரேக்கப் பகுதிகளை ஆண்ட காலத்தில் ஏற்பட்ட கலாச்சாரக் கலவை என்றும் உணவு பரிமாறுகிறவர் சொன்னார். அதேவழியாகத்தான் ருமேனியாவிலும் அவ்வுணவு பரவியதாக அங்கிருந்து அறிந்திருக்கிறேன்.

கத்தரிக்காயை எடுத்து இரண்டாக வெட்டி உள்பக்கமாகக் கொஞ்சம் சதையைக் கோதியெடுத்துக்கொண்டு, வெளிப்பக்கத்துக்குள் ஒலிவ் எண்ணெ கொஞ்சமாகத் தெளித்துச் சூளைக்குள் வேக வைக்கிறார்கள்.

உள்ளே கோதியெடுத்ததைச் சிறு துண்டுகளாக்கி வெங்காயம், தக்காளிக் கூழ், உள்ளியுடன் சேர்த்து மெதுவாக ஒலிவ்எண்ணெயில் பொரித்தெடுத்து தேவைக்கேற்ற உப்பும் மிளகுத் தூளையும் போட்டு குறைந்த சூட்டில் வேகவைக்க வேண்டும்.

சூளைக்குள்ளிருந்த கத்தரிக்காய் துண்டுகள் மெதுவான பின்பு உள் பக்கத்தை அதனுள் போட்டு அதன்மீது கொஞ்சம் கறுவாப்பட்டையைத் தூவி மீண்டும் சூளைக்குள் வைத்து வேகவைத்தபின் உணவு தயாராகிவிடுகிறது.

(தொடரும்)

# நஷ்டத்தைத் தவிர்க்க உதவும் பொருள்கள் மேலாண்மை!

9 நீங்களும் பிஸ்னஸ் புள்ளி ஆகலாம்

ஒரு பிஸ்னஸ் வெற்றிகரமாக நடக்க வேண்டும் எனில், அதற்கு ஏழு முக்கியமான மேலாண்மைத்திறமைகள் அவசியம் என்று கூறியிருந்தோம். கடந்த இதழில் ஊழியர்கள் மேலாண்மை பற்றி விரிவாகப் பார்த்தோம். அதற்கு அடுத்தபடியாக, மூலப்பொருள்களை மேலாண்மை செய்வது எப்படி என்பதை இப்போது பார்க்கலாம்.

பொருள்கள் மேலாண்மை என்பது ஒரு பிஸ்னஸுக்கு மிக முக்கியமானது. ஏனெனில், பொருள்கள் விஷயத்தில் நாம் காட்டும் அசட்டுத்தனம் நம்முடைய பிஸ்னஸில் மிகப் பெரிய நஷ்டத்தைக் கொண்டு வந்துவிடும். பெரும்பாலான தொழில்முனைவோர்கள் நஷ்டமடைவது பொருள்களை மேலாண்மை செய்யத் தெரியாத காரணத்தினால்தான்.

மூலப்பொருள்கள் மேலாண்மையில் திட்டமிடல், கொள்முதல் செய்தல், கட்டுப் படுத்துதல், விரைவுபடுத்துதல், போக்குவரத்து, பொருள்களைக் கையாளுதல் ஆகிய ஆறு நிலைகள் உள்ளன. இந்த ஆறு நிலைகளையும் திறம்படச் செய்வதன் மூலம் ஒரு பிஸ்னஸுக்கு உள்ளே வரும் பொருள்களிலிருந்து, வெளியே செல்லும் பொருள்கள் வரையிலான மேலாண்மையை வெற்றிகரமாகவும் லாபகரமாகவும் செய்ய முடியும்.

**எவையெல்லாம் மூலப்பொருள்கள்?**

மூலப்பொருள்கள் மேலாண்மையைச் செய்வதற்குமுன் எவையெல்லாம் மூலப்பொருள்கள் என்பதில் தெளிவு தேவை. பிளாஸ்டிக் பொம்மை தயாரிக்கும் தொழிலை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். அதில் பொம்மையைத் தயார் செய்யப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக், பெயின்ட் மற்றும் பிற அலங்காரப் பொருள்கள் ஆகியவை மட்டுமே மூலப்பொருள்கள் அல்ல. மாறாக, உற்பத்தியின் போது ஊழியர்கள் தங்கள் கைகளில், கால்களில் மாட்டிக்கொள்ளும் கையுறை, காலுறைகள்கூட மூலப் பொருள்கள்தான். அதாவது, நம்முடைய பிஸ்னஸில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ நாம் பயன்படுத்தும் அனைத்துப் பொருள்களுமே மூலப் பொருள்கள்தான்.

மேலும், பொருள்களில் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் வெளியிலிருந்து வாங்கப்பட்ட மூலப் பொருட்கள், உற்பத்தி செய்வதற்கு துணைபுரியும் உபகரணங்கள், உதிரி பாகங்கள், நிறைவு செய்யப்படாத உற்பத்திப் பொருள்கள், நிறைவடைந்த, விற்பனைக்குத் தயார் நிலையில் உள்ள பொருள்கள், விற்பனை ஆகாமல் திரும்ப வரும் பொருள்கள், விற்பனை ஆகி சில காரணங்களால் வாடிக்கையாளர்களால் திருப்பித் தரப்படும் பொருள்கள் எனப் பல வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

**கொள்முதல் திட்டமிடல்**

ஒரு பிஸ்னஸின் மொத்த முதலீட்டில் பொருள்கள் மட்டுமே 60 சதவிகித முதலீட்டைக் கொண்டவையாக உள்ளன. எனவே, அவற்றை சரியாக மேலாண்மை செய்ய வேண்டியது அவசியம். அதற்கு முதலில் என்ன பொருள், எங்கிருந்து கொள்முதல் செய்யப்போகிறோம், என்ன அளவில் கொள்முதல் செய்யப்போகிறோம், என்ன தரத்தில் அந்தப் பொருள் இருக்க வேண்டும்என்பது போன்றவிஷயங்கள் முக்கியமானவை. நம்முடைய பிஸ்னஸ் அளவு என்ன, நம்முடைய இலக்கு என்ன, சந்தையில் உள்ள வாடிக்கையாளர்களின் சதவிகிதம் எவ்வளவு, நம்முடைய பொருளை எவ்வளவு பேர் வாங்குவார்கள் எனப் பல விஷயங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதற்கேற்ப பொருள்களை கொள்முதல் செய்து, உற்பத்தியைத் திட்டமிட வேண்டும்.

கொள்முதல் செய்வதற்கு முன் பொருளின் தரம் மற்றும் விலை உள்ளிட்ட விஷயங்களை நான் கைந்து இடங்களில் விசாரித்த பின்னர் முடிவு செய்யவேண்டும். கொள்முதல் செய்பவரிடம் விலை குறித்து தெளிவாகப் பேசவேண்டும். உங்களுடைய பிஸ்னஸைப் பற்றி அவருக்கு எடுத்துச் சொல்லி இந்த விலையில் கொடுத்தால் கட்டுப்படி ஆகாது என்று பேசி, விலையைக் குறைக்க பார்க்கலாம். ஆனால், உங்கள் விலைக் குறைப்பு, தரத்தில் எந்த சமரசத்தையும் ஏற்படுத்துவதாக இருக்கக் கூடாது. முடிந்தவரை உற்பத்தி செய்யும் இடத்துக்குப் பக்கத்திலேயே பொருள்களைக் கொள்முதல் செய்யும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இது போக்குவரத்துச் செலவுகளைக் குறைக்கும். சரியான நேரத்தில், சரியான அளவில் தரமான பொருள்களாகக் கொள்முதல் செய்ய வேண்டும். கொள்முதல் செய்யும்போது நாம் செய்யும் இது போன்ற சிறு விஷயங்கள் மூலம் நாம் சேமிக்கும் ஒரு சதவிகிதம், நமக்கு ஐந்து சதவிகித லாபத்தைத் தரும்.

**இன்வென்ட்ரி மனேஜ்மென்ட்**

இன்வென்ட்ரி மனேஜ்மென்ட் என்பதுதான் பொருள்கள் மேலாண்மையில் முக்கியமான இடம். பொருள்களின் இருப்பைத் தொடர்ந்து கணக்கில் வைத்துக்கொள்ள வேண்டும். எவ்வளவு பொருள்கள் இருக்கின்றன, எவ்வளவு பொருள்கள் விற்பனைக்குப் போயிருக்கின்றன, எவ்வளவு திரும்பி வந்திருக்கின்றன என்கிற விவரங்கள் அத்தனையும் பதிவுப் புத்தகத்தில் அல்லது மைக்ரோசாஃப்ட் எக்ஸெல் ஷீட்டில் குறிக்கப்படவேண்டும். மேலும், பொருட்கள் வாங்கிய மற்றும் விற்பனை ஆன பில் ரசீதுகளும், இன்வொய்ஸ்களும் சேர்த்து வைக்கப்பட வேண்டும்.

இந்தக் கணக்குப் பதிவுகள்தான் நமது பிஸ்னஸை பிரதிபலிக்கும். பிஸ்னஸில் முன்னேற்றத்தைத் திட்டமிட இந்த விவரங்கள் உதவியாக இருக்கும். இவற்றைக் கணக்கு வைக்காமல் போனால், எந்தப் பொருள் எங்கே போகிறது, எவ்வளவு பொருள் வீணாகிறது என்பது போன்ற எந்த விவரமும் நமக்குத் தெரியாது. அதேபோல், இப்படிக் கணக்கு வைப்பதன் மூலம் சந்தையில் எவ்வளவு பொருள்கள் தேவையாக இருக்கின்றன என்பதையும், பொருள்கள் திரும்பி வந்தால் அதற்கான காரணங்களையும் நம்மால் அறிந்து கொள்ள முடியும்.

மேலும், பொருள்கள் குறித்த கணக்குகளைப் பதிவு செய்வதன் மூலம் தடை இல்லாமல் உற்பத்தி செய்யவும், சந்தைத் தேவையைப் பூர்த்தி செய்யவும் முடியும். புதிய வாய்ப்புகளைக் கண்டறியவும், செயல்பாடுகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தத் தேவையான புதிய திட்டங்களைத் திட்டமிடவும் முடியும். மிக முக்கியமாக, இன்ஷூரன்ஸ், வரிச் சலுகை போன்ற விஷயங்களுக்கு இன்வென்ட்ரி கணக்கு வழக்குகள் மிகவும் உதவிகரமாக இருக்கும்.

விற்பனை ஆகாமல் திரும்ப வரும் பொருள் களையும், ஏதோ சில காரணங்களால் வாடிக்கையாளர்களால் திரும்பத் தரப்படும் பொருள்களையும் அலட்சியப்படுத்தாமல் அவற்றை எப்படி மீண்டும் பிஸ்னஸுக்குப் பயன்படுத்தலாம் என்பதை யோசிக்க வேண்டும். வாடிக்கையாளர் திரும்பத்தருவதற்கான காரணங்களைத் தெரிந்துகொண்டு அவற்றைச் சரிசெய்ய முயற்சிக்கலாம்.

**பேக்கிங் மற்றும் டெலிவரி**

பொருள்களை பேக்கிங் செய்வது, டெலிவரிக்கு கொண்டுசெல்வது போன்றவற்றிலும் கவனம் அவசியம். பொருள்களின் தன்மைக்கு ஏற்ப பேக்கிங் செய்யப்பட வேண்டும். அப்போதுதான் பொருள்கள் வாடிக்கையாளரைச் சென்று சேரும் வரை எந்தச் சேதாரமும் ஆகாமல் இருக்கும். மேலும், வண்டியில் பொருள்களை ஏற்றும்போதும் இறக்கும்போதும் சூப்பர்வைஸிங் அவசியம். அதேபோல், பொருள்களைக் கொண்டு செல்லும் வாகனம், பொருளின் தன்மை மற்றும் அளவுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். செலவைக் குறைக்கிறேன் என்று அதிக அளவில் ஏற்றி அனுப்பவோ அல்லது ஏதோ ஒரு வாகனத்தில் ஏற்றி அனுப்பவோ கூடாது.

பொருள்கள் மேலாண்மையில் இதுபோன்ற நடவடிக்கைகளைத் தீவிரமாகச் செயல்படுத்தும் போது பொருள்கள் டெலிவரி செய்யப்படுவதில் தாமதம் ஏற்படும். இதனால் வாடிக்கையாளர்கள், விநியோகஸ்தர்கள் சற்று சங்கடப்படுவார்கள். ஆனால், அதற்காக சமரசம் செய்துகொள்ளாதீர்கள். அப்போது அது சங்கடத்தை ஏற்படுத்தினாலும் இரு தரப்பினருக்குமே லாபம் தரக்கூடியதாகவே இந்த மேலாண்மை நடவடிக்கை இருக்கும்.

இப்படி நம்முடைய பிஸ்னஸில் உள்ள பொருள்கள் அனைத்தையும் டிமாண்ட் மற்றும் சப்ளை ஆகிய இரண்டையும் பொறுத்து தொடர்ந்து திட்டமிட்டு மேலாண்மை செய்யும் போது பொருள்கள் வீணாகாமலும், நஷ்டம் ஏற்படாமலும் பார்த்துக்கொள்ள முடியும். இதில் ஒரு தொழில்முனைவோர் சாதித்து விட்டாலே பிஸ்னஸில் ஜெயம்தான்.




தொடரும்...

# லிவிங் டுகெதர்!

# திருமணத்தை ஒழிக்கப்போகும் உறவுமுறையா?

## வசதிகளும் வில்லங்கங்களும்



பாலபிரசன்னா

பிரசன்னாவுக்கு 34 வயது. கணினி மென்பொருள் துறையில் பணியாற்றுகிறார். ஒன்றரை இலட்ச ரூபாய் மாதச் சம்பளம் வாங்கும் இவர், சொந்த வீடு வாங்கிவிட்டார். தன் தோழியுடன் இரண்டு ஆண்டுகளாக லிவிங் டுகெதர் வாழ்க்கை நடத்துகிறார். யாழ்ப்பாணம் கொடிகாமத்தில் வசிக்கும் ரகுவின் பெற்றோருக்கு இது மிகதாமதமாகவே தெரியும். "அம்மாவிடம் தயங்கித் தயங்கிச் சொன்னேன். திடுக்கிட்டாலும், என்னைப் புரிந்துகொண்டார். ஆறு மாதங்கள் கழித்தே அப்பாவிடம் சொன்னேன். கோபத்தில் கத்துவார் என்று நினைத்தால், பயந்துபோய் கவலையோடு என்னைப் பார்த்தார். என் கோணத்தில் பார்த்தால், நான் செய்வது தப்பில்லை. என் வருமானத்தில் வாழ்க்கை நடத்துகிறேன். நான் ஏன் பெற்றோரை நினைத்துக் கவலைப்பட வேண்டும்?" என்று கேட்கிறார் பிரசன்னா.

நரேஷ், எக்கவுண்டிங் நிறுவனத்தில் நல்ல சம்பளத்தில் வேலைசெய்கிறார். வெள்ளவத்தையில் வாடகைக்கு வீடு தேடிவரும் அவருக்கு இரண்டு மாதங்களாகியும் வீடு கிடைக்கவில்லை. காரணம், தன்னோடு பணிபுரியும் பூஜா எனும் பெண்ணுடன் 'லிவிங் டுகெதர்' உறவில் வாழ்ந்துவருவதே. 'லிவிங் டுகெதர்' இணைகளுக்கு வீடு தருவதில், வீட்டு உரிமையாளர்களுக்கு விருப்பமில்லை. "ஒரு வெப்சைட்டுக்கு ட்ரையல் வெர்ஷன் என அறிமுகம் செய்வார்கள். அதில் எழும் பிரச்னைகளைச் சரிசெய்துவிட்டு, பிறகு பக்காவான வெப்சைட்டைச் செயல்பாட்டுக்குக் கொண்டுவருவார்கள். லிவிங் டுகெதர் என்பது திருமணத்தின் ட்ரையல் வெர்ஷன். இது பலருக்குப் புரியவில்லை" என ஆதங்கப்படுகிறார் நரேஷ்.

பிரித்தானியாவில் கொஞ்ச காலம் இருந்துவிட்டு, மட்டக்களப்பில் இப்போது சொந்த பிசினஸ் செய்கிறார் கணேஷ். அவரின் நண்பி ஒருவருக்குத் திருமணமாகி, சில மாதங்களில் கணவர் இறந்துவிட்டார். நான்கு வருடங்களாக கணேஷ் அந்தப் பெண்ணுடன் 'லிவிங் டுகெதர்' வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். ஆரம்பத்தில் இரு வீட்டார் எதிர்த்தனர்; புறக்கணித்தனர். ஆனால், "இப்போது எங்களை அவர்கள் இயல்பாக ஏற்றுக்கொண்டுள்ளனர். எங்களின் உறுதிதான் உறவினர்களை எங்களோடு சேர்த்தது" என்கிறார் கணேஷ்.

பெருநகரங்களில் நம் அருகிலேயே இப்படிப்பட்ட தம்பதிகள் வாழக்கூடும். என்ன...சமூக அழுத்தங்களுக்குப் பயந்து அவர்கள் தங்கள் வாழ்க்கைநிலையை வெளியில் சொல்வதில்லை. சிலர், தங்கள் வீடுகளுக்கே விஷயத்தைச் சொல்வதில்லை. ஊரிலிருந்து யாராவது பார்க்க வரும்போது சட்டென தங்கள் அபார்ட்மென்ட்டை ஆண்கள் அல்லது பெண்கள் மட்டுமே தங்கியிருக்கும் இடமாக மாற்றிக் காட்டிவிடுகிறார்கள்.

இப்போது பலருக்கும் மிக இளம் வயதிலேயே வேலை கிடைத்துவிடுகிறது. பெண்கள், தங்கள் வீடுகளை விட்டு தனியாகத் தொலைதூரம் வந்து தங்கி வேலை செய்கிறார்கள். இந்தப் புது சுதந்திரம், பல பரிசோதனை முயற்சிகளில் அவர்களை இறங்கத் தூண்டுகிறது. 'இது சரியா...தவறா' என ஆராயும் மனநிலை அவர்களுக்கு இருப்பதில்லை.

### குடும்பத்துக்கு எதிரானதா இது?

'லிவிங் டுகெதரா'க வாழும் ஒரு பெண் எழுத்தாளர் தன் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார்... "என் அப்பா இறந்தபோது என் குடும்பத்தை நான் சுமக்கவும் வழிநடத்தவும் வேண்டியிருந்தது. அந்தப் பயணத்தில், திருமணத்தைப் பற்றிய எண்ணமே எனக்கு வரவில்லை. இப்போது, நெருங்கிய நண்பர் ஒருவரோடு சேர்ந்து வாழ்கிறேன். இந்த வாழ்க்கையில் எனக்குப் பிடித்த விஷயம், பெண் தன் ஆளுமையை எதன் பொருட்டும் விட்டுக்கொடுக்க வேண்டியதில்லை. சரியான புரிந்துணர்வு இருக்கும் பட்சத்தில் இருவரும் சீராக வளர முடியும். என் வீட்டிலும் இதைப் புரிந்துகொண்டுள்ளனர்.

'இது குடும்பம் எனும் அமைப்புக்கு எதிரான ஒன்று' என்று பலரும் நினைக்கிறார்கள். அப்படியில்லை, இது குடும்பத்தின் வேறு வடிவம். இது உறவுக்குள் நிலவும் இறுக்கத்தைத் தளர்த்தும். குடும்பத்துக்குள் நடக்கும் வன்முறைகள், கொலைகள் தவிர்க்கப்படும். ஆணும் பெண்ணும் தங்களின் சுய அடையாளங்களை விட்டுக்கொடுக்காமல் சேர்ந்துவாழ இதில் மட்டுமே சாத்தியமுள்ளது" என்கிறார் அவர்.

### சட்ட அங்கீகாரம் கிடையாது!

ஒரு திருமணத்துக்கான சடங்குகளோ, பதிவோ, பாதுகாப்போ இல்லாமல் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் சேர்ந்து வாழும் 'லிவிங் டுகெதர்' உறவில் சட்டரீதியாக என்ன உரிமைகள் இருக்கின்றன? சட்டத்தரணி அஜிதா விவரிக்கிறார்.

"இந்த வாழ்க்கை முறைக்கு, இங்கு எந்தச் சட்ட அங்கீகாரமும் இல்லை. இதைத் திருமணமாகவும் சட்டம் கருதவில்லை. நமது நாட்டில் திருமணச் சட்டம் என்பது, மதரீதியான சட்டங்களின் கீழ்தான் வரும். வெவ்வேறு மதத்தினர் திருமணம் செய்து

தொடர்ச்சி 24-ம் பக்கம்...



### திருமணங்களில் விளைவு என்ன?

அமெரிக்காவில் 7,000 தம்பதிகளிடம் ஓர் ஆய்வு நடைபெற்றது. 'Marriage and Family' என்ற இதழில் வெளியிடப்பட்ட இந்த ஆய்வு முடிவு, 'லிவிங் டுகெதர்' உறவு பற்றிய புதிய கோணத்தைத் தருகிறது. "இப்படிச் சேர்ந்து வாழும் தம்பதிகள், திருமணத்துக்கு எதிரான கலகமாக தங்கள் உறவை நினைக்கவில்லை. 'நம் நெருக்கமும் புரிதலும் நீண்ட காலம் நிலைத்திருக்குமா' எனத் திருமணத்துக்கு முன்பாக சோதித்துப் பார்க்கும் களமாகவே இந்த உறவைக் கருதுகிறார்கள்" என்கிறார் இந்த ஆய்வை மேற்கொண்ட ஏரியல் குபெர்பர்க். இந்த ஆய்வு கண்டறிந்த சில உண்மைகள்:

- இப்போது திருமணம் செய்து கொள்ளும் அமெரிக்கத் தம்பதிகளில், மூன்றில் இரண்டு பங்கு பேர் தங்கள் திருமணத்துக்கு முன்பு லிவிங் டுகெதராக வாழ்ந்தவர்கள்.
- லிவிங் டுகெதரால், அமெரிக்காவில் விவாகரத்துகள் குறைந்துள்ளன.
- எந்த ஆணும் எந்தப் பெண்ணுடனும் சட்டென லிவிங் டுகெதராக வாழ்வதில்லை. நீண்ட காலம் உறவில் நீடித்திருக்க விரும்பும் ஜோடிகள் மட்டுமே, லிவிங் டுகெதராக வாழ்கிறார்கள்.

# மனமே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்



கு.நக்கீரன்
உளவள ஆலோசகர்

பெண் (வயது 19),
நெல்லியடி

**கேள்வி:** நானும் இன்னும் இரண்டு நண்பிகளும் இரசாயனவியலுக்கு பிரத்தியேக வகுப்பிற்கு செல்வோம். ஆசிரியர் வயதானவர். நாங்கள் அவரிடம் போய்வரும்போது, மூத்த அண்ணாக்கள் நக்கலடிப்பது வழக்கம். எமக்கு அது புரியவில்லை. அண்மையில்தான் ஒருவர் விசயத்தை சொன்னார். அந்த ஆசிரியர், மாணவிகளிற்கு கையால் அடிப்பதை போல அத்துமீறுவார் என்கிறார்கள். அவர் சொன்ன பின்னர்தான், சில விசயங்களை யோசிக்க, அதன் உண்மை புரிகிறது. கொஞ்சம் அளவிற்கதிகமாகவே ஆசிரியர் எம்மில் தொடுவதை போலத்தான் உணர்கிறோம். அவரது செயற்பாட்டை வீடியோ எடுத்து தருமாறு அந்த அண்ணா கேட்டார். எனக்கு அது சரியோ தெரியவில்லை. இதிலிருந்து ஒதுக்கலாமென்றால், வீட்டில் ஆசிரியரை பற்றி புரியவைக்க முடியாது. என்ன செய்யலாம்?

**பதில்:** அன்புமகளே! உங்களது கேள்விக்கான விடை உண்மையில் தனியே உமக்கானதென எண்ண வேண்டாம். உமக்கு கூறப்போகும் பதில் மூலம் உம்மைப்போல ஏராளமான பெண்களுக்கான ஒரு கல்வி அளித்தலைத்தான் செய்ய வேண்டி உள்ளது.

உண்மையில் மனிதன் என்பவன் ஒரு விசித்திரமான பிறப்பு. ஏனைய உயிரனங்களைவிட உளவியலையும் அறிவியலையும் திறமையாக பயன்படுத்துவதுதான் மனிதனின் தனிச்சிறப்பு. வளர்ச்சியும் விருத்தியும் என்பது மனிதனுக்கு உரிய ஒரு தனித்துவமான பண்பு ஆகும். மனிதனின் உடலியல் வளர்ச்சி என்பது ஒரு குறிப்பிட்ட வயதுவரை நடந்தபின் நின்றுவிடுகிறது. ஆனால் விருத்தி என்று சொல்லப்படுகின்ற விடயம் உண்மையில் மனிதனின் உளவியல் பண்புகளோடு சேர்ந்த ஒன்று. இந்த விருத்திச் செயற்பாடு ஒவ்வொரு கணமும் நடந்துகொண்டே இருக்கிறது. அதாவது சாகும் வரை மனிதன் உளவியல் ரீதியாக விருத்தியடைந்து கொண்டுதான் இருக்கிறான். இந்த உளவிருத்திச் செயற்பாடு ஆளுக்கால் வேறுபடுகின்றது. ஒரு பிரச்சினை தொடர்பாக எல்லா மனிதரும் ஒரேவிதமாகப் பார்ப்பதில்லை. ஒவ்வொருவரும் ஒரு பிரச்சினை தொடர்பில் சிந்திக்கும், செயற்படும் விதம் வெவ்வேறு விதமாகிறது. உமது பிரச்சினையில் உமது ஆசிரியர் ஒரு உளவிருத்திச் செயற்பாட்டில் ஒரு தெளிவான நிலைப்பாட்டிற்கு வரமுடியாத பிரச்சினைகளோடு வாழ்ந்து வருகிறார். அதாவது நேரடியாகச் சொன்னால் உமது ஆசிரியர் மேற்கொள்ளும் செயற்பாட்டை "பாலியல் சீண்டல் அல்லது பாலியல் சுரண்டல்" அல்லது பாலியல் ரீதியான இடைஞ்சல் எனக் கூறப்படுகிறது.

இந்த பாலியல் துன்புறுத்தல்கள் பல்வேறு விதமாக மேற்கொள்ளப்படுகிறது. இவை உடலியல் ரீதியானவையாகவோ, உளவியல் ரீதியானவையாகவோ இடம் பெறலாம். அதாவது ஆபாசமாகக் கதைத்தல், நக்கல் அடித்தல், ஆபாசமாக சைகை காட்டல், விமர்சித்தல் போன்றவையுடன் இன்றைய நவீன தொழில்நுட்ப யுகத்தில் தொடர்பு சாதனங்களின் மூலம் ஆபாசமான செய்திகள் படங்கள்,வீடியோக்கள் போன்றவற்றை அனுப்புதல் போன்றவை கூட உளவியல் ரீதியான துன்புறுத்தலாக கொள்ளப்படலாம்.

பொதுவாக இப்படியாக பாலியல் தொந்தரவு செய்பவர்கள் ஏதோ ஒரு விதத்தில் வலு உள்ளவர்கள் வலுக் குறைந்தவர்களிடம் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள். இதனால் தான் சிறுவர், பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் அதிகமாக நடைபெறுவது உங்களுக்கு தெரியாது அல்ல.

இப்படிப்பட்ட பிரச்சினைகளால் தான் இன்று சிறுவர் பெண்களுக்கு எது நல்ல தொடுகை, எது கெட்ட தொடுகை, எது பாலியல் தொந்தரவு என்பது பற்றி எல்லாம் வகுப்புக்கள் நடைபெறுகிறது.

எனவே இது விடயத்தில் உங்களது விழிப்புணர்வு மிகவும் அவசியமானது. உங்களது ஆசிரியருக்கு அவரது செயல் ஒரு "பாலியல் தொந்தரவு" என்பதை வன்முறையற்ற வழியில் தெரியப்படுத்துங்கள். இதற்கு சட்டத்தில் தண்டனை உண்டு என்பதையும் தெரிவுபடுத்துங்கள். வெளிப்படையாக நிறுதிட்டமாக ஆசிரியருடன் பேசுங்கள். உங்களுக்கு இது விடயமாக விருப்பம் இல்லை என்பதை தெளிவுபடுத்துங்கள். மற்றப்படி நண்பர்களின் கதையைக் கேட்டு வீடியோ எல்லாம் எடுக்கப்போய் சிக்கலை வளர்த்துக் கொள்ளாதீர்கள். ஆசிரியர் திருந்தாவிடின் ஆசிரியரின் வீட்டுக்காரப் பெண் 'பொலிசிடம்' கூறிப்பாருங்கள் நல்ல பலன் கிடைக்கும்.

எஸ்.பஸ்ரினா (வயது 23), யாழ்ப்பாணம்

**கேள்வி:** நான் ஒருவரை காதலிக்கிறேன். அவர் பட்டப்படிப்பின் பின் நல்ல வேலையொன்றில் இணைந்து விட்டார். எனது பிரச்சனை சற்று வித்தியாசமனது. காதலிக்கும் காலத்தில் பல இடங்களிலும் சுற்றிதிரிய வேண்டுமென நான் நினைக்கிறேன். ஆனால் அவரோ சுற்றிதிரிவதில் ஆர்வமில்லாதவர். எங்காவது கூட்டிச்செல்வதற்குள் போதும்போதுமென்று ஆகிவிடும். வெளியில் சென்று என்ஜோய் பண்ணுவதில் அவருக்கு ஆர்வமில்லை. ஏன் இப்படி இருக்கிறார்? என்ன செய்யலாம்?

**பதில்:** அன்புச்சகோதரி! காதல் பற்றி இனி பதில் எழுதுவதில்லை என்று ஒவ்வொரு தடவையும் நான் முடிவெடுக்கும் போதும் இந்தக்காதல் தொல்லை மீண்டும் வந்துவிடுகிறது. இந்தக் காதல் நோய் ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு விதமான மகிழ்ச்சியைத் தருவதோடு, ஒவ்வொரு விதமான பிரச்சினைகளையும் உருவாக்கிக் கொண்டே இருக்கிறது.






உதாரணத்திற்கு உமது பிரச்சினையே பாருங்கள். காதலில் மகிழ்ச்சி, காதலினின் சில இயல்புகள் கவலையைத் தருகிறது. என்ன செய்வது துன்பமும் மகிழ்ச்சியும் சேர்ந்ததுதானே வாழ்க்கை. பொதுவாகவே பெண்களின் உளவியல் சற்று வித்தியாசமானதுதான். ஊதாரணமாக போடும் சட்டை வடிவாக இருக்கிறது என்று காதலன் கூற வேண்டும் என எதிர்பார்ப்பது காதலி இயல்பு. சமைக்கும் சமையல் "சூப்பர்" என்று கணவன் கூற வேண்டும் என எதிர்பார்ப்பது மனைவி இயல்பு.

உண்மைதான் காதல் செய்யும் காலத்தில் காதல் பறவைகளாக சுற்றித்திரிய வேண்டும். காதலனின் தோளில் கைபோட்டு மோட்டார் சைக்கிளில் வலம் வரவேண்டும். பொதுப் போக்குவரத்து பஸ்ஸில் பின் சீட்டில் அருகருகே அமர்ந்து சில்மிசம் பண்ணிக் கொண்டே போகவேண்டும். கடற்கரை மணலில் கைகோர்த்து நடக்கவேண்டும். கொட்டும் மழையில் ஒரு குடையினில் நடக்க வேண்டும் இப்படியே அடுக்கிக் கொண்டு போகலாம். இப்படிப்பட்ட சின்னச்சின்ன "ரொமான்ஸ்" எல்லாவற்றையும் எதிர்பார்ப்பது சராசரிக் காதலியின் இயல்புதான்.

ஆனால் எல்லாக் காதலனும் இந்த எல்லா இயல்புகளுடனும் ஒத்துப் போவான் என்று கூற முடியாது. ஆண்களின் காதல் சிந்தனை சற்று வேறுவிதமானது. உதாரணமாக காதலி ஒரு நாளைக்கு ஒன்பது தரம் போனில் கதைக்க வேண்டும் என்று எதிர்பார்பாள். காதலனோ ஒரு தடவையே ஆறதலாக ஆர்வமாக கதைத்தால் போதும் என்று எதிர்பார்ப்பான். இதேபோலத்தான் உங்கள் காதலனும். அதுவும் வேலை ஒன்றில் இருக்கும் அவரால் எப்படி ஊர் சுற்றித்திரிய முடியும். பொதுவாகவே பெண்கள் வெளிநோக்கிய பார்வை உள்ளவர்களாகவும் ஆண்கள் உள்நோக்கிய பார்வை உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். அதேபோல நீங்கள் குறுகிய நீண்ட பார்வை உள்ளவர்கள், ஆண்கள் அகலமான அண்மித்த



பார்வை உள்ளவர்கள். அதுமட்டுமல்ல பெண்கள் உணர்வுரீதியானவர்கள், ஆண்கள் அறிவுரீதியானவர்கள். இப்படி நீண்டதொரு உளவேறுபாடுகளுடன் இருக்கும் ஆண்பெண் காதலில் ஒருவரையொருவர் திருப்திப்படுத்துவது என்பது ஒருவரையொருவர் எந்தளவுக்கு புரிந்து கொண்டுள்ளனர் என்பதை பொருத்துதானே.

மொத்தத்தில் காதல் கூட ஒரு வியாபாரம்தான். இருபகுதியனரும் சில விடயங்களில் விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ள தயாராக இருப்பதுடன், சிலவிடயங்களில் ஒரு துளியேனும் விட்டுக்கொடுக்க முடியாதெனும் வியாபார தந்திரங்களை கைக்கொள்ள வேண்டும். அதாவது உண்மையாக காதலித்தவனையே கைப்பிடிக்கத் தயாராக இருக்கும் நீங்கள் காதலுடன் ஊர் சுற்றித்திரிய ஆர்வமாக இருக்கலாம்.

ஆனால் காதலித்தவளைக் கைபிடித்து வாழும் நோக்கம் இல்லாதவன் இயலுமானவரை ஊருக்குத் தெரியாமல் காதலித்துவிட்டு சீதன பாதனத்துடன் ஒருத்தியை கைபிடிக்கும் நோக்கம் இருப்பதாலும் வெளியில் ஊர் சுற்றுவதை தவிர்க்கிறோரோ தெரியவில்லை. எதற்கும் ஆறதலாக சில விடயங்களை அசைபோடுங்கள்.

ஆலோசனைகள் என்னுடயவை, தீர்மானங்கள் உங்களுடையவை.

வாசகர்களே, உங்கள் சந்தேகங்களை எமது அலுவலக முகவரிக்கோ, deepamdesk@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி, தீர்வை பெற்றுக்கொள்ளுங்கள்.

# கருணா படித்த பாடசாலையில் பிரபாகரன்தான் ஹெட் மாஸ்டர்!

பீஷ்மர்



ரமேஷ் - பதுமன் - தமிழ்செல்வன்

விடுதலைப்புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாண தளபதியாக இருந்த கேணல் கருணா 2004 மார்ச் 03ம் திகதி திடீர் அறிவிப்பொன்றை விடுத்தார். "விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து, கிழக்கு மாகாண அணியினராகிய நாம் தனித்து செயற்பட போகிறோம்" என்பதே அந்த அறிவிப்பு. இந்த அறிவிப்பின் பின்னணி என்ன? அப்போது என்னென்ன சம்பவங்கள் நடந்தன? யார் யார் என்னென்ன பாத்திரங்கள் வகித்தார்கள்?

இதையெல்லாம் கடந்த இதழ்களில் விபரமாக குறிப்பிட்டுள்ளோம். கருணா பிளவை ஒரு தத்துவார்த்தமான பிளவாக சிலர் குறிப்பிடுவதுண்டு. வடக்கு கிழக்கு மோதல், கிழக்கு போராளிகள் மீதான மேலாதிக்கம் என பல கதைகள் கிளப்பப்பட்டன. உண்மையில் அதெல்லாம் கதைகள் தான். இந்த பிளவை நியாயப்படுத்த பின்னாளில் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவை.

இப்படி திட்டமிட்டு உருவாக்கப்பட்ட கதைகளின் பின்னால், பெரும் வலையமைப்பே இருந்தது. வடக்கு கிழக்கு மோதலை தத்துவார்த்த பின்னணியில் உருவாக்கினால்தான், பிளவு வெற்றியடையுமென்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்திருந்தார்கள். அதே சமயத்தில் வடக்கு கிழக்கு பிளவை வெறித்தனமானதாக மாற்றும் முயற்சியும் நடந்தது. அதாவது வடக்கை சேர்ந்தவர்கள் மீது கொலைவெறி தாக்குதல் நடத்தி, அதை உணர்வுபூர்வமானதாக மாற்றி, இரத்தக்களரியை தோற்றுவிக்கும் முயற்சிக்கான விதை அது.

கிழக்கு பிளவிற்கு தத்துவார்த்த அர்த்தம் கற்பிக்கும் முயற்சியும் நடந்தது. இதன் பின்னணி யார் என்பதை நாம் கூறப்போவதில்லை. ஆனால் நாம் தரும் தகவல்களில் இருந்து நீங்கள் விசயங்களை ஊகித்துக்கொள்ளலாம்.

2004 மார்ச்சில் கருணா தனது பிரிவை அறிவித்ததும், தென்னிலங்கையை சேர்ந்த சிங்கள பத்திரிகையாளர் பெண்மணி கருணாவின் அணிகளின் கட்டுப்பாட்டில் இருந்த முகாமொன்றில் வந்து தங்கியிருந்தார். கருணா அணியின் தகவல்களையும், அறிக்கைகளையும் உடனுக்குடன் இலங்கை மற்றும் வெளிநாடுகளிற்குள் பரப்புவதுதான் அவரது வேலை. அவரை யார் அங்கு அனுப்பி வைத்தார்கள்?

அதையும் நாம்தான் உங்களிற்கு சொல்லி புரிய வைக்க வேண்டுமா என்ன?

மட்டக்களப்பில் இருந்த வடக்கை சேர்ந்தவர்களை கருணா குழு சுட தொடங்க, பதிலுக்கு புலிகளும் கருணா குழுவை சேர்ந்தவர்கள் மீது சுட தொடங்க, கிழக்கே கலவர பூமியானது. ஒவ்வொரு நாளும் கொலை விழுந்த நாட்கள் அவை.

இந்த சமயத்தில் மீண்டும் கருணாவுடன் இடைத்தரகர்கள் ஊடாக பேச்சுவார்த்தை நடத்த புலிகள் முயன்றனர். கருணாவை சமரசமாக கிழக்கை விட்டு வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதே புலிகளின் பிரதான நோக்கமாக இருந்தது. கருணாவுடன் மோத முடிவெடுப்பது, வீணாண அழிவு, பின்னடைவு ஏற்படுமென்பது புலிகளிற்கு தெரிந்திருந்தது. ஆனால், கருணா அதற்கு சம்மதிக்கவில்லை. ஐயாயிரம் போராளிகள் தன்னிடமிருந்ததால், கிழக்கில் தனியான நிர்வாகம் அமைக்கலாமென அவர் நினைத்தார்.

ஆனால்... இந்த இடத்தில் உங்களிற்கு ஒரு பிளாஷ்பேக் அவசியம். கருணா விவகாரத்தை எழுத தொடங்கியபோது, ஒரு விசயத்தை சொல்லியிருந்தேன். கருணா படித்த பாடசாலையில் ஹெட்மாஸ்ரர் பிரபாகரன்தான் என!

போர்த்தந்திரங்களில் பிரபாகரனா, கருணாவா சிறந்தவர் என கேட்டால், சந்தேகமேயில்லாமல் பிரபாகரன்தான் என சொல்லலாம். அதற்கு ஆதாரம் கருணா கிளர்ச்சியை அவர் கட்டுப்படுத்திய விதத்தை சொல்லலாம்!

கருணா பிரிவில் இடையில் கட்டாயம் சொல்ல வேண்டிய இன்னொரு விவகாரம்திருகோணமலை தளபதியாக இருந்த பதுமன் கைது செய்யப்பட்டது. அதை இப்பொழுது குறிப்பிடுகிறேன். இதை தொடர்ந்து, கருணாவை விட போர்த்தந்திரத்தில் பிரபாகரன் ஏன் சிறந்தவர் என்பதற்கான ஆதாரங்களை குறிப்பிடுகிறேன்.

கருணா பிரிவு விவகாரத்தில் கிழக்கின் இன்னொரு தளபதியாக இருந்த பதுமன் புலிகளால் கைது செய்யப்பட்டார். அப்போது அவர் திருகோணமலை தளபதியாக இருந்தார்.

கருணா பிரிவை பதுமன் ஏற்கனவே அறிந்து வைத்திருந்தார். ஆனால் அதில் நேரடி தொடர்பை வைத்திருக்கவில்லை. கருணா பிளவை பதுமன் அறிந்து வைத்திருக்கிறார், இரண்டு தளபதிகளிற்கிடையிலும் நெருக்கம் உள்ளது போன்ற தகவல்களை புலிகள் அறிந்து வைத்திருக்கவில்லை. எதிர்பாராதவிதமாக நடந்த சுவாரஸ்யமான சம்பவம் ஒன்றின் மூலமே, புலிகள் இதை அறிந்து கொண்டார்கள்.

கிழக்கில் கருணா பிரிந்தபோது, ஜெயந்தன் படையணியின் அணியொன்று வடக்கில் நிலைகொண்டிருந்தது. அந்த அணியின் தளபதியாக ஜெனார்த்தனன் இருந்தார். அவருடன் சுமார் நானூறு வரையான போராளிகள் இருந்தார்கள். அந்த அணி நாகர்கோவிலில் நிலைகொண்டிருந்தது.

கிழக்கிலிருந்த கருணா அணியிடமிருந்து ஜெனார்த்தனனை பலமுறை தொடர்பு கொண்டனர். அவரது அணியையும்கூட்டிக்கொண்டு உடனடியாக மட்டக்களப்பிற்கு வரும்படியும், அதற்கான ஏற்பாட்டை தாங்கள் செய்வதாகவும் கூறினார்கள்.

ஜெனார்த்தனன் விடுதலைப்புலிகள் அமைப்பில் விசுவாசமாக இருந்தவர். அவருக்கு இதில் உடன்பாடிருக்கவில்லை. உடனடியாக தனது மேலதிகாரிகளிடம் விசயத்தை சொன்னார். அது பொட்டம்மானிற்கு உடனடியாக அறிவிக்கப்பட்டது. பொட்டம்மான் இந்த விசயத்தை கையில் எடுத்தார்!

ஜெனார்த்தனனை கிளிநொச்சியிலுள்ள புலனாய்வுத்துறையின் ஒப்ரேசன் மையமொன்றிற்கு அழைத்த பொட்டம்மான், அவரை சில விசயங்களிற்காக தயார்படுத்தினார். அதாவது, கிழக்கு அணியுடன் இணக்கமாக பேசி, தகவல்களை கறக்க வேண்டும்!

ஜெனார்த்தனன் அதை கச்சிதமாக செய்தார். "கிழக்கு விவகாரங்கள் உங்குள்ள ஜெயந்தன் படையணி போராளிகளிற்கு தெரியுமா?" என கருணா அணியினர் கேட்டனர்.

"ஆம்... அனைத்து தகவல்களும் ஓரளவுக்கு தெரிந்துள்ளது. புலிகள் பயங்கரமான தணிக்கை நடைமுறைகளை அமுல்படுத்தியுள்ளனர். புலிகளின் குரல் வானொலி மட்டுமே கேட்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால்,விசயத்தை தெரிந்துள்ள என்னைப்போன்ற சிலர் மூலம் ஓரளவு விசயங்கள் போராளிகளிடம் சென்றுள்ளது"

"ஓஹோ போராளிகள் என்ன சொல்கிறார்கள்? வன்னியை விட்டு மட்டக்களப்பிற்கு வர தயாராக இருக்கிறார்களா?"

"யாரும் வெளிப்படையாக பேசவில்லை. அவர்களிற்கு பயமாக இருக்குமென நினைக்கிறேன். யார் யாருடைய ஆட்களென்பதை கண்டு



## இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 69

பிடிக்க முடியாதல்லவா?. ஆனால் மேலோட்டமாக பேசியதில் பல போராளிகள் மட்டக்களப்பிற்கு வர தயாராக இருக்கிறார்கள். மிகச்சிலர் விரும்பாமலிருக்ககூடும். ஆனால், அனைவரையும் மட்டக்களப்பிற்கு கொண்டு வரலாம்"

"சரி... தொடர்பில் இருங்கள். அதுபற்றி பின்னர் தகவல் தருகிறோம்"

இந்த உரையாடல் ஜெனார்த்தனனிற்கும், புலிகளிலிருந்து பிரிந்த கிழக்கின் முக்கிய தளபதியொருவரிற்குமிடையில் நடந்தது. இந்த உரையாடலைஜெனார்த்தனனுடன் இருந்து பொட்டம்மானும் கேட்டுக்கொண்டிருந்தார்!

இந்தஉரையாடலைபொட்டம்மான் அவதானித்துக் கொண்டிருப்பதை கருணா குழு அறிந்திருக்கவில்லை. ஜெனார்த்தனன் உண்மையிலேயே மட்டக்களப்பிற்கு வர தயாராக இருக்கிறார் என்றுதான் கருணா குழு நம்பியது.

மட்டக்களப்பிற்கு வருவதானால், எப்படி வருவதென்று கருணாகுழுவிடம் கேட்கும்படி பொட்டம்மான் கூறியிருந்தார். அடுத்த உரையாடலில் ஜெனார்த்தனன் கேட்க,மறுமுனையில் பேசிய முக்கியஸ்தர் திட்டத்தை புரியவைத்தார்.

"இப்பொழுது நீங்கள் நாகர்கோவில் முன்னரணில் நிலைகொண்டிருக்கிறீர்கள். கடற்கரையோரமாக கண்ணிவெடிகளை அகற்றி ஒரு

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

பாதையை தயார் செய்யுங்கள். நீங்கள் தயார்செய்யும் பாதையை இராணுவத்தினர் பார்த்தால், அதற்கு நேராக அவர்களும் ஒரு பாதையை தயார்செய்து தருவார்கள். இந்த பாதையால் நாகர்கோவில் முகாமிற்கு போங்கள். அவர்கள் அங்கிருந்து கப்பலில் வாகரையில் இறக்கிவிடுவார்கள். எங்களுடன் வந்து சேரலாம். முக்கியமான ஒரு விசயம் நாகர்கோவிலில் இராணுவ முகாமிற்கு போகும்போது, துப்பாக்கிகள் எதையும் கொண்டுபோக வேண்டாம். அனைத்து ஆயுதங்கள், கைக்குண்டுகளையும் அப்படியோ போட்டுவிட்டு செல் லுங்கள்"

இந்த உரையாடலை அவதானித் துக்கொண்டிருந்த பொட்டம்மானிற்கு பொறி தட்டியது. 'வாகரையில் இராணுவம் இறக்கிவிடுவார்களா? அந்த பகுதி திருகோணமலை மாவட்ட அணியின் செல்வாக் குள்ள இடமாயிற்றே'. உடனே இன் னொரு கேள்வியை கேட்கும்படி ஜெனார்த்தனனிடம் எழுத்துமூலம் கொடுத்தார். அந்த கேள்வி "வாகரை யிலா எங்களை தரையிறக்குவார்கள்? அங்கு பதுமன்ணையின் ஆட்கள் (திருகோணமலை அணி) இருக்குமே? நாங்கள் ஆயுதங்கள் இல்லாமல் வருகிறோம். எங்களை சுட்டுத்தள்ளி விடுவார்களே?".

"அதைப்பற்றி நீங்கள் யோசிக்க வேண்டியதில்லை. பதுமனுடன் அனைத்தும் பேசியாயிற்று. அவரும் நமக்கு வேண்டியவர்தான். அவருக்கு எல்லாம் தெரியும். திருகோணமலை ரீமால் எந்த சிக்கலும் வராது"

உடனடியாகவே நாகர்கோவில் இராணுவ முன்னரணில் சரணடை வதாக ஜெனார்த்தனன் கூறியிருந்தார். அந்த செய்திக்காக கருணா அணி காத்திருந்தது. கடைசிவரை நாகர் கோவில் இராணுவத்திடம் கையை உயர்த்திக்கொண்டு புலிகள் யாரும் செல்லவேயில்லை. ஆனால், இலங்கை இராணுவ உலங்கு வானூர்தியில் புலிகளின் தளபதியொருவர் திருகோண மலைக்கு சென்றார்.

அவர் தளபதி சொர்ணம்!

பிரபாகரனின் மிக நம்பிக்கையான தளபதி. திருகோணமலையை சேர்ந்த வர். விடுதலைப்புலிகளின் இரண்டு பிரதான பிளவின்போதும், பிரபாகர னின் மிக நம்பிக்கையை வென்றவர். இரண்டு சமயத்திலும், பிளவில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்தது சொர்ணம்தான்.

சொர்ணம் கைது செய்த முதலாவது கிளர்ச்சியாளர் மாத்தையா!

*1994* இல் புலிகளிற்குள் ஏற்பட்ட பிளவையடுத்து மாத்தையா



கைதானார். கொக்குவிலில் இருந்த மாத்தையாவின் முகாமிற்கு இம்ரான் பாண்டியன் படையணியுடன் சென்று, மாத்தையாவின் கையில் விலங்கிட்டது சொர்ணம்தான். அந்த அணியில் பொட்டம்மானும் இருந்தபோதும், சொர்ணம்தான் அனைத்தையும் வழி நடத்தினார்.

கருணா பிளவின்போது, பதுமனை கைது செய்ய சென்றதும் சொர்ணம் தான்.

சொர்ணம் திருகோணமலைக்கு போய், பதுமனை தனது கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வந்தார். பதுமனிற்கு புலிகளை விட்டு செல்லும் எண்ணமிருக்கவில்லை. அதனால்தான் சுலபமாக சரணடைந்திருக்கிறார். அவரை வன்னிக்கு கொண்டு செல்ல வேண்டும். எப்படி கொண்டு செல்வது?

உலங்கு வானூர்தியில் அதுவும் அரசாங்கத்தின் உலங்கு வானூர்தியில் கொண்டு செல்ல முடிவெடுத்தனர். கருணா பிளவின் பின்னணியில் அரசாங்கம் இருக்கிறது என்கிறீர்கள், எப்படி அவர்களின் உலங்கு வானூர்தியில் பதுமனை வன்னிக்கு கொண்டு செல்ல புலிகள் முடிவெடுத் தார்கள் என நீங்கள் நினைக்கலாம்.

அந்த சமயத்தில் புலிகளின் தேவை களிற்காகவும் உலங்கு வானூர்திகளை அரசாங்கம் வழங்கியது. சமாதான பேச்சுக்களிற்காக செல்லவும், கிழக்கு பயணங்களிற்கும் சமாதான செயலகம் ஊடாக உலங்கு வானூர்திகளை பெற்றுக்கொள்ளலாம் என்ற ஏற்பாடு இருந்தது. இதன்படி உலங்கு வானூர்தியை பெற்று பதுமனை வன்னிக்கு கொண்டு வர திட்டமிட்ட னர். உங்களிற்கு வந்த சந்தேகம் புலிகளிற்கும் வந்தது. ஒருவேளை உலங்குவானூர்தியில் பதுமனை ஏற்றிய பின்னர், கொழும்பிற்கோ அல்லது வேறு இராணுவத்தளத்திற்கோ கொண்டு சென்று தரையிறக்கி விடுகிறார்களோ தெரியாதே!

இந்த சந்தேகம் சொர்ணத்திற்கும் இருந்தது. திருகோணமலையில் இருந்து பதுமனை அழைத்துக்கொண்டு புறப்பட்ட இரண்டு போராளிகளிற் குமிருந்தது. அதற்கு சொர்ணம் ஒரு தீர்வை சொன்னார். "இடைவழியில் எங்காவது குழப்படி விட்டால், அல்லது ஹெலிகொப்டர் வேறு எங்காவது போகிறது என தெரிந்தால், பதுமனையும் கட்டிப்பிடித்துக்கொண்டு கீழே குதித்து விடுங்கள்"!

பதுமன் வன்னிக்கு அழைத்து வரப்பட்டு, புலிகளால் விசாரிக்கப் பட்டு, வீட்டுக்காவலில் வைக்கப்பட் டார். யுத்தத்தின் இறுதிநாட்களில்தான் விடுவிக்கப்பட்டார். இப்பொழுது சாதாரண குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளார்.

பதுமன் விவகாரம் இவ்வளவுதான்.

போர்த்தந்திரத்தில் பிரபாகரனா, கருணாவா சிறந்தவர் என்பதை, இனி நான் குறிப்பிடும் தகவல்களை வைத்து நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

ஏப்ரல் *09ம்* திகதி. அதாவது கருணா பிளவு நடந்து ஒரு மாதத்தின் பின்னர், மட்டக்களப்புக்கு புலிகள் அணிகள் நகர்த்தப்பட்டு, கருணாவின் கட்டுப்பாட்டிலிருந்து பிரதேசம் மீட்கப்பட்டது. அது ஒரு பெரிய வெள்ளிநாள்.

புலிகள் மட்டக்களப்பு மீது படையெடுப்பார்கள் என கருணா எதிர்பார்த்திருந்தார். அவர் நினைத்தார் வெருகல் ஆற்றைக்கடந்துதான் புலிகள் வருவார்கள் என. வெருகல் ஆற்றை கடக்காதவாறு பலமான அரண் அமைத்தால் சரி, புலிகளை கட்டுப் படுத்தி விடலாமென நினைத்தார். தன்னிடமிருந்த *600* போராளிகளை *30* அணிகளாக பிரித்து, ஆற்றின் தெற்கு பக்கமாக நிலைகொள்ள வைத்தார். (இதில் கணிசமான புதிய பெண் போராளிகளும் இருந்தனர். ஆண், பெண் போராளிகளை ஒன்றாகவே நிலைகொள்ள வைத்தனர். அது ஏற்படுத்திய விளைவுகள் பின்னாளில் பூதகாரமாக எழுந்தது. அதைப்பற்றி பின்னர் குறிப்பிடுகிறேன்)

இந்த படையணிகளிற்கு சூட்டா தரவு வழங்க, சுமார் எட்டு *120*mm பீரங்கிகள் காட்டுக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. வெருகலில் நிலைகொண்டிருந்த கருணா அணிக்கு தலைமைதாங்கியவர் ரெஜி. கருணாவின் மூத்த சகோதரர்.

அதிகாலை *1.30* அளவில் புலிகளின் ஒப்ரேசன் தொடங்கியது. கடல்வழியாக வந்த புலிகளின் அணியொன்று, வெருகல் முகத்துவாரத்தின் தென் பகுதியில் இறங்கி, உள்பக்கமாக இரகசியமாக நகர்ந்தது.

இன்னொரு அணி வெருகல் ஆற்றங்கரையின் மறுபக்கம் வந்தது. அந்த சமயத்தில் மட்டக்களப்பின் மூத்த உறுப்பினர்கள் தொலைத்தொடர்பு கருவிகளின் மூலம், கருணாவின் ஆட்களுடன் தொடர்புகொண்டு, மீண்டும் அமைப்பிற்குள் வருமாறு கேட்டுக்கொண்டிருந்தனர். வெருகல் ஆற்றோரம் நின்ற அணி, வேறுவிதமாக பேசியது. தாங்கள் சரணடைய போவதாக கேட்டார்கள். வாருங்கள் என சந்தோசமாக அழைத்தனர் கருணா அணியினர்.

சரணடைய வந்தவர்கள் திடீரென துப்பாக்கிகளை எடுத்து சுட ஆரம்பித்தனர். அதேநேரம் பால்சேனையில் இன்னொரு தரையிறக்கம் நடந்தது. கருணா அணியை எதிர்பாராக விதமாக புலிகள் சுற்றிவளைத்தனர். கதிரவெளியில் தரையிறங்கிய அணிகள், கருணா குழுவின் பின்பக்கமாகவும் வந்து தாக்க தொடங்கினார்கள்.

இதற்குள் இன்னொரு சுவாரஸ்யம். புலிகளிற்கு எதிராக, *120*mm பீரங்கிகளை கருணா நிறுத்தி வைத்திருந்தார் அல்லவா, அவற்றிலிருந்து ஒரு




செல் கூட புலிகளிற்கு எதிராக அடிக்கப்படவில்லை. காரணம், கொமாண்டோ தாக்குதல் ஒன்றின் மூலம், அந்த பீரங்கிகளை புலிகள் கைப்பற்றினர்.

எல்லா திட்டங்களும் குழம்பியதால், கருணா குழுவினர் நிலைகுலைந்து போனார்கள். அடுத்தது என்ன செய்வதென தெரியாமல், திண்டாடி னார்கள். பால்சேனையில் தரை யிறங்கிய புலிகள், வடக்கு மற்றும் தெற்கு பக்கமாக முன்னேற தொடங்கினார்கள். இந்த அணிகளிற்கு ரமேஷ் தலைமைதாங்கினார்.

ஒரு அணி கதிரவெளியை கைப்பற்ற, மற்ற அணி வாகரைக்கு பக்கத்திலிருந்த கண்டலடி முகாமை கைப்பற்றினர். கருணாவின் சகோதரர் ரெஜி அங்கிருந்துதான் கட்டளைகள் வழங்கிக் கொண்டிருந்தார். அவருக்கும் காயம் ஏற்பட்டது. காயத்துடன் தப்பியோடி விட்டார். மொத்தத்தில் சில மணித்தியாலத்தில் பெரும் உயிர் சேதமின்றி கருணா அணியை புலிகள் முறியடித்தனர்.

இப்பொழுது சொல்லுங்கள், கருணா படித்த பாடசாலையில் பிரபாகரன்தான் ஹெட்மாஸ்டர் என்பது சரிதானே! **(தொடரும்)**

# எந்தெந்த ஸ்மார்ட்போன் எவ்வளவு கதிர்வீச்சை வெளியிடுகின்றன?



ஸ்மார்ட்போன்கள் அறிமுகமாகி உலகம் முழுவதும் பரவ தொடங்கிய நாள் முதலே, அவைகள் மனித உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் ரேடியேஷன்களை வெளிக்கிடுகிறது என்றே பீதியும் பரவி வருகிறது. ஆனால் ஸ்மார்ட்போன் நிறுவனங்கள் இதை மறுத்து வருகின்றன. வெளிப்படையான உண்மையொன்றை கூறவேண்டுமெனில் ஸ்மார்ட்போன்கள் கதிர்வீச்சை வெளியிடுகின்றன தான். ஆனால் அதை எந்தவொரு அறிவியல் சார்ந்த ஆராய்ச்சியும் தீர்க்கமான முடிவுதனை வழங்கவில்லை. சிலர் மொபைல் ரேடியேஷனை ஒரு பிரமை என்கின்றன, மறுபுறம், பெரும்பாலானோர்கள் மொபைல்களானது கதிர்வீச்சை வெளியிடுகின்றன என்பதை நம்புகின்றன.

யார் நம்பினாலும் மறுத்தாலும் உண்மையை மறுக்க முடியாதல்லவா.? அதை, சமீபத்தில் வெளியாகியுள்ள ரேடியேஷன் எமிட்டிங் ஸ்மார்ட் போன்ஸ் என்கிற ஆய்வு அம்பலப்படுத்தியுள்ளது. வெளியான ஆய்வானது எந்த ஸ்மார்ட்போன் எந்த அளவிலான கதிர்வீச்சை வெளிக்கிடுகிறது என்பதை அக்குவேறு ஆணிவேராக பிரித்து காட்டியுள்ளது.

அதிர்ச்சிகரமான விடயம் என்னவெனில் அந்த பட்டியலில் இடம் பெற்றிருக்கும் பெரும்பாலான ஸ்மார்ட் போன்கள், மிகவும் பிரபலமான நிறுவனங்களின் கருவிகளாகும். யாருக்கு தெரியும் அதில் ஒரு ஸ்மார்ட்போன் தற்போது உங்கள் கைகளில் கூட இருக்கலாம். இருக்கிறதா இல்லையா என்பதை நீங்களே பார்த்து தெரிந்துகொள்ளுங்கள்.

***15-வது இடம்:*** *ஐபோன் 7 ப்ளஸ், பட்டியலில் இடம்பெறும் மூன்று ஐபோன்களில் இதுவும் ஒன்றாகும். இந்த ஸ்மார்ட்போன் வெளிக்கிடும் கதிர்வீச்சின் குறிப்பிட்ட உறிஞ்சுதல் விகிதமானது 1.24 (வாட்ஸ்/கிலோகிராம்) ஆகும்.*

***14-வது இடம்:*** *பிளாக்பெர்ரி டிடெக்60, பட்டியலில் இடம்பெறும் ஒரே ஒரு பிளாக்பெர்ரி ஸ்மார்ட்போன் இதுதான். இந்த ஸ்மார்ட்போன் வெளிக்கிடும் கதிர்வீச்சின் குறிப்பிட்ட உறிஞ்சுதல் விகிதமானது 1.28 (வாட்ஸ்/கிலோகிராம்) ஆகும்.*

***13-வது இடம்:*** *இசெட்டிஇ அக்ஸோன் மினி, இந்த ஸ்மார்ட்போன் வெளிக்கிடும் கதிர்வீச்சின் குறிப்பிட்ட உறிஞ்சுதல் விகிதமானது 1.29 (வாட்ஸ்/கிலோகிராம்) ஆகும்.*

***12-வது இடம்:*** *ஐபோன் 8, இந்த ஸ்மார்ட்போன் வெளிக்கிடும் கதிர்வீச்சின் குறிப்பிட்ட உறிஞ்சுதல் விகிதமானது 1.32 (வாட்ஸ்/கிலோகிராம்) ஆகும்.*

***11-வது இடம்:*** *சோனி எக்ஸ்பீரியா எக்ஸ்இசெட்1 காம்பாக்ட், இந்த ஸ்மார்ட்போன் வெளிக்கிடும் கதிர்வீச்சின் குறிப்பிட்ட உறிஞ்சுதல் விகிதமானது 1.36 (வாட்ஸ்/கிலோகிராம்) ஆகும்.*

***10-வது இடம்:*** *10வது இடம் : ஐபோன் 7, இந்த ஸ்மார்ட்போன் வெளிக்கிடும் கதிர்வீச்சின் குறிப்பிட்ட உறிஞ்சுதல் விகிதமானது 1.38 (வாட்ஸ்/கிலோகிராம்) ஆகும்.*

***09-வது இடம்:*** *ஹுவாய் பி9 லைட், சோனி எக்ஸ்பீரியா எக்ஸ்இசெட்1 காம்பாக்ட், இந்த ஸ்மார்ட்போன் வெளிக்கிடும் கதிர்வீச்சின் குறிப்பிட்ட உறிஞ்சுதல் விகிதமானது 1.38 (வாட்ஸ்/கிலோகிராம்) ஆகும்.*

***08-வது இடம்:*** *ஒன்ப்ளஸ் 5, இந்த ஸ்மார்ட்போன் வெளிக்கிடும் கதிர்வீச்சின் குறிப்பிட்ட உறிஞ்சுதல் விகிதமானது 1.39 (வாட்ஸ்/கிலோகிராம்) ஆகும்.*

***07-வது இடம்:*** *ஹுவாய் நோவா ப்ளஸ், இந்த ஸ்மார்ட்போன் வெளிக்கிடும் கதிர்வீச்சின் குறிப்பிட்ட உறிஞ்சுதல் விகிதமானது 1.41 (வாட்ஸ்/கிலோகிராம்) ஆகும்.*

***06-வது இடம்:*** *ஹுவாய் பி9, இந்த ஸ்மார்ட்போன் வெளிக்கிடும் கதிர்வீச்சின் குறிப்பிட்ட உறிஞ்சுதல் விகிதமானது 1.43 (வாட்ஸ்/கிலோகிராம்) ஆகும்.*

***05-வது இடம்:*** *ஹுவாய் ஜிஎக்ஸ்8, இந்த ஸ்மார்ட்போன் வெளிக்கிடும் கதிர்வீச்சின் குறிப்பிட்ட உறிஞ்சுதல் விகிதமானது 1.44 (வாட்ஸ்/கிலோகிராம்) ஆகும்.*

***04-வது இடம்:*** *ஹுவாய் பி9 ப்ளஸ், இந்த ஸ்மார்ட்போன் வெளிக்கிடும் கதிர்வீச்சின் குறிப்பிட்ட உறிஞ்சுதல்விகிதமானது 1.48 (வாட்ஸ்/கிலோகிராம்) ஆகும்.*

***03-வது இடம்:*** *நோக்கியா லோமியா 630, இந்த ஸ்மார்ட்போன் வெளிக்கிடும் கதிர்வீச்சின் குறிப்பிட்ட உறிஞ்சுதல் விகிதமானது 1.51 (வாட்ஸ்/கிலோகிராம்) ஆகும்.*

***02-வது இடம்:*** *ஹுவாய் மேட் 9, இந்த ஸ்மார்ட்போன் வெளிக்கிடும் கதிர்வீச்சின் குறிப்பிட்ட உறிஞ்சுதல் விகிதமானது 1.64 (வாட்ஸ்/கிலோகிராம்) ஆகும்.*

***01-வது இடம்:*** *ஒன்ப்ளஸ் 5டி, பட்டியலில் இடம்பெறும் இரண்டாவது ஒன்ப்ளஸ் ஸ்மார்ட்போன் ஆன இது வெளிக்கிடும் கதிர்வீச்சின் குறிப்பிட்ட உறிஞ்சுதல் விகிதமானது 1.68 (வாட்ஸ்/கிலோகிராம்) ஆகும்.*

*பட்டியலில் 3 ஐபோன்களும், 6 ஹுவாய் ஸ்மார்ட்போன்களை இடம்பெற்றிருப்பது அதிர்ச்சியான புள்ளிவிவரமாகும்.* மேலும் இந்த ஆய்வின்வழியாக ஸ்மார்ட்போன்களால் கதிர்வீச்சு உமிழப்படுவதை கிட்டத்தட்ட உறுதி செய்ய முடிகிறது. இருப்பினும் அச்சம் கொள்ள தேவையில்லை என்று கேட்டுக் கொள்கிறோம். பட்டியலில் உள்ள பெரும்பாலான பிராண்டுகள் மட்டு மின்றி அனைத்து நிறுவனங்களுமே அவற்றின் கருவிகலிருந்து வெளிப்படும் ரேடியேஷன் பரவலைக் குறைக்க முயற்சி செய்து கொண்டே இருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

20-ம் பக்க தொடர்ச்சி...

கொள்ளும் போது, அது சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் வரும்.

திருமணச் சட்டங்கள் தரும் நான்கு உரிமைகள் முக்கியமானவை. ஒன்று, மனைவியை நியாயமற்ற முறையில் கணவன் பிரிந்துவிட்டால், மீண்டும் சேர்ந்து வாழும் வாய்ப்பைக் கோரலாம். இரண்டு, திருமணத்தைக் குறிப்பிட்ட காலம் விலக்கி வைக்கலாம். அதாவது விவாகரத்து வழக்குநடைபெறும் காலம், அல்லது சமாதானம் பேசி மீண்டும் இணைவதற்குத் தரப்படும் காலம். இந்தக் காலத்தில் திருமணத்தினால் உருவாகும் உரிமைகளைக் கோர முடியாது. மூன்றாவது, கணவனும் மனைவியும் பிரிந்துசெல்லும் விவாகரத்து உரிமை. இறுதியாக, ஜீவனாம்சம் கோரும் உரிமை. இந்த நான்கு உரிமைகளும் 'லிவிங் டுகெதர்' வாழ்வில் கிடைக்காது.

குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் 2005ம் ஆண்டு அமலுக்கு வந்தது. இந்தச் சட்டத்தில் ஒரு வரி, 'திருமணம் போன்றதோர் உறவில் சேர்ந்து வாழும் பெண்களுக்கும் இச்சட்டம் பொருந்தும்' எனக் குறிப்பிடுகிறது. இது மட்டுமே லிவிங் டுகெதராக வாழும் பெண்களுக்குப் பாதுகாப்பை வழங்க உதவுகிறது.

உடல்ரீதியாக, உளவியல்ரீதியாக, வார்த்தைகளால், பாலியல்ரீதியாக, பொருளாதாரரீதியாக என ஐந்து விதமாக நிகழ்த்தப்படும் வன்முறைகளிலிருந்து இந்தச் சட்டம் பெண்களைப் பாதுகாக்கிறது. இந்த ஐந்து வன்முறைகளுக்கு எதிராக நீதிமன்றம் செல்லும் உரிமை, லிவிங் டுகெதராக வாழும் பெண்களுக்கும் உண்டு.

## குழந்தைகள் என்ன ஆகும்?

'லிவிங் டுகெதர்' என்ற வார்த்தையே இலங்கைக்கு புதிதுதான். இந்தியாவில் 1975ம் ஆண்டில் நடந்த வழக்கொன்றில், 'பல ஆண்டு காலம் சமூகத்தின் பார்வையில் கணவன் மனைவியாக வாழ்ந்தால், சட்டமும் அவ்வாறே கருத வேண்டும்' என்பதாகக் குறிப்பிட்டார் நீதிபதி. ஆனால் இலங்கையில் 'லிவிங் டுகெதர்' தொடர்பான தெளிவான தீர்ப்புக்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.


ஆனால், குழந்தைகள் விஷயத்தில் சட்டம் தெளிவாக உள்ளது. பெற்றோர் திருமணமானவர்களா, லிவிங் டுகெதராக வாழ்பவர்களா என்றெல்லாம் சட்டம் பிரித்துப் பார்ப்பதில்லை. குழந்தையின் பெற்றோரே அக்குழந்தையின் இயற்கைப் பாதுகாவலர். ஆண் குழந்தை என்றால் 18 வயது வரையிலும், பெண் குழந்தை என்றால் திருமணம் ஆகும்வரை அல்லது வேலைக்குச் செல்லும்வரை அப்பாவிடம் ஜீவனாம்சம் பெறும் உரிமை உண்டு. இந்தப் பாதுகாப்பு 'லிவிங் டுகெதர்' உறவில் பிறக்கும் குழந்தைகளுக்கும் பொருந்தும்.

## திருமணத்துக்காகவே லிவிங் டுகெதர்!

நித்யா கொழும்பில் பொறியியல் துறையில் பணிபுரிகிறார். "மூன்று ஆண்டுகள் பிரசாத்துடன் லிவிங் டுகெதராக வாழ்ந்தேன். ஆனால், 'விரைவில் திருமணம் செய்துகொள்ள வேண்டும்' என்ற நினைப்புடன்தான் சேர்ந்து வாழ்ந்தோம். இணைந்து வீடு வாங்கினோம். மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டது போலவே, கடன்களையும், சுமைகளையும் பகிர்ந்துகொண்டோம். 'சேர்ந்து வாழ்வது சாத்தியமில்லை' என்ற நினைப்பு எங்களுக்குள் ஒருபோதும் வந்ததில்லை. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்ட பிறகுதானே சேர்ந்து வாழ்ந்தோம். சில நாள்களுக்கு முன்புதான் திருமணம் செய்துகொண்டோம். இப்போது எங்களுக்குக் குடும்ப அமைப்புமீது மதிப்பு அதிகமாகி இருக்கிறது" என்கிறார் நித்யா.

சரியில்லாத வெளிநாட்டு உணவைக் கூட நம் மண்ணுக்கு ஏற்றவிதமாக மாற்றிப் பக்குவப்படுத்துவது நம் இயல்பு. உறவுமுறைகளிலும் அப்படித் தான் இருக்கிறது.

மார்கோ போலோ



4

# சென்றதும் வென்றதும்!

நீரால் சூழ்ந்த வெனிஸ் நகரில் இருந்து, நான்கு ஆண்டுகள் சாகசக் கடல் பயணம் செய்து, சீனாவுக்கு வந்தார் மார்க்கோ போலோ. அவரை, பேரரசர் குப்லாய் கான் வரவேற்று, தனது அரண்மனையில் தங்கவைத்திருந்தார்.

ஒரு நாள், தன் தூதுவரை அழைத்த குப்லாய் கான், ஒரு கடிதத்தைக் கொடுத்து, 10 ஊருக்குத் தள்ளியுள்ள அரண்மனையில் சேர்த்துவிட்டு மதியத்துக்குள் வரச் சொன்னார். மார்க்கோ போலோவுக்கு ஆச்சர்யம். அவ்வளவு சீக்கிரம் எப்படி வர முடியும்?

மார்க்கோ போலோ குழப்பம் தெளிவதற்குள் மதியம் ஆகிவிட்டது. தூதரும் திரும்பிவிட்டார். மன்னரிடம் இருந்து கடிதத்தை வாங்கிக்கொண்டு முதல் தூதர் குதிரையில் பாய்ந்து செல்வார். சிறிது தூரம் சென்றதும் அங்கேஇருக்கும்இன்னொருதூதரிடம் சேர்ப்பார். இப்படி, 1,000 மைல் என்றாலும், விரைவில் செய்தியைச் சேர்த்துவிட முடியும்.

இன்னொரு நாள், வாழ்நாளில் முதல் முறையாகக் காகிதத்தில் தயாரிக்கப்பட்ட பணத்தைப் பார்த்து வியந்தார் மார்க்கோ போலோ. ஐரோப்பாவில், 1600ம் ஆண்டு வரை யாரும் காகிதத்தைப் பயன்படுத்தியது இல்லை. பணம் என்றால், நாணயம். ஏதாவது எழுத வேண்டும் என்றால், விலங்கின் தோலைப் பதப்படுத்தி, கீறிக்கீறி எழுதுவார்கள்.

மற்றொரு நாள். பூமியே பிளந்து விடுவதைப் போன்ற ஒரு சத்தம். இரு காதுகளையும் பொத்திக்கொண்டு நடுங்க ஆரம்பித்துவிட்டார் மார்க்கோ போலோ. வானம் கீழே உடைந்து விழுந்துவிட்டது என்றே நினைத்தார். ஆனால், 'பட்டாசு வெடித்தோம், பயப்படாதீர்கள்' என்று சீனர்கள் அவர் முதுகைச் செல்லமாகத் தட்டிக் கொடுத்து சமாதானப்படுத்தினார்கள்.

குப்லாய் கான், பக்கத்து நாட்டின் மீது போர் தொடுக்கப்போகிறார் என்பது தெரிந்ததும், நானும் வருகிறேன் எனக் கிளம்பிவிட்டார். மார்க்கோ போலோவுக்கு தனிக் குதிரை வண்டிஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போதுதான் கவனித்தார். போர் வீரர் மட்டுமல்ல, அவர் அமர்ந்திருந்த குதிரையும் கவசம் அணிந்திருந்தது.

வீரர்கள் பயன்படுத்திய வில், அம்பு ஆயுதங்களும் மார்க்கோ போலோவை மிகவும் கவர்ந்தன. ஐரோப்பாவைவிட, சீன அம்புகள் பல மடங்கு வேகத்துடன் சீறிப் பாய்வதை அவர் உணர்ந்தார்.

பெரிய மரக் கிளைகள், பட்டைகள், சக்கரங்கள் ஆகியவற்றை இணைத்து, பிரமாண்டமான உண்டிக் கோலைத் தயார்செய்து, பெரிய கற்களை வைத்து எதிரிகள் மீது வீசினார்கள். இறந்துபோன விலங்குகளின் உடல்களையும் இப்படி வீசினார்கள். அதிலிருந்து நோய்த் தொற்றும் கிருமிகள் பரவி எதிரிகளை அழித்துவிடுமாம்.

இப்படி, மார்க்கோ போலோ தன் வாழ்நாளின் மிக முக்கியமான பாடங் களைப் பயணங்கள் மூலம் கற்றார். திபெத், பர்மா, ஜப்பான் எனத் தனது பயணத்தைத் தொடர்ந்தார். இந்த ஆசியப் பகுதிகள் அவரை வெகுவாகக் கவர்ந்தன. 1292ல் இந்தியாவை நோக்கி நகரத் தொடங்கினார் மார்க்கோ போலோ.

பெரிய வணிகக் கப்பலில், 300 பேர் உடன் வந்தனர். கோரமண்டல் கரை வழியாக இன்றைய தஞ்சாவூர் பகுதியை அடைந்தார் மார்க்கோ போலோ. அப்போது, ஆட்சியில் இருந்த வர்கள் பாண்டியர்கள். மன்னர்கள், சாமானியர்கள் எனப் பலரும் தயங்காமல் தரையில் அமர்வதைப் பார்த்து, அவரும் அப்படியே அமர்ந் தார்.

தமிழகத்தில் அவருக்குப் பிடிக்காத ஒரு விஷயம், வெயில். பிழியப் பிழிய வியர்வை பொங்குவதையும், தலை முதல் கால் வரை கொளுத்துவதையும் சகித்துக்கொள்ளவே முடியவில்லை. அப்படியே சாம்பலாகிவிடுவோமோ என்று அஞ்சினார். அந்த வெயிலிலும் மன்னர்கள் உடல் முழுக்க, பல ஆபரணங்களை அணிந்திருப்பதைக் கண்டு மயக்கமே வந்தது போலோவுக்கு.

'அரிசி' என்று வெள்ளையாக ஒன்றைக் கையால் அள்ளி எடுத்து, வாயில் போட்டு மெல்வதைப் பார்த்து, தானும் அவ்வாறே செய்துபார்த்தார்.

ஒரு பாத்திரத்தைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு, ஆவென்று வாயைத் திறந்து நீர்வீழ்ச்சி போல வாயில் கொட்டுகிறார்கள். உதடுகளில் படாமல் இப்படித் தூக்கிப் பிடித்துக் குடிப்பது விசித்திரமாக இருக்கிறது. எதற்காக இப்படிச் செய்கிறார்கள் என வியந்தார் மார்க்கோ போலோ.

மனிதனின் தலை அளவு உள்ள பெரிய காய் ஒன்றை எல்லோரும் சாப்பிடுவதைக் கண்டு ரசித்தார். அது தேங்காய்.

இப்படி அவரால் புரிந்துகொள்ள முடியாத பல விநோதங்கள் தமிழகத்தில் இருந்தன. 'வாயில் ஏதோ இலையை மடக்கிப் போட்டு மெல்கிறார்கள். நல்ல சகுனம், கெட்ட சகுனம் என்று சொல்கிறார்கள். மாட்டை வணங்குகிறார்கள். மாட்டின் சாணத்தை வீடு முழுக்கப் பூசுகிறார்கள். ஆண் சாமியோடு சேர்த்து, பெண் சாமிகளும் கோயில்களில் இருக்கின்றன. இரவு நேரங்களில் இந்தக் கடவுள்கள் உயிர்பெற்று எழுந்து உலாவும் எனப் பாடுகிறார்கள். பெரிய இலையைப் பறித்து வந்து, அதில் உணவு சாப்பிடுகிறார்கள்.'

இப்படி, தமிழகம் பற்றிப் பல விஷயங்களை அவரது நூலில் வியப்புடன் குறிப்பிட்டுள்ளார்.

சிலருக்கு அதிசய சக்தி இருப்பதால் 250 ஆண்டுகள் வாழ்கிறார்கள். சில பயமுறுத்தும் விலங்குகள் இருக்கின்றன. அவற்றுக்குச் சிங்கம், சிறுத்தை எனப் பெயர்கள் வைத்திருக்கிறார்கள். சில குரங்குகள் பார்ப்பதற்கு மனிதர்களைப் போலவே இருக் கின்றன. பல வண்ணங்கள் கொண்ட பெரிய பறவை ஒன்று உள்ளது. உலகில் வேறு எங்கும் இல்லாத அந்த அதிசயத்தின் பெயர், 'மயில்' என்று குறிப்பிட்டுள்ளார்.

மார்க்கோ போலோவின் மிகப் பெரிய சாதனை இதுதான். பல இடங்களுக்குத் துணிச்சலாகச் சென்று வந்தார். தான் கண்ட, கேள்விப் பட்ட அத்தனை அதிசயக் கதைகளையும், அற்புதக் காட்சி களையும் விரிவாக எழுதிவைத்தார். எந்தப் புதிய இடத்துக்குப் போனா லும் அந்த இடத்தின் பெயர், அங்கு வசிக்கும் மக்களின் மொழி, நடை உடை பாவனைகள் பற்றி குறித்துக் கொண்டார்.

பிற்காலத்தில், இந்தப் புத்தகத்தைப் படித்துதான் பலர் சீனாவைப் பற்றியும் ஆசியாவைப் பற்றியும் கற்றுக் கொண்டார்கள். அந்த வகையில் மார்க்கோ போலோ, பயணிகளின் பயணி.


வாஸ்கோ ட காமாவைப் போல மார்க்கோ போலோ புதிய கடல் வழித் தடம் எதையும் கண்டுபிடிக்கவில்லை. ஆனால், கொலம்பஸ் தொடங்கி பல பிற்கால மாலுமிகளுக்கு ஒரு வழிகாட்டியாகவும், நம்பிக்கை நட்சத்திரமாகவும் இருந்தார். இரண்டு தெரு தள்ளி எதையும் பார்த்திராத, வெனிஸ் நகரில் இருந்து முதல் நபராக 11,000 மைல் பயணம் மேற்கொண்டு பல நாடுகளுக்குச் சென்று வந்தார்.

மார்க்கோ போலோவின் பயணக் குறிப்புகளைப் படித்த பலர், அதில் வரும் பல விஷயங்களை நம்பவில்லை. கற்பனையில் மட்டுமே இதெல்லாம் நடக்கும், உண்மையில் நீங்கள் இங்கெல்லாம் போனீர்களா, இதையெல்லாம் பார்த்தீர்களா என அவரிடம் ஒருமுறை கேட்டார்களாம்.

70 வயது தாத்தாவாக இருந்த மார்க்கோ போலோ, அவர்களைப் பார்த்து சிரித்தவாறு, "இதில் உள்ள அனைத்தும் உண்மை. நான் பார்த்ததில் பாதியைத்தான் எழுதி இருக்கிறேன். முழுக்க எழுத நேரம் இல்லை." என்றார்.

(பயணம் தொடரும்...)





# புதிரோடு விளையாடு!



1 வண்ண வண்ண வண்ணத்துப்பூச்சி எத்தனை இருக்கு? தேடிப் பிடிச்சு வட்டம் போட்டுக் காட்டு கணக்கு!




4 கொண்டாட்டத்துல நீங்களும் கலந்துக்கலாம்... அதுக்கு முன்னே 10 வித்தியாசங்களைக் கண்டுபிடிக்கலாம்!





2 1 முதல் 74 வரை புள்ளிகளை இணைச்சுக்கோ... யானை அண்ணனை முழுமையாக்கி சவாரி செஞ்சுக்கோ!

5 குட்டி நத்தையின் க்யூட் உடலில் ஒரு பார்ட் மிஸ்ஸிங்... அதைக் கண்டுபிடிச்சுக் காட்டவும்!



## மாணவர் பூங்கா

3 கூட்டம் கூட்டமா பல இனங்கள் இருக்கு... இதுல சிங்கில் சிங்கம் மாதிரி எது இருக்கு?





## விடைகள்:

1




4



3



5 3



# மாய மனிதன் க்ரி:ஃபின் 4

VENU VARIATH ஓவியம்: கே.எஸ்.ரகு தமிழில்: ரமேஷ்








# மாயச் சதுரம்!

| | | | |
|---|---|---|---|
| 22 | 8 | 19 | 98 |
| 80 | 30 | 11 | 26 |
| 25 | 18 | 88 | 16 |
| 20 | 91 | 29 | 7 |

கணிதத்தில் மாயச் சதுரங்கள் பிரபலமானவை. எப்படிக் கூட்டினாலும் ஒரே எண் வரும்படியாக இவை அமைக்கப்படும். கணிதமேதை ராமானுஜன் இப்படி ஒரு மாயச் சதுரத்தை உருவாக்கினார். அவருடைய மாயச் சதுரம் போல நானும் உருவாக்க ஆசைப்பட்டேன். என்னுடைய பிறந்தநாளை (22.8.1998) முதல் வரிசையில் வைத்து, இந்த மாயச் சதுரத்தை உருவாக்கினேன்.

- கீழே சொல்லி இருப்பது போல கூட்டிப் பாருங்கள், மாயச் சதுரத்தின் ஆச்சர்யத்தைத் தெரிந்து கொள்வீர்கள்.
- ஒவ்வொரு வரிசையையும் நீள வாக்கிலும், குறுக்காகவும் கூட்டினால், 147 வரும்.
- இந்தச் சதுரத்தின் மூலை விட்டத்தில் உள்ள எண்களைக் கூட்டினாலும் 147 வரும்.
- முக்கோண வடிவில் குறியிடப்பட்ட எண்களைக் கூட்டினாலும் 147 வரும்.
- வட்ட வடிவில் குறியிடப்பட்ட எண்களைக் கூட்டினாலும் 147 வரும்.
- சதுரத்தின் மையத்தில் இருக்கும் சின்னச் சதுரத்தில் உள்ள நான்கு எண்களைக் கூட்டினாலும் 147 வரும்.
- இதுபோல நீங்களும் உங்கள் பிறந்த நாளை அடிப்படையாக வைத்து மாயச் சதுரத்தை உருவாக்கலாமே!




இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 25.02.2018 அன்று வெளியிடப்பட்டது.